அறிவுச்சுடர் ஏற்றிய

# அவினாசிலிங்கப் பெருந்தகை



பூங்கொடி
பதிப்பகம்

நா.கிருஷ்ணபாரதி ஐ.ஏ.எஸ்.

# அறிவுச் சுடர் ஏற்றிய அவினாசிலிங்கப் பெருந்தகை

நா. கிருஷ்ணபாரதி, ஐ. ஏ. எஸ்.

பூங்கொடி பதிப்பகம்

14 சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004

முதற் பதிப்பு : ஜூலை, 1988

88144
V44136w
M8

விலை ரூ. 12-00

நூலின் பக்கங்கள் = 116
I முதல் XII
நிழற்படங்கள் 18

நூல் வடிவமைப்பு :
பி. எல். ராஜேந்திரன்

அச்சிட்டோர் :
பூங்கொடி அச்சகம்,
சென்னை-600 004.

# முன்னுரை

அதிகாலைப்பொழுது, குருமகராஜ் பகவான் ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சரது அருளூட்டும் திருவுருவப் படத்தின் முன்னர் சுமார் நூற்றிருபது பேர்கள் தூயவெண் கதராடை உடுத்து உள்ளம் உருகத் தோத்திரப் பாடல்களைப் பாடுகின்றனர். அவ்வாறு பாடுகிறவர்கள் பதினோரு வயதிலிருந்து பதினாறு வயது அடைந்த மாணவர்களும், அவர்களது ஆசிரியர்களும். வழிபாடு முடிந்ததும் ஓர் தெய்வீகமான அமைதி. தங்களை மறந்து கண்களை மூடிய நிலையில் அனைவருமே ஒப்பற்ற சக்தியை நினைந்து தியானத்தில் அமருகின்றனர்,

அதன்பின் ஒரு சிறு சலசலப்பு. கிழக்கு முகமாகத் தியானத்திலமர்ந்தவர்கள் தென்புறம் நோக்கித் திரும்பி அமர்கின்றனர். தியானத்தில் ஆழ்ந்து, பின் அருள் நோக்கோடு ஒரு சிறு உருவத்தினர் திருநீறு விளங்க வெள்ளிய கதராடையுடன் அங்குள்ள சிறு மேடையில் அமர்கிறார். மெல்ல தனது கண்ணாடியினைத் துடைத்து அணிந்து கொள்ளுகிறார்.

வரிசையாக அமர்ந்திருக்கும் மாணவர்கள்,ஆசிரியர்கள் அனைவரையும் ஒருமுறை அருள்நோக்கோடு பார்க்கிறார்.

"அப்பா, உங்களையெல்லாம் ரொம்ப நாளைக்குப் பிறகு பார்க்கறதிலே ரொம்ப சந்தோஷம். குருமகராஜ் அருளாலே நீங்களெல்லோரும் தைரியத்தோடும், உற்சாகத் தோடும் இருக்கிறதைப் பார்க்கிறேன். நான் டெல்லியில் மத்திய சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு வருகிற வழியில் வார்தாவில் மகாத்மாவைப் பார்த்துவிட்டு வந்தேன். நீங்கள் கொடுத்தனுப்பிய தேனையும், கதராடை

யையும் அவருக்குக் கொடுத்தேன். இது வித்யாலயக் குழந்தைகள் தேன் கூட்டிலிருந்து எடுத்தது—அவர்களே நூற்று நெய்த கதராடை என்று சொன்ன போது அவர்கள் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்து உங்களுக்கு அவரது ஆசீர்வாதங்களைச் சொன்னார்கள்.

''அவரைப் போல நீங்களும் உயர வேண்டும். அதற்குத் தேவை எல்லையற்ற சக்தி, எல்லையற்ற தைரியம், எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் எதிர்த்து நிற்பேன் என்னும் ஆண்மை இவைகள்தாம். ஒழுக்கம், சத்தியம், அகிம்சை, சேவையுணர்ச்சி இவைகளை நீங்கள் உறுதியோடு பின்பற்றிச் செல்ல சுவாமிஜியும், குருமகராஜும் நமக்கு அருள்பாலிப்பார்கள். ஜெய்குருமகராஜ்.''

என்று வெளியூர் சென்று வரும்போதெல்லாம், உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஆசியுரை வழங்கும் ''எங்கள் ஐயா'' வின் வரலாற்றுச் சிறப்பின் சுருக்கத்தை எழுதுவதை நான் என் வாழ்வின் கிடைத்தற்கரிய பேறாகக் கருதுகிறேன்.

ஐயா அவர்கள் ஓர் மகத்தான அறிவுக் கூடத்தை நிறுவிய பெருமை பெரிதல்ல. இங்கு கற்ற ஒவ்வொரு மாணவரையும் சிறந்த தமிழனாக—இந்தியனாக—ஏன் முழுமைபெற்ற மனிதனாக உருவாக்கவேண்டும் என்பதில் அவர் மேற்கொண்ட ஆர்வத்தை நினைந்து வியக்கிறேன். வாரம் ஒரு முறை ஒவ்வொரு வகுப்பைச் சார்ந்தவர்களையும் அவரது அறைக்கு அழைத்து திருக்குறள், கம்பராமாயணம் போன்ற பல இலக்கியங்களை மாணவர்களது அறிவுத் திறனுக்கேற்ப விளக்குவார்கள். ஒவ்வொருவரும் ஒரு குறளை வகுப்பின் ஆரம்பத்தில் சொல்ல வேண்டும். முந்தைய வாரம் சொன்ன குறளையே திருப்பிச் சொன்னால் உடனே கண்டுபிடித்து

விடுவார். அதே போன்று பொருள் தெரியாது கண்ணை மூடிக்கொண்டு ஒப்புவித்துவிடவும் முடியாது. இப்படி ஒவ்வொரு மாணவனும் ஆறாண்டுக் காலத்தில் 500 குறட்பாக்களையாவது உணர்ந்து கற்றுக்கொள்ளும் வாய்ப்புக் கிடைத்து வந்தது.

அவரது கம்பராமாயண வகுப்புகளும் எப்போது வரும் என்று காத்திருப்போம். அவர் விளக்கிய குகப்படலப் பாடல்களும், யுத்தகாண்டத்தில் கும்ப கர்ணனைப் பற்றிய பாடல்களும் நினைவிலிருந்து நீங்காது. அவ்வப்போது வாழ்வில் வழிகாட்டுபவையாக அவை இருந்து வருகின்றன.

1942 ஆகஸ்டுப் புரட்சி தொடங்கிய ஆண்டில் நான் அங்கு ஆறாவது வகுப்பு மாணவனாகச் சேர்ந்தேன். பம்பாயில் ஆகஸ்டுத் தீர்மானம் ஏற்கப்பட்டதும், அனேகமாக எல்லாத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். ஆனால் ஐயா, அவரது பிள்ளைகளைப் பார்க்க எப்படியோ வித்தியாலயம் வந்து, காந்தியடிகள் பெயரில் ஒரு பயிற்சிப் பள்ளியைத் தொடங்கி வைத்தபின்தான் கைதானார்கள். நான் அங்கு படித்த காலத்தில் பெரும்பாலான பகுதி அவர்கள் சிறையில் இருந்தார்கள். சிறைச்சாலையிலிருந்த அவர்கள் எங்களை வருக்கும் அனுமதி கிடைத்த போதெல்லாம் கடிதம் எழுதிவருவார்கள். நாங்களும் எங்கள் கிறுக்கெழுத்துக்களால் அவருக்குப் பணிவோடு பதில் எழுதுவோம். அவைகள்தாம் அவருக்குச் சிறையில் பெருந்துணையாக இருந்திருக்க வேண்டும். நாட்டுப் பற்றின் ஒரு பகுதியாகச் சிறைக்குள் உடல் நலம் குன்றி தொல்லைப் பட்டுக் கொண்டிருந்தபோதும், நாட்டுப் பற்றின் மறு பகுதியான இளைய தலைமுறையை உருவாக்கும் பணியையும் அங்கிருந்தே செய்து வந்தார்

அவர் என்பதை நினைக்கும் போது மெய்சிலிர்த்துப் போகிறேன்.

எத்தனை மகான்கள், அறிஞர்கள், பெரியவர்கள், தலைவர்கள், கலைப் பெருமக்கள், இந்தக் கல்விக் கூடத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்! சுவாமி விபுலானந்தர், சுவாமி சித்பவாநந்தர் போன்ற ஞானப் பெரியார்கள் - மூதறிஞர் ராஜாஜி, பெருந்தலைவர் காமராஜ், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், வேதாரண்யம் சர்தார் வேதரத்தினம்பிள்ளை, நா. ம ரா. சுப்பராமன் போன்ற அரசியல் தலைவர்கள்—பண்டிதமணி போன்ற இலக்கியச் செல்வர்கள், இசைச் செல்வர்கள் தண்டபாணி தேசிகர், மதுரை மணி, போன்றவர்கள், முன்னாள் மத்திய அமைச்சர் பெருந்தலைவர் திரு. சி. சுப்பிர மணியம் எங்களுக்குப் பேரன்பிற்குரிய ''பொள்ளாச்சி ஐயா'' —அவரது பெரும்பகுதி நாட்கள் வித்யாலயத்தில் தான். அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினராகவும், கோவை நகரசபைத் தலைவராகவும் இருந்த டாக்டர் சி. நஞ்சப்பா, சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த டாக்டர் டி. வி. சிவானந்தம் இப்படி எத்தனையோ அறிஞர் பெருமக்கள் மாணவர்களாக இருந்த எங்கள் உயர்வுக்கு அயராது பாடுபட்டனர். இவர்களை எப்படி இந்த மனிதர் இப்பணிக்கு ஈர்த்திருக்கிறார் என்று நினைக்க நினைக்க வியப்பாக இருக்கிறது.

எங்களுக்குக் கல்வி அளித்த பெரியவர்களை நினைக்கும்போதும் அளவிலாப் பெருமிதம் கொள்ளு கிறேன். பெருங்கவிஞர் மா. ப. பெரியசாமித்தூரன் அவர்கள்தான் எங்கள் தலைமையாசிரியர். காந்தி நினைவு நிதியின் தலைவர் திருவாளர்கள் க. அருணாசலம், பெரும் எழுத்தாளர் சு. குருசாமி, பெருந்தமிழ்ப்புலவர் ப. சு. மணியம், திருவேங்கடாச்சாரி போன்றவர்களும்

தங்களை காந்தியப்பணியில் ஈடுபடுத்திக்கொண்ட ஆசிரியப் பெருமக்கள் — திருவாளர்கள் தி. க. லோகநாதன், அ. வெங்கடாசலம், ஓவியர்கள் கேசவன், அய்யாசாமி, இசை அறிஞர்கள் சிவராமகிருஷ்ண பாகவதர், பின்னர் முக்தானந்த அடிகளாக மாற்றம் பெற்ற முத்தண்ணாச்சி, பட்டாபிராமன் போன்ற பல ஆசிரியர்கள், கலைஞர்கள், எங்களுக்கு எப்போதும் சுவாமி விவேகானந்தரை நினை ஊட்டி வந்த வங்கத் துறவி சுவாமி ஹ்ரிஷிகேசானந்தா ஆகியோர் எங்கள் காலத்து மாணவர்களை உருவாக்கி வந்தனர்.

அங்கு மாணவர்களுக்கென மாணவர்களால் நடத்தப் படும் ஒரு கூட்டுறவு அங்காடியும், வங்கியும் உண்டு. மாணவர்களுக்கென ஓர் கையெழுத்துப் பத்திரிகை "பாலபாரதி" மாதம் ஒருமுறை வெளிவரும். மாணவர் சொற்பேச்சுக்களை வளர்க்க பாரதி மாணவர் மன்றம். இதற்கெல்லாம் மேலாக மாணவர்களுக்கிடையில் சிறு பூசல்கள் எழுந்தால் அவற்றைத் தீர்த்துவைக்க மாணவர் நீதிபதிகளடங்கிய ஓர் வழக்கு மன்றம்... வித்தியாலயம் ஒரு கல்விக்கூடமாக மாத்திரம் இருக்கவில்லை. தொழிற்கல்வி கற்பதற்கென ஓர் நூற்பு நிலையம், நெசவுக் கூடம், தச்சுப் பட்டறை ஆகியவையும் இருந்தன. தற்போது தொழிற் கூடங்கள் பலவும் அங்கு உருவாகியுள்ளன. ஓவியம், இசை, ஆகிய வை பயிலவும் தனிப்பகுதிகள் இயங்கிவந்தன.

மாணவர்கள் உழைப்பின் சிறப்பை உணர்ந்து கொள்ள சமையல் செய்வது தவிர எல்லாப் பணி களையும் செய்துவந்தோம். கூடங்கள், அறைகளைப் பெருக்கிச் சுத்தம் செய்வது, சாக்கடைகள் கழிப்பறை களைக் கழுவுதல். நோயாளிகளைக் கவனித்துக் கொள்ளுதல், தோட்டங்களைப் பராமரித்தல் காய்கறி நறுக்குதல், பாத்திரம் கழுவுதல், உணவு பரிமாறுதல்

இப்படிப் பலவகையான பணிகளை வாரம் ஒருமுறை மாறி மாறி வரும்படி செய்து வருவோம்.

பணிபுரியும்போதும், உணவு உட்கொள்வதற்கு முன்னரும் ஓய்வு நேரங்களிலும் தேவாரம், திருவாசகம், பாரதியாரின் கவிதைகள் ஆகியவற்றை இசையுடன் பாடுவோம். அவ்வப்போது வருகைதரும் அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவுகளும் அறிவுரைகளும் அளிப்பார்கள். இந்தப் பணிகளுடன் வழக்கம்போல் பள்ளிப்பாடங்கள் உண்டு. வகுப்புகள் முடிந்தபின், மாலை நேரங்களில் விவேகானந்தர் இல்லம், தாகூர் இல்லம், ஜவகர் இல்லம், சிவாஜி இல்லம் என மாற்றம் பெற்று பொதுப்பணிகளில் ஈடுபடுவோம்.

சமய விழாக்கள், தேசிய விழாக்கள் போன்றவை என்றால் கொண்டாட்டம்தான். சொற்பொழிவுகள், சிறப்பு வழிபாடுகள் இவற்றுடன் விருந்து உணவும் கிடைக்கும். ஆண்டிற்கொரு முறை அருகிலுள்ள கிராம மக்களனைவரும் ஒருங்கு சேர்ந்து கொண்டாடும் குரு பூஜை ஒரு கோலாகல விழா. கிராமங்களிலிருந்து வரும் கிராமிய நடனக் குழுக்கள், பஜனைப்பாடல்கள் பாடிவரும் குழுக்கள் இவர்களுடன் சமபந்தி. ஆயிரக்கணக்கான மக்கள் உணவருந்த வருவார்கள். அன்று இசை விழாக்கள், இறை வழிபாடுகள், சொற்பொழிவுகள் ஆகியவை மக்களுக்கும் அப்பணிகளில் தொண்டர்களாக ஈடுபடும் எங்களுக்கும் எல்லை இல்லா ஆனந்தப் பெருக்கு.

இவ்வாறு அறிவுப் பெருக்கத்தை வெறும்வகுப்பு அறைகளில் நிறுத்தாமல் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் புகுத்தி மாணவர்களின் உள்ளங்களை ஒழுக்கம், பண்பு சேவையுணர்வு ஆகிய நெறிவழிப்படுத்த இவர் மேற்கொண்டு வரும் அணுகுமுறை வேறெங்கு இருக்க முடியும்? எளிய முறைகளில் உயர்ந்த பண்புகளைப் பின்பற்றும் வழிகளை இங்குதான் காணமுடியும்.

இத்தகைய இடையறாத சிந்தனைப் பெருக்கத்தின் மூலம் அன்றைய எளியதோர் கல்விக்கூடம் இன்று பல கிளைகளுடன் செழித்து ஆலமரமாக விரிந்து கிடக்கிறது. சாதி, மதம், பணம் என்ற எல்லா பேதங்களை யும் மறந்து அருளுணர்வோடு அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளும் சாதனைகளை ஐயா அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள்.

இக் கல்விக் கூடங்களுக்கு வெளியேயும், மொழிக்கும் கல்விக்கும் அவரது சேவைகள் எண்ணிறந்தவை. இந்தியாவின் முதல் கலைக்களஞ்சியமும், தமிழ் வளர்ச்சிக் கழகமும்,குழந்தைகள் கலைக்களஞ்சியமும் கண்டவர் ஐயா. திருக்குறள் சிறாரது உள்ளங்களிலும் படிய வேண்டும்—மனித இனம் மாண்புற ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று இடையறாது பேரறிஞர்கள் துணைகொண்டு திருக்குறள் ஆய்வு கண்டவர் ஐயா. மகாகவி பாரதியின் எழுத்துக்களனைத்தையும் நாட்டுடைமை ஆக்கி மக்களுக்குத ஈந்த பெருந்தகை இவர்தான். தமிழாசிரியர்கட்கு மற்ற ஆசிரியர்கட்கு ஈடான மதிப்பும், ஊதியமும் பணி உயர்வுக்கான வழிமுறைகள் செய்தவரும் இவரே.

ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம், சமுதாய நலன், கல்வி வளர்ச்சி என்ற பல்வேறு துறைகளிலும் சிறப்புப் பெற்றமை மட்டுமின்றி அத்துறைகள் மக்களுக்குப் பயனூட்டுவதாக அமையவேண்டுமென்ற கருத்தில் அவற்றை அடித்தளத்தில் வாழும் மக்களுக்கும் எடுத்துச் சென்று அவர்களது தன்மைகளுக்கேற்ப அளித்த பெருந் தகை ஐயாதான்.அவர்களது ஆர்வம் இந்த எண்பத்தைந்து வயதிலும் குன்றாது சுடர் விடுகிறது. அவரிடம் கற்ற மாணவர்கள் உலக முழுவதிலும் பல்வேறு துறைகளிலும் வல்லுநர்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அவரது பெருமைகளை இன்றைய தலைமுறையினர் அறிந்துகொள்ளுவது அவருக்குப் பெருமை சேர்ப்பதாகும் என்று மட்டுமே நான் கருதவில்லை. அவரது சிறப்புக்கள் மேலும் நம்மை ஊக்குவித்து அவர்கள் வழியில் கொஞ்சமாவது நடக்க உதவாதா என்ற ஆசைதான் இச் சிறுநூல். இந்நூலுக்குத் தேவையான பல கருத்துக்களையும், ஆலோசனைகளையும் அளித்த ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அம்மா டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்களுக்கு எப்படி நன்றி கூறுவதென்றே எனக்குத் தெரியவில்லை.

இந்நூல் இளைஞர் சமுதாயம் ஐயா அவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற பேரார்வத்தில் எழுதப்பட்ட சுருக்கமான முதல் நூல் என்று பணிவோடு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அவர்களின் பல்வேறு சிந்தனைகளையும், பொதுப் பணிச் சிறப்புகளையும் விளக்கும் நூல்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் சீக்கிரமே மேலும் பெறும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அவரால் ஆளாக்கப்பட்ட என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான வித்தியாலய மாணவர்கள் பேரானந்தம் அடையும் வகையில், இன்று, ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் பல்கலைக் கழகத்தின் வேந்தராக உயர்ந்து திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ஐயா.

இப்பணி எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் செய்திருக்க வேண்டும். ஐயாவின் 'Sacred Touch' என்ற ஆங்கில நூலைப்படித்ததும் தமிழ் மக்களுக்கு அவர்களைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு உதவியாக இருந்த நண்பர் திரு பி. எல். ராஜேந்திரனுக்கு எனது நன்றி

என்றும் உண்டு. இந்நூலை மிகவும் அழகிய முறையில் உருவாக்கியளித்த 'பூங்கொடி பதிப்பகம்' திரு வே. சுப்பையா அவர்களையும் நான் நன்றியோடு நினைவு கூறுவேன்.

இந்நூலிற்கு அணிந்துரை அளித்து ஊக்குவித்த சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்களுக்கு உளங் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டுள்ளேன்.

ஐயா அவர்களைப் பற்றிய விஷயங்களை அளித்த நண்பர்கள் அனைவக்கும் நன்றி.

— நா. கிருஷ்ணபாரதி

டாக்டர். ம. பொ. சிவஞானம் சென்னை-9

தலைவர், தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழு. 6-6-1988

# அணிந்துரை

இந்திய விடுதலைப் போரில் கலந்துகொண்டு, தியாகத் தழும்புகள் பெற்ற பெருவீரர்களிலே விரல்விட்டு எண்ணிவிடக் கூடியவர்களே இன்று நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களிலே ''ஐயா'' என்று பெருமதிப்போடு அழைக்கப்படும் கோவை திரு, தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களும் ஒருவராவார்.

அவர் சமீப காலமாக அரசியலிலிருந்து ஓய்வு பெற்று விட்டாலும், சமூகத் தொண்டிலிருந்து ஓய்வு பெற்றா ரில்லை. கோவை நகரத்திற்கு அருகில் உள்ள பெரிய நாய்க்கன் பாளையத்தில் ''ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்யாலயம்'' என்னும் பெயரிலும், கோவை நகரிலேயே ''ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி'' என்னும் பெயரிலும் இரு வேறு கல்வி நிறுவனங்களை அமைத்து அவற்றை வளர்ப்பதற்கென்றே தன்னை அர்ப் பணித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பெரியவரைப்பற்றி திரு. நா. கிருஷ்ண பாரதி ஐ. ஏ. எஸ். அவர்கள் ஒரு நூல் எழுதியிருக்கிறார். ''அறிவுச் சுடர் ஏற்றிய அவினாசிலிங்கப் பெருந்தகை'' என்னும் பெயருடைய அந்நூல் முழுவதையும் படித்தேன்—மகிழ்ந்தேன்!

ஆசிரியர் திரு. நா. கிருஷ்ண பாரதி, தேசிய பாரம்பரியத்தைச் சார்ந்தவராயினும், விடுதலை பெற்ற இந்தியாவிலே தமிழக அரசின் நிர்வாகப் பொறுப்புகளை ஏற்று, நவ பாரதம் படைக்கும் பணியில் மனநிறைவோடு செயல்பட்டு வருகிறார். "ஐயா" அவர்களின் வரலாற்றை எழுத முழுத் தகுதியையும் பெற்றவர் திரு. நா. கிருஷ்ண பாரதி.

இந்நூல் மிகவும் சுருக்கமாக அமைந்திருப்பினும், நூலின் நாயகருடைய வரலாற்றுச் செய்திகள் விடுபட்டுப் போகவில்லை! அவரது விடுதலை ஆர்வம், பாராளுமன்ற அரசியல், கல்வித்தொண்டு, சமயத் தொண்டு ஆகிய அனைத்தும் மிக நல்ல முறையிலே இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன.

திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களை நினைக்கும்போதெல்லாம், இன்றளவும் அரசியல் அலையில் சிக்குண்டு கிடக்கும் யான் வியப்புறுவதுண்டு. திரு. செட்டியார் அவர்கள் நாடு விடுதலை பெறுவதற்குமுன்பே டெல்லி இந்திய சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த சபையைப் போர்க்களமாக்குவதில் காங்கிரசுக்குத் துணை புரிந்தார். நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும், டெல்லி மக்களவையிலும், மாநிலங்களவையிலும் அடுத்தடுத்து அங்கத்தினராக இருந்து பணியாற்றினார்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், பழைய பெரிய சென்னை மாகாணத்தின் முதல் கல்வியமைச்சராக வரும் பேற்றினையும் பெற்றார். அந்தப் பதவியில் அவர் இருந்த காலத்தில் பல்வேறு துறைகளிலும் தமிழுக்குப் புதுவாழ்வு அளிக்க அடித்தளம் அமைத்துக் கொடுத்தார்.

இந்திய மொழிகளிலேயே முதன் முதலாக முழு அளவில் 10 பகுதிகளைக் கொண்ட கலைக் களஞ்சியம் வெளியானது தமிழ் மொழியில்தான்! அது "ஐயா" அவர்களின் தொண்டேயாகும்! "விடுதலைக்குப் பின் தமிழ்

வளர்ந்த வரலாறு'' என்னும் எனது நூலிலே மூன்றில் ஒரு பகுதி, கல்வியமைச்சர் பொறுப்பில் இருந்துகொண்டு திரு அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் ஆற்றிய தொண்டு கள்பற்றி விளக்கியிருக்கிறேன். விடுதலைப் போராட்டக் காலத்திலே அவரும் நானும் வேலூர் சிறைச்சாலையில் சேர்ந்து இருந்து, சிறைத் துன்பங்களை அனுபவித்திருக் கிறோம். அதனாலும் எங்களுடைய நட்பு இழை பிரியாமல் உறுதியாக இருந்து வருகிறது.

திரு, பெரியசாமித் தூரன் அவர்களை அடையாளம் கண்டுபிடித்து நாட்டுக்கு அளித்த பெருமை ''ஐயா'' அவர் களுடையதாகும். அதைப்போலவே கோவை அவினாசி லிங்கம் மனையியல் மகளிர் கல்லூரியை வளர்ப்பதிலேஐயா அவர்களுக்குப் பெருந்துணையாக நிற்கும் டாக்டர் ராஜம் மாள் தேவதாஸ் அவர்களை, கல்வி உலகிற்கு அறிமுகப் படுத்திய பெருமையும் ஐயாவினுடையதாகும்.

ஆர்ப்பாட்டமான அரசியலை விடுத்து, அமைதிகர மான கல்விச் சூழ்நிலையில் தம்மைச் சிறைப்படுத்திக் கொள்வது என்பது எல்லோராலும் முடியக்கூடியதல்ல; ஆனால் ஐயாவால் அது முடிந்திருக்கிறது.

திரு,நா. கிருஷ்ணபாரதி ஐ.ஏ.எஸ். அவர்கள் ஐயாவைப் பற்றி, அவர்கள் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு துறைக்குமாக விளக்கம் தரும் நூல்களைத் தொடர்ந்து எழுதி வெளியிட வேண்டும். அதற்கான முதல் நூலாக இதனை மதித்து, எழுதிய அவரைப் பாராட்டுகிறேன்.

ஐயா அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் ஒரு நூற் றாண்டுக்கு மேலும் வாழ்ந்து நாட்டுக்குத் தொண்டு புரிய இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

அன்பன்,

ம. பொ. சிவஞானம்

# பதிப்புரை

ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த இளைஞர் ஒருவர், விடுதலைப் போராட்டத்தில் ஈர்க்கப் பட்டார். காந்தியவாதியானார். சிறை சென்றார்.

பின்னர், இவர் விடுதலை பெற்ற பாரதத்தில் அப்போதைய சென்னை மாகாணத்தின் கல்வி அமைச்சரானார். இவர் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பல அரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல் படுத்தப்பட்டன.

அந்த இளைஞர்தான், இன்று கோவையில் தன்னால் தோற்றுவிக்கப்பட்டு புகழ் பெற்று விளங்கும் ஸ்ரீ அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் பல்கலைக் கழகத்தோடு ஒன்றிப் புகழோடு வாழ்ந்து வரும் ஐயாதி. சு. அவினாசிலிங்கப் பெருந்தகையாவார்கள். அவர்களுடைய பயன் கருதாப் பொது வாழ்க்கையின் வரலாறுதான் இந்த "அறிவுச்சுடர் ஏற்றிய அவினாசிலிங்கப் பெருந்தகை" என்ற நூலாகும்.

இக்கால இளைஞர் சமுதாயத்தினர் இந்த வரலாற்று நூலைப் படிப்பதன் மூலம் உயர்ந்த பண்புகளைப் பெற்று பயனுள்ள வாழ்க்கையைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை யோடு இந்த நூலை மகிழ்வோடு வெளியிடுகிறோம்.


வே. சுப்பையா

பூங்கொடி பதிப்பகம்



# காணிக்கை

ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயக் கல்வியை முடித்து வெளிவந்ததும், என்னை அன்பால் அரவணைத்து, பரந்த உலகில் வாழ்வாங்கு வாழும் பண்பினை எனக்குக் கற்றுத் தந்த —நண்பராய், நல்லாசானாய், பெருமைமிக்க வழிகாட்டியாய்த் திகழ்ந்து 1987 ஜனவரி 4- ஆம் தேதி இவ்வுலகை விட்டுப் பிரிந்த கோவை திரு, கே. ராஜகோபால் அவர்களுக்கு இந் நூலினைக் காணிக்கையாக்குகிறேன்.



இந்தியப் பிரதமர் அவர்களுடன், அறிவுச்சுடர் ஏற்றிய
அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள்

# 1. அவர் கடன் பணிசெய்வதே!

'தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை'

*—என்கிறார் திருவள்ளுவர்.*

தம்மைவிட உயர்ந்தவரைத் தமது தலைவராக வும் வழிகாட்டியாகவும் கொண்டு அவர் வழி நடப்பது, எல்லா வலிமைகளையும் விடத் தலை சிறந்த வல்லமையாகும் என்பது இக்குறளின் இனிய பொருளாகும்.

அந்த வகையில் புகழ் மிக்கவர்களைப் பற்றி யும், உலகில் சிறந்து விளங்கிய இணையற்றவர் களைப் பற்றியும் முழு விவரமும் அறிந்து கொள் ளுவதானது இன்றைய இளந்தளிர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எதிர்காலம் ஏற்றம்பெற அவர்களைத் தலைமைதாங்கச் செய்வதாக இருக் கும். வருங்காலம் வளம்பெறச்செய்யப் பயன்கருதா மல் அவர்களைப் பாடுபடும்படித் தூண்டுவதாக இருக்கும். தியாகத்தினால் உயர்ந்த சரித்திரப் பெருமையாளர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளும் பொழுது நாமும் அப்படிச் சிறப்படைய வேண்டும்

என்கிற எண்ணம் அதைத் தெரிந்து கொள்ளும் இன்றைய இளைஞர் நெஞ்சிலும் வேர்விடுமல்லவா?

அந்த உயரிய நோக்கமே இந்த நூலினுடைய அடிப்படையாகும். அஸ்திவாரம் வலிமை மிக்க தாக இருக்கும்போது, கட்டிடம் பொலிவுடைய தாகத் திகழும் என்பதில் இரண்டுவிதக் கருத்து களுக்கு இடமில்லைதானே!

அண்ணல் காந்தியடிகள் சிறப்பான விஷயங் களைப் பற்றியே சிந்தித்தார்; அந்தச் சிந்தனை களைச் செயல்படுத்தவே கண் துஞ்சாமல், பசி நோக்காமல் பாடுபட்டார்; தன்னலத்தைவிட பொது நலத்தையே அவர் பெரிதும் கருதினார்; வீட்டுப் பிரச்னைகளை விட, நாட்டுப் பிரச்னை களைத் தீர்ப்பதிலேயே நாட்டம் செலுத்தினார்; மற்றவர்களின் துயர்துடைக்கும் பணியில் ஈடு படும்போது, அதன் காரணமாகத் தனக்கு வரும் துன்பங்களைக் கண்டு அஞ்சினாரில்லை; தெய்வ பக்திகொடுத்த தெம்போடு தியாகத் தழும்புகளை ஏற்றார்; தன்னை இம்சைக்குள்ளாக்க முயன்ற வர்கள் முன்பும் அகிம்சையே வலிமை மிக்கதென வாதாடினார்; அவரது தலைமையை நம்பி ஏற்ற வர்கள் கெட்டதில்லை; நம்பாதவர்கள் மனநிம்மதி யோடு வாழ்ந்ததில்லை.

இத்தகைய இணையற்ற தன்மைகளாலும் பண்புகளாலும்தான், காந்தி—மகாத்மா காந்தி

யானார் என்பதே உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை!

அந்தத் 'தேசப் பிதா'வின் கொள்கைக் கோட் பாடுகளிலே பெரிதும் நம்பிக்கை வைத்து, அன் னாரின் அடியொற்றி நடந்தவர்கள் தமிழ்நாட்டில் பலர் உண்டு; அவர்களில் குறிப்பிடத்தக்க ஒரு பெருந்தகையாளரின் வரலாற்றுப் புகழ்மிக்க வாழ்வை, இந்நூல் மூலம் எடுத்து விளக்குவது இன்றைய குழந்தைகளுக்குப் பயனுடையதாக இருக்கும். இளைஞர்களுக்கு வழிகாட்டுவதாக இருக்கும் தக்கது இது, தகாதது இது எனப் புகல்வதால்—வயோதிகர்க்கு மட்டுமல்ல;அரசியல் ஈடுபாடு கொண்டார்க்கும் ஆற்றல் தரும். துணை நிற்பதாக இருக்கும்.

அந்த அற்புத மனிதரின் வாழ்க்கை வரலாற் றில் இனி நாம் நம் கவனத்தைத் திருப்புவோம்.

மகாத்மா காந்தியடிகளாரைத் 'தலைவர்' என்றழைத்துத் தம் இதயம் பூரிக்கும் அவர், தமது அணுக்கத் தொண்டர்களாலே "ஐயா" என்று அன்புடன் அழைக்கப்பட்டதுண்டு; அழைக்கப் படுவதுண்டு.

இருபது வயது இளமை காலத்திலேயே— ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகா னந்தர், மஹாபுருஷ்ஜி மஹாராஜ் என்றழைக்கப் படும் சுவாமி சிவானந்தா ஆகியோரின் பக்தி மார்க்கமே சக்தி மார்க்கம் என்ற எண்ணம் அவர் நெஞ்சில் ஆழப் பதிந்திருந்தது. நாளடைவில்

மகாத்மா காந்தியடிகளாரின் பெரு முயற்சியால் இந்தியாவில் மூண்ட விடுதலை எழுச்சி அவரை முழுவதுமாக ஆட்கொண்டுவிட்டது.

அரசியல் ஈடுபாடுகொள்ளும் தம் விருப்பத்தை அவர் மிகுந்த பணிவோடு சுவாமி சிவானந்தா விடம் தெரிவித்து அனுமதி வேண்டினார். மக்களுக்குத் தொண்டாற்றுவதும், இறைவனுக்குத் தொண்டு புரிவதும் வெவ்வேறல்ல என்ற கருத்தில் சுவாமிகள் அவரை ஆசீர்வதித்தார். "அச்சத்தை விடு, அன்பு மகனே! நீண்ட நெடுங்காலம் நல முற நம்மோடு வாழ்ந்திருக்கப் போகிற உனக்கு, எமது இதய அன்பும் நல்வாழ்த்தும் எப்போதும் உண்டு. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரை என்றும் எண்ணிச் செயல்படு; அவரிலிருந்து உன்னையோ உன்னிலிருந்து அவரையோ பிரிக்க முடியாதிருக்கையில் உனது செயல்கள் யாவும் வெற்றி பெறும். அவர் அருளாசியால் உன் கொள்கைகளுக்கு உறுதி சேரும்; வெற்றிப் பாதையில் சுவாமிகள் உன்னை வழி நடத்துவார்..." என்றெல்லாம் வாழ்த்தி வழியனுப்பி வைக்கப்பட்ட அவர், அப்போது மட்டுமல்ல; இப்போதும் அவ்வாறே வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வருகிறார்.

மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளுவதற்கல்ல; மற்றவர்களுக்குக் கொடுத்து மகிழ்வதற்கே வாழ்க்கை என்கிற உயரிய நெறிப்படி வாழ்ந்துவரும் இந்த ஒப்பற்ற மனிதரின் உன்னத சேவைகள், நல்லிதயங்களால் பெரி[illegible] மதிக்கப்

யட்டதுண்டு. 1920ல், முதன்முதல் சந்தித்த போதே அண்ணல் காந்தியடிகள் அவரை மனந் திறந்து பாராட்டி மகிழ்ந்தார்.

நாடு நலம் பெறுவதற்காகவும், அடிமை யிருள் விலகி நாமெல்லாம் சுதந்திர ஒளி பெறுவ தற்காகவும் எழுச்சிமயமாக மூண்ட விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டதனாலே 1930, 1932, 1941, 1942 ஆகிய ஆண்டுகளில் அவர் நான்கு முறை சிறைவாசம் சென்றதுண்டு. அப்போ தெல்லாம் கிடைத்த ஓய்வில் கம்பராமாயணத் திலும், திருக்குறளிலும் அவர் மனம் லயித்தது.

துவளாத தொண்டுள்ளத்திற்குச் சொந்தக் காரரான அவர், 1934ல் மத்திய சட்டமன்றத்திற் குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 1951ல் லோக சபை உறுப்பினராகத் தேர்வு பெற்றார். 1957ல் ராஜ்ய சபை உறுப்பினராகிப் பெருமை பெற்றார். 1964ல் மீண்டும் லோக சபைக்கும் சிபாரிசு செய்யப் பட்டார்.

1946ல் அவர் கல்வியமைச்சராக இருந்த காலம், தமிழ் நாட்டின் பொற்காலம் என்றே குறிப்பிடப்படும் அளவுக்குப் பெருமை பல பெற்ற தாகும். ஆம்; அப்போதுதான், தமிழகத்தில் அடிப் படைக் கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட மேநிலைக் கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பண்டிதர்கள் மட்டுமே படித்துப் பரவசப் பட்டுக்கொண்டிருந்த திருக்குறளை இன்றைக்

குப் பாமரரும் கற்றுக் களித்திடும் நிலைமை ஏற் பட்டிருக்கிறதே? அதற்கு முழுமுதல் காரண கர்த்தாவே அவர்தான்! ஆம்; அவர் கல்வியமைச் சராக இருந்த காலத்திலேதான், ஆறாம் வகுப்புப் பாடத் திட்டத்தில் திருக்குறள் சேர்க்கப்பட வேண்டும் என்ற சட்டம் வகுக்கப்பட்டது.

தமிழை முதன்முதலில் நம் பாடமொழியாக் கிய புகழுக்கு உரியவரும் அவர்தான். மகாகவி பார தியாரின் கவிதைகளையும், அவரது படைப்புக் களையும் நாட்டுடைமை ஆக்கி அரசுப் பதிப்பாக முதன்முதல் வெளியிட்ட பெருமையாளரும் அவர் தான்.

தாயாம் தமிழில் உள்ள நம்மைத் தலை சுற்ற வைக்கும் சொற்களுக்கு விளக்கம்பெற 'கலைக் களஞ்சியத்'தைப் புரட்டுகிறோமே? 'குழந்தைகள் கலைக் களஞ்சியத்'தைக் கண்டு குதூகலிக் கிறோமே? அவைகளெல்லாம் உருவாக முதல் விதை ஊன்றியவரே அவர்தான்.

தமிழ் நாட்டில் உள்ள குக்கிராமங்களிலே கூட இன்று நூலக இயக்கம் காலூன்றிக் கவின் பெற்றிருக்கிறதல்லவா? அவர் அரும்பாடுபட்டு வகுத்த நூலகச் சட்டதிட்டங்களே அதற்கெல் லாம் அடிப்படைக் காரணம்.

தன்னுடைய தந்தையார் பெயரிலும், தாயார் பெயரிலும் இரண்டு பாடசாலைகளை நிறுவ

அவர் மேற்கொண்ட முதல் முயற்சி-இன்றும் பல்வேறு கல்விச்சாலைகளை உருவாக்கிக்கொண்டிருக்கிறது தீண்டாமையின் வேரறுக்கப் பாடுபட்ட மகாத்மா காந்தியடிகள் அடிக்கல் நாட்ட, அவர் உருவாக்கிய 'ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம்', கோவை மாவட்டத்தில் உள்ள பெரியநாய்க்கன் பாளையத்தில் இப்போதும் ஒப்பற்ற ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.

அதைத் தொடர்ந்து உருவான கலைக் கல்லூரி, அறிவியல் கல்லூரி உடற்பயிற்சிக் கல்லூரி, தொழில்பயிற்சிக் கல்லூரி, வேளாண்மைக் கழகம்-ஆகிய பலவும் அவர் புகழைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற தேசிய கவி பாரதியின் வாக்கை மெய்ப்பிக்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சி மகத்தானது.கோவையில் உள்ள மகளிர் மனை இயல் கல்லூரி அதற்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக் காட்டு.

கிராமப்புற வளர்ச்சி கருதி அவர் தோற்றுவித்த விவேகானந்தாபுரம் மையம் நூற்றுக்கணக்கான கிராமங்களை அரவணைத்து ஆக்கம் பெறச் செய்து வருவது, உலகறிந்த உண்மையாகும்.

இப்படிப்பட்ட-இன்னும் ஏராளமான இணையற்ற சேவைகளுக்காக, புகழத்தகுந்த புனிதத்

தொண்டுகளுக்காக இந்திய அரசு அவருக்குப் 'பத்மபூஷன்' விருது வழங்கிப் பாராட்டியது. தமிழ்நாடுஅரசு 'செந்தமிழ்ச் செல்வர்', 'தமிழ்ச் செம்மல்' விருதுகளை வழங்கிச் சிறப்பித்தது. தமிழ்ப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் அளித்துப் பெருமை கொண்டது. 'ஜம்னாலால் பஜாஜ் விருது'ம் அந்த சரித்திர புருஷருக்குத் தந்து சிறப்பிக்கப்பட்டது.

—இவ்வளவு அரிய சிறப்புகளுக்கெல்லாம் உரியவரே நம் நூலின் நாயகர்.

யார் —அந்த—'அவர்'?

இதுவரை நாம் குறிப்பிட்ட சாதனைகளையெல்லாம் படைத்த கற்றறிவாளர் வேறு யாருமல்ல; திருப்பூரில் பிறந்து தேசாபிமானத்தோடு வளர்ந்து, திசை யெட்டும் புகழ்ந்து போற்ற 8ാ-ஆம் ஆண்டு பிறந்த நாள் (5-5-1988) விழாக் கண்ட பெரியவர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்களே நாம் இதுவரை இங்கே குறிப்பிட்ட அந்த அவர்!

## 2. நல்லதொரு குடும்பம்

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'

—என்ற குறளுக்குச் சான்றேபோலத் தோன்றிப் புகழ்பெற்றவர்தான் ஐயா திரு. தி. சு. அவினாசிலிங்கப் பெருந்தகை.

தமிழ்நாட்டில், 'ஏழைகளின் நீலகிரி' எனப்படுவது கோயம்புத்தூர். அந்நகரைத் தலைமையிடமாகக் கொண்ட கோவை மாவட்டத்தில், திருப்பூர் ஒரு சாதாரணமான ஊர். அந்த ஊர் இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் கொடி காத்த குமரனால் குறிப்பிடத்தக்க இடம் பெற்றது. ஆனால் குமரன் பிறந்த ஊரல்ல அது. சென்னிமலையிலே பிறந்த குமரனுக்குச் சிறப்புச் சேர்த்த அந்த திருப்பூரில்தான், 5-5-1903-ல் திருவாளர் கே. சுப்பிரமணியம் செட்டியார்—திருமதி பழனியம்மாள் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் நமது மரியாதைக்குரிய அவினாசிலிங்கனார்.

தந்தையார், தலைசிறந்த வியாபாரி; வங்கியொன்றும் வைத்திருந்தார். தாயார், ஆன்மீக

தெய்வீகங்களின்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். மனிதாபிமானம் மிக்கவர்.

அவர்களுடைய குடும்பம, திருப்பூரிலேயே மிகப் பெரிய கூட்டுக் குடும்பமாக விளங்கியது. வாழ்ந்த வீடுதான் ஒன்றே தவிர, நான்கு பெருங் குடும்பங்கள் அதில் இணைந்து வாழ்ந்தன. நான்கு குடும்பங்களுக்கும் நான்கு தனித்தனி அறைகள் அந்த வீட்டில் இருந்தன. ஆனாலும் பிள்ளைகள் எல்லாம் நீண்டு பரந்த தாழ்வாரத்தில்தான் சேர்ந்து உறங்கித் தங்கள் தோழமையை நிலைத்திருக்கச் செய்தனர்.

வயதான அத்தைமார்களைச் சுற்றியே எப்போதும் அந்தக் குழந்தைகள் காணப்படும். காரணம்-அலுக்காமல் கொள்ளாமல் அவர்கள் அந்தச் சின்ன அரும்புகளுக்கு சிரித்த முகத்தோடு கதை பல சொல்லி மகிழ்விப்பார்கள். இராமாயணம், மகாபாரதம், பக்திவிஜயம், பெரிய புராணம், விக்கிரமாதித்தன் கதை போன்றவைகளெல்லாம் அந்த வீட்டில் எல்லோருமே தெரிந்து கொண்டிருந்த இதிகாசங்கள்.

மிகப் பெரிய கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்த காரணத்தால்-மற்றவர்களை மதித்து நடப்பது, பல்வேறு குணமுள்ளவர்களோடு பக்குவமாகப் பழகுவது, அடுத்தவர்களை அனுசரித்துப் போவது, மற்றவர்களின் தேவை-விருப்பம் போன்றவற்றை சிக்கலின்றி நிறைவேற்றி வைப்

பது, அனைவரிடமும் அன்பு பாராட்டுவது போன்ற, பண்புரீதியான பலவிதப் பயிற்சிகளையும் இளமைக் காலத்திலேயே பெற்றுக்கொள்ள முடிந்தது. எல்லாக் குடும்பங்களிலும் போலச் சின்னச்சின்ன சச்சரவுகளும் எப்போதாவது அக் குடும்பத்தில் தலைதூக்கும். பெரியவர்கள் குறுக் கீட்டால் அவை வந்த வேகத்திலேயே நீங்கும், இவைகளெல்லாம், சிறுவர்களாயிருந்த அவினாசி லிங்கம் அவர்களை இளமையிலேயே அனுபவ முதிர்ச்சி பெற்றவராக்கியது.

பெரியவர்களெல்லாம் நல்ல சம்பாத்தியம் உடையவர்களாக இருந்த காரணத்தால், அந்த இல்லம் எப்போதும் ஆனந்த இல்லமாக விளங்கியது என்பதையும் இங்கே நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அருள்மிகு அவிநாசி கோயிலின் அன்றாட பூஜை அந்தக் குடும்பச் செலவிலேதான் நடக்கும். அவிநாசி, பேரூர், திருமுருகன்பூண்டி, திருப்பூர் போன்ற இடங்களில் எல்லாம் அக்குடும்பத் தாரின் முன்னோர்கள் பக்தகோடிகளின் வசதி கருதிப் பல சத்திரம் சாவடிகள் கட்டி வைத்திருக் கிறார்கள். அவை இன்றும் பல்லாயிரக் கணக் கான யாத்திரிகர்களுக்கு உதவுகின்றன.

அந்தப் பெரிய குடும்பத்தின் தலைவரான திரு. கே. சுப்பிரமணியன் செட்டியார், எவரானாலும் இன்முகத்தோடு பழகும் சுபாவம் கொண்டவ

ராக இருந்தார். எந்தப் பிரச்னையானாலும் அவசரப்படாமல் அமைதியான அணுகுமுறையி லேயே அதைத் தீர்த்து வைக்கும் இயல்பினரா யிருந்த அவர், பிள்ளைகளிடத்தும் பேரன்பு காட்டுவார். அதே நேரத்தில், பிள்ளைகள் செய்த தவறைக் கண்டித்துத் திருத்துவதிலும் கருத்தா யிருந்தார். காரணம-ஐந்தில் வளையாததை ஐம்ப தில் வளைக்க முடியுமோ?

உதாரணத்திற்கு அந்தக் குடும்ப நிகழ்ச்சி ஒன்றை, அதை விளக்கும் வகையில் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

அவர்கள் வீட்டில் வெங்கடாசலம் என்றோர் வேலையாள் இருந்தான். அவனைப் பெரியவர்கள் எல்லோரும் பெயர் சொல்லியே கூப்பிடுவது வழக் கம். சிறுவனாயிருந்த அவினாசிலிங்கம ஒரு நாள் அவனை அப்படிப் பெயர் சொல்லிக் கூப் பிடுவதைக் கவனித்தார் தந்தையார். கண்டிப் பான குரலில் மகனை அழைத்தார். "வெங்கடா சலம் உன்னைவிட சின்னவனா? நீ எப்படிப் பெயர்சொல்லிக் கூப்பிடலாம்? இனிமேல் அவனை நீ அண்ணா என்றுதான் அழைக்க வேண்டும், தெரியுமோ?'' என்றாரே பார்க்கலாம்; அடுத்த நிமி ஷமே சிறுவன் அவனாசிலிங்கம் பெட்டிப் பாம் பாக அடங்கிவிட்டார். அன்றுமுதல் வெங்கடா சலம் 'அண்ணா' என்றே அவரால் அழைக்கப் பட்டான்.

நான்கு ஆண்கள், நான்கு பெண்களைப் பெற்றிருந்த போதிலும் தாய் பழனியம்மாளுக்கு அன்பு மகன் அவினாசிலிங்கம் மீதே அலாதிப் பிரியம். ஆஸ்துமா நோயால் பீடிக்கப்பட்டிருந்த அந்த அம்மையார், அவ்வப்போது நோய் வேகம் தாளமுடியாமல் படுத்த படுக்கையாகிவிடுவார். அப்போதும் கூட வீட்டு வேலைகளைத் தானே சிரமத்தோடு செய்து முடித்தால்தான் அவருக்கு நிம்மதிப்படும்.

தமது வீட்டுக்கு அருகாமையில் இருந்த சிவன்கோயிலுக்கு, நாள்தோறும் மாலை வேளையில் சென்று விளக்கேற்றி வைத்து மனமார வழிபடுவது அந்த அம்மையாருக்கு வழக்கம். அப்படிச் செல்லும்போதெல்லாம் அன்பு மகன் அவினாசிலிங்கத்தை உடனழைத்துச்செல்லுவார். உடம்பு முடியாமல், கோயிலுக்குப் போக முடியாதநிலை நேர்ந்தால், தனது அருந்தவச்செல்வன் அவினாசிலிங்கத்திடமே எண்ணெய் கொடுத்து கோயிலுக்குப் போய் விளக்கேற்றிவிட்டு வரச் செய்வார்.

ஏழை எளியவர்களிடம் மிகவும் இரக்கச் சிந்தை உடையவர் அந்த அம்மையார். பஞ்சம் பசி என்று எவர் வந்தாலும் சரி, தாராளமாக உதவ அவர் தயங்கியதே இல்லை. ''இளகிய மனம் உள்ளவள் நீ என்பதாலேயே இப்படி உன்னைச் சிலர் ஏமாற்றுகிறார்கள்'' என்று எச்சரிப்பார் திருவாளர் சுப்பிரமணியம் செட்டியார். ''எப்

படியோ போகட்டும்; இல்லாத கொடுமையால் தானே நம்மிடம் வருகிறார்கள்!" என்று சொல்லி விடுவார் திருமதி பழனியம்மாள்.

சிறுவன் அவினாசிலிங்கம் வாலிபனாகி படிப்பு நிமித்தம் கோயம்புத்தூருக்கும், அதன் பின் சென்னை மாநகருக்கும் போக நேர்ந்தது. லீவு நாட்களில் தவறாமல் சொந்த ஊருக்கு வந்து விடுவார். அப்படி வரும்போதெல்லாம் அவர் தாயார் அவரை அன்பொழுக அருகே அழைத்து அமாத்திக்கொண்டு பரிவுடன் விசாரிப்பார். அந்த ஊர்களைப் பற்றித் தான் அறிந்தவைகளைச் சொல்லி மகிழ்வார். அவர் அறிந்தவற்றைக் கேட்டுக் களிப்பார்.

ஐயா அவினாசிலிங்கம் அவர்களின் மூத்த சகோதரரான திரு. டி. எஸ். கந்தசாமி சில காலம் கோவையிலும் பின்னர் சென்னை மாநிலக் கல்லூரியிலும் படித்து முடித்துவிட்டு, ஊருக்கே வந்து சேர்ந்து, தம் குடும்பத் தொழிலில் தந்தையாருக்கு உதவியாக இருக்கலானார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் பக்திநெறியிலும், மகாத்மா காந்தியடிகளாரின் அறவழியிலும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டிருந்தவர் அவர். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின பக்தி மார்க்கம், சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவுச் சிறப்பு, அண்ணல் காந்தியடிகளாரின் அகிம்சா வழி ஆகியவை பற்றியெல்லாம் முதன் முதலாக அண்ணன் மூலம்தான்

கேட்டு மனம் நெகிழ்ந்தார் தம்பி அவினாசிலிங்கம். பிற்காலத்தில் அவர் பக்தி நெறியில் பக்குவப்படக் காரணமாக அமைந்த ஒரு முக்கிய முதல்கட்ட வாழ்க்கை நிகழ்ச்சியாகும் அது.

திரு. டி. எஸ் திருஞான சம்பந்தம் என்பவர் மற்றொரு சகோதரர்; கோவையிலிருந்த அக்குடும்பத்திற்குச் சொந்தமான நிலபுலன்கள், மேலான இவருடைய நிர்வாகத்திலேயே இருந்தன.

அடுத்த சகோதரர் பெயர் டி. எஸ் தண்டபாணி. கடைசிவரை பிரமமச்சாரியாகவே இருந்துவிட்ட இவர்தான், பிற்காலத்தில் ஐயா அவினாசிலிங்கம் அவர்கள் உருவாக்கிய கல்விக் கழகங்களைக் கவனித்துக்கொள்பவராகத் தம் வாழ்க்கைப் பாதையை வகைபட அமைத்துக் கொண்டார்.

இப்படி, பலரும் இணைந்திருந்த அந்தக் குடும்பம் பலவகைப் பண்புகளின் நிலைக்களனாக ஊரார் மெச்ச உயர்வோடு திகழ்ந்தது. அத்தனை பேர்களுக்கும் இடையேயிருந்த ஒற்றுமை, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலராலும் அதிசயம்போல் பேசப்பட்டது.

'புலிக்குப் பிறந்தது பூனையாகுமா' என்கிற அளவில் நமது நூலின் நாயகர் திரு. தி. சு. அவினாசிலிங்கம் விளங்கக் காரணமே பண்பட்ட அந்தக் குடும்பப் பல்கலைக் கழகம்தான் என்றே நாம் சொல்லலாம்.

# 3. மாணவப் பருவம்

'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்'

என்ற திருக்குறளுக்கு ஒப்ப தமக்கும் தமது குடும்பத்தாருக்கும் அந்நாளில் உதவிபுரிந்தவர்களையும், உதவியாக இருந்தவர்களையும் மிகுந்த நன்றியோடு இப்போதும் நினைவு கூர்வது, பெரியவர் அவினாசிலிங்கம் அவர்களின் இயல்பாகும். அவர்களெல்லாம் எப்போதாவது சிறிதளவேகூட உதவியிருக்கக் கூடும்; அதைக் கடல் அளவாய்ச் சொல்லிப் பெருமை கொள்வார் அவர்.

ஐயா அவர்கள் சின்ன வயதில் இருந்த காலத்தில், அந்தக் குடும்ப நலனில் அக்கரையோடு இருந்தவர்களைப் பற்றி நாமும் இங்கே எண்ணிப் பார்ப்பது நல்லது. ஏனென்றால், அவர்களின் உயர்வுக்கு அந்தப் பெரியவர்களும் ஒவ்வொரு விதத்தில் காரணமாக இருந்து உதவியிருக்கிறார்களே!

இங்கே நாம் குறிப்பிடப்போகிற அவர்கள் கடமைக்காக மாத்திரம் அன்பு காட்டி

யவர்களோ, பெயரளவில் உதவியவர்களோ அல்ல; உளப்பூர்வமாக உறுதுணையாயிருந்து அந்தக் குடும்ப மேன்மைக்காக அருமபாடுபட்டவர்கள்; அணுக்கத் துணையாயிருந்தவர்கள்.

அப்படிப்பட்டவர்களில் முதலாவதாக நம்மால் பாராட்டப்படுபவர் ஐயாவின் உறவினரான திரு. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்களாவார். பலவகை ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்றிருந்த பெரிய மனிதர் அவர். திருப்பூரிலும் பின்னர் கோவையிலும் பிரசித்தி பெற்ற வழக்கறிஞராக இருந்த அவர், பொது வாழ்வில் மேற்கொண்ட அரிய பணிகளால் அனைவராலும் பாராட்டத்தக்கவராக வாழ்ந்தார்.

கோவை நகராட்சி மன்றத் தலைவராகவும், பிறகு, மாவட்ட மன்றத் (DISTRICT BOARD) தலைவராகவும் புகழோடு பொறுப்பேற்றுப் பணிபுரிந்தவர் மட்டுமல்ல; அவர், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும் அங்கம் வகித்திருக்கிறார்; அதன் பின், நாடாளுமன்றத் தேர்தலிலே வேட்பாளராக நின்று, போட்டியில்லாமலே தேர்ந்தெடுக்கப்பட்டார். அறுபதாவது வயதில் தம் வழக்கறிஞர் தொழிலை விட்டு ஓய்வு பெற்ற அவர், கூட்டுறவு இயக்கத்தைச் சிறப்புற உருவாக்க அரும்பாடுபட்டு. அதன் காரணமாகவே 'கூட்டுறவு இயக்கத்தின் தந்தை' என்று போற்றவும் பட்டார்.

இத்தகு சிறப்பினரான வழக்கறிஞர் திரு. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார் அவர்களிடம் தான், கோவையில் முதன்முதலாக ஜூனியராக இருந்து பயிற்சி மேற்கொண்டார் நம்முடைய ஐயா, அவினாசிலிங்கனார் அவர்கள். இவர் மீது பெற்ற மகன்மேல் காட்டுமளவுக்குப் பெரும்பாசம் காட்டி, மிகுந்த அக்கறையோடு சட்டதிட்ட நுணுக்கங்களையெல்லாம் கற்பித்து வந்தார் அவர். "வாதத் திறமையை மட்டுமல்ல; தேசிய ஒருமைப்பாட்டு உணர்வோடு பொது வாழ்வில் ஈடுபாடு கொள்ளும் வழிமுறைகளையும் அவரிடம் தான் நான் ஆரம்பகாலத்தில் கற்றேன்" என்று ஐயா அவர்களே சொல்லிக் கொள்ளுவதுண்டு.

ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தை நிர்மாணிக்க எண்ணியபோது, அவரே அதற்கான சிறந்த பல ஆலோசனைகளையும் ஊக்கத்தையும் தைரியத்தையும் ஐயா அவர்களுக்கு அளித்த பெருமைக்குரியவராவார். அவர்களுடைய குடும்பத்திற்கும் அவர் மிகவும் உதவிகரமாக இருந்திருக்கிறார்.

இந்தவகையில், அடுத்து நாம் நினைவு கூரத் தக்கவர் திரு. பி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர். அவர் ஓர் உறவினரல்லர் என்றாலும், உறவினர்களுக்கெல்லாம் மேலாக அந்தக் குடும்பத்தோடு நெருங்கியிருந்து நலம் சோக்கப் பாடுபட்டவராவார். வெள்ளாள கவுண்டர் சமூகத்தில் அப்

போது அவர் முடிசூடா மன்னராகவே விளங்கினார். கோவை மாவட்டத்தில், அவரை அறியாதவாகள் இருக்கமுடியாது.

'பள்ளிப்படிப்பு புள்ளிக்குதவாது' என்ற கருத்துடையவர் திரு. வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர். ஆனால், பொதுவாழ்வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால், அவர் பெற்றிருந்த அனுபவரீதியான அறிவு அளவிடற்கரிய தாகும். அந்தஅனுபவ அறிவே அவரைமாவட்டக் கழகத் தலைவராகவும், பின்னர், தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினராகவும், மத்திய அரசால் அமைக்கப்பட்ட மாநிலங்கள் குழு அங்கத்தினராகவும் பங்கு வகித்து உயரச் செய்தது.

எப்போதும் கதராடையே அணியும் தலை சிறந்த காந்தியவாதியான திரு. வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள், அண்ணல் காந்தியார் அறிவித்த அறப்போர்களில் ஈடுபட்டவர். குறிப்பாக—கள்ளுக்கடை மறியல் போராட்டத்தின் போது, தனக்கேற்பட்ட ஏராளமான நட்டத்தையும் பொருட்படுத்தாமல், தம்முடைய மிகப் பெரிய தென்னந் தோப்பையும் குத்தகைக்கு விட மறுத்துவிட்டார் அவர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

திருவாளர் அவினாசிலிங்கம் அவர்கள் மீது அபரிமிதமான அன்பு செலுத்தி வந்த அவர்தான்

அரசியல் பிரவேசத்தின் போது சந்திக்க நேர்ந்த லாப நட்டங்களிலும் கூட, ஐயா அவர்களுக்கு உற்ற துணையாக இருந்தவர். ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம் கட்டுமானப் பணிகளின் போதும், அவ்வப்போது வந்து மேற்பார்வை யிட்டு அந்தப் பணி சிறக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சி எண்ணி இறும்பூதெய்தத் தக்க தாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தின் ஒப்பற்ற வளர்ச்சியைப் பொருத்த மட்டில், ஐயா அவர்களால் மறக்க முடியாத சிறப்புக்குரிய இன் னொருவர் திரு. டி. எஸ். கல்யாணசுந்தரம் அவர் கள். உடன் பிறந்த சகோதரபாசத்தோடு ஐயா அவினாசிலிங்கம் அவர்களிடம் நெருங்கியிருந்த அவரது தாயார், தமது இரண்டாவது மகன் போலவே கருதி இவர்மீதும் பாசமழை பொழிந்து பாதுகாத்தவராவா

''ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சிக்கும் திரு. டி எஸ். கல்யாணசுந்தரத்திற்கும் அவரது அன்புத் தாயாருக்கும் பங்குண்டு'' என்று ஐயா அவர்களே பெருமகிழ்வோடு உளப்பூர்வமாகக் குறிப்பிடுவ துண்டு.

திருப்பூர் ஆரம்பப் பள்ளியில் நமது அவினாசிலிங்கப் பெருமகனார் படித்துவந்த

காலத்தில், அவருக்கு அறிவுக்கண் திறக்கப் பெருமுயற்சி மேற்கொண்டு பிரசித்தி பெற்றவர் திரு. வெங்கட சுப்பிரமணிய ஐயர் என்ற ஆசிரியர். அந்தக் காலத்தில், அவருக்கு மாதச் சம்பளம் ஆறே ஆறு ரூபாய்தான்! அந்தக் குறைந்த வருவாயிலும் கூட நிறைந்த முயற்சி யோடு பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்த அவரது பெருந்தன்மை குறிப்பிட்டுப் புகழத்தக்க தாகும்.

மாணவப் பருவத்திலிருந்த நம் ஐயா மீது அவரது கல்வி மேன்மை காரணமாகப் பேரன்பு செலுத்திவந்தவர் அந்த ஆசிரியர். கல்லூரிக்குப் படிக்க வந்துவிட்ட பிறகும் கூட, எப்போதாவது ஊருக்குப் போக நேரும்போதெல்லாம் அந்த ஆசிரியரைப் போய்ப்பார்த்து, காலைத்தொட்டு வணங்கி ஆசிபெறுவதை வாடிக்கை வழக்கமாகக் கொண்டிருந்தவர் நமது ஐயா அவர்கள் ஆவார்.

ஐந்தாம் வகுப்பு வரை திருப்பூரில் படித்து முடித்தபின், அதற்கு மேல் கோயம்புத்தூர் லண்டன் மிஷன் உயர்நிலைப்பள்ளியில் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டார் வாலிபத்தை எட்டிப் பிடித்த திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள். அங்கே படித்த காலத்தில், அவரது நெஞ்சில் பசுமை மாறாத நினைவாகப் பதிந்த பண்புமிக்க ஆசிரியர்களையும் இங்கே நாம் பெருமையோடு சொல்லியாக வேண்டும்.

திரு. சத்தியவாகீஸ்வர ஐயர், திரு. ராமையர், தமிழாசிரியர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை, தலைமையாசிரியர் திரு தேவசகாயம் ஆகியோர் அவர்களில் சுட்டிக் காட்டத்தக்க சிறப்புடையவர் களாவார்கள்.

சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரி யில், ஐயா அவினாசிலிங்கம் அவர்கள் படித்த காலத்தில், அவர்களால் மறக்கமுடியாத அள விற்குக் கற்பித்த பேராசிரியர்கள் சிலர் இருந் தனர். திரு சி.எஸ். சீனிவாசாச்சாரியார், கல்லூரி முதல்வர் திரு. எம். ரத்தினசாமி இருவரும் அவர் களில் முக்கியமானவர்கள் ஆவார்கள்.

சென்னைமாநகரில், கல்லூரியில் படித்து வந்தபோது நம்முடைய ஐயா அவர்கள் மூன்றாண்டுக் காலம் விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கியிருந்தார். அதன்பின், தன்னு டைய தங்குதலைப் பச்சையப்பன் கல்லூரி மாணவர் விடுதிக்கு மாற்றிக் கொண்டார். சட்டப் படிப்பு முடிக்கிறவரை அதே விடுதியில் தான் தங்கிப் படித்து வந்தார்.

சென்னையில், கல்லூரியில் படித்து வந்த காலத்தில், விக்டோரியா மாணவர் விடுதியில் தங்கியிருந்தபோதுதான், அவரது அறை நண்ப ராக வந்து வாய்த்தார் அன்பே உருவான திரு. சின்னு அவர்கள். திரு. சின்னு அவர்கள் யார்

தெரிகிறதா? அவர்கள்தான் பின்னர் சுவாமி சித்பவானந்தா என்று பக்த கோடிகளால் மதித்துப் போற்றப்பட்டவர்!

ஒய்வு கிடைக்கும்போதெல்லாம் இருவரு மாகச் சேர்ந்து மயிலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ண மடத்திற்குச் செல்லுவார்கள். மகாபுருஷ்ஜி மகராஜ் போன்ற பெரியோர்களின் சொற்பொழிவுகளை ஆழ்ந்த கவனத்தோடு கேட்டு நெஞ்சம் நெகிழ்வார்கள். அவர்களுடைய மனம் புனிதச் சிந்தனைகளின் புகலிடமாகும்.

பிற்காலத்தில் திரு. சின்னு அவர்கள் சுவாமி சித்பவானந்தாவாகி, திருச்சிராப்பள்ளிக்கு அருகே இராமகிருஷ்ண தபோவனத்தை உருவாக்கினார்.

அவர்களுடைய இன்னொரு இனிய நண்ப ரான கேரளத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் நம்பியார் அவர்கள், பின்னர் சுவாமி அகமானந்தா வாகி, சங்கராச்சாரியார் பிறந்த மண்ணான காலடியில் இராமகிருஷ்ண அத்வைத ஆஸ்ர மத்தை நிர்மாணித்தார்.

பக்திமார்க்கத்தில் இணைந்து சென்ற அந்த அருமை நண்பர்களின் புனிதத் திருப்பங்களே, நம் ஐபா அவர்களின் ஆன்மீக நெஞ்சத்தில் ஸ்ரீராமகிருஷ்ணா வித்தியாலயத்தைத் தோற்று விக்கவேண்டும் என்கிற முதல் எண்ணத்திற்கு மூல வித்திட்டது.

சட்டப்படிப்பை முடித்துவிட்டு கோவைக்குச் சென்று வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கினார் என்றாலும் நம் ஐயா அவர்களின் மனம் அதில் லயிக்கவில்லை. அத்வைதச் சிந்தனைகளின்அடிப் படையிலான பக்திமார்க்கம்; இயலாதவர்களின் மேன்மைக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணிக்கத் தயாராகும் தியாகம் ஆகியவை பற்றியே அனு தினமும் அவரது சிந்தனை இருந்தது.

அதன் முடிவு?

சுவாமி சித்பவானந்தா, மகா புருஷ்ஜி மகராஜ், சுவாமி யதீஸ்வரானந்தா ஆகியோரின் நல்லாசிகளோடு- ஆதரவற்றிருக்கும் மாணவர் களுக்கான இல்லம் ஒன்றை 1930 பிப்ரவரி 3-ஆம் தேதியன்று துவக்கினார் நமது அவினாசிலிங்கப் பெருந்தகை. "ஜாதி மதங்களைப் பாரோம்" என்ற மகாகவி பாரதியின் வாக்கை மெய்ப்பிக்கும் விதத் தில் அந்த இல்லத்தின் முதல் மாணவனாக ஓர் அரிசன மாணவன் சேர்த்துக் கொள்ளப் பட்டான்.

## 4. படிப்பறிவும் பக்தி நெறியும்

'கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அ ரெனின்'

—என்ற குறளின் மூலம்

பரமன் அருளைப் பெறாத பட்சத்தில், படிப்பினால் மட்டுமே எந்தப் பயனும் பெற்றுவிட முடியாது என்ற பேருண்மை நமக்கு உணர்த்தப் பட்டுள்ளது.

இந்த உலகப் பொதுமறைக்கேற்பத் தமது வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்ட பெருமையாளர் நம்முடைய ஐயா திரு. தி. சு. அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள்.

நூல்பல கற்றவர் நாம் என்ற கர்வம் யாராலும் அவரிடம் காண முடியாதது; பக்தி ஒளி தெறிக்கும் பார்வையும் எவரோடும் இனிய சொல்லோடு உரையாடும் பணிவும் எல்லோராலும் அவரிடம் காணமுடிந்தது. இதற்குக் காரணம்— இளமையிலேயே அவரது இளம் நெஞ்சைக் கல்வியறிவோடு ஆக்கிரமித்த தெய்வ பக்திதான்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சுவாமி விவேகானந்தரைக் கவர்ந்தார். அது போல் அந்த

இருவருடைய கடவுள் கொள்கைகளும், கனிவான உபதேசங்களும் நம் ஐயாவைக் கவர்ந்துவிட்டன. சென்னையம் பதியில், 1921ல் பி. ஏ. படித்துக் கொண்டிருந்த பதினெட்டாம் வயதிலேயே அவர் பக்திப் பழமானார். அடிக்கடி இராமகிஷ்ணா மடத்திற்குச் செல்லுவதும், சுவாமி பிரம் மானந்தா, சுவாமி சிவானந்தா போன்ற இறைவனடியார்களின் சமயச் சொற்பொழிவு களை உளமாரச் செவிமடுப்பதுமாகவும் இருந்த அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களின் உள்ளம் தெய்வீகத்தன்மை பெற்றதில் யாருக்கும் வியப்பிருக்க முடியாது.

VA4136w M8

தமதுள்ளக் கோயிலில் குடிகொண்ட கடவுள் தொண்டர்களைக் கண்டுபேசி மன அமைதி பெறு வதற்காக, ஐயா அவர்கள் அடிக்கடி வட இந்திய யாத்திரைகள் மேற்கொண்டதும் உண்டு. சுவாமி விவேகானந்தர் எழுதிய 'சன்னியாசியின் பக்திப் பாடல்கள்' (Song of Sannyasin) அத்தனையும் அவருக்கு மனப்பாடம்.

சுவாமி சிவானந்தரின் (மகா புருஷ்ஜி மக ராஜ்) ஆன்மீக வாழ்க்கைச் சம்பவங்கள் பல தனக்குப் பாடமாயின என்று ஐயா அவர்கள் பெருமையோடு சொல்லிக் கொள்ளுவார். அதற்கு எடுத்துக் காட்டாக ஒரு உண்மைச் சம்பவத்தை இங்கே விளக்குவது பொருத்தமாக இருக்கும்.

உடல் நலிவு காரணமாகக் கூனூரில் தங்கி யிருந்த சுவாமி சிவானந்தரைப் பார்த்து

ADU LIB
88144



வருவதற்காக, நமது ஐயா அவினாசிலிங்கர் அவர்கள் ஒருமுறை சென்றிருந்தார். சுவாமிகள் அவரை அன்போடு வரவேற்று அருளோடு உபசரித்தார். அவரைப் போலவே சாமான்யர் களும், செல்வந்தர்களும் அங்கே ஏராளமான அள வில் வந்து சுவாமிகளிடம் ஆசிபெற்றுச் சென்ற வண்ணம் இருந்தார்கள். 88144

அப்படி அங்கு வந்த கனவான் ஒருவர், சுவாமிகளுக்கு விலைமதிப்பற்ற அழகிய சால்வை ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார் அதை அன் புடன் பெற்றுக்கொண்டார் சுவாமி சிவானந்தர்; ஒரு சிறுவனுக்குள்ள ஆர்வத்தோடு உடனே அந் தச் சால்வையைப் பிரித்துப் பார்த்தார் ''அடடா, பிரமாதம்! உயர்ந்தரகம்! அற்புதமான வேலைப் பாடு!'' என்றெல்லாம் ரசித்துப் பாராட்டினார். அதைக் கொண்டு வந்து கொடுத்தவரும் மிகுந்த மன நிறைவோடு வணங்கிவிட்டுச் சென்றார்.

அடுத்து சிறிது நேரத்தில், நாள் தவறாமல் சுவாமிகளிடம் வந்து வணங்கி ஆசிபெற்றுச் செல்லும் சாதாரணக் குடும்பத்துச் சிறுமி யொருத்தி அங்கே வந்து சேர்ந்தாள். தெய்வீகப் பாடல்களை உளமுருகப் பாடினாள். சுவாமிகளி டம் ஆசி பெற்றாள். அதன் பிறகு, அவர் அருகே இருந்த சால்வையை, வைத்த கண் எடுக்காமல் பூரிப்புடன் மலர்ந்த விழிகளால் பார்த்தாள். எப் போதுமே குழந்தைகளிடம் தனி அன்பு காட்டக் கூடியவரான சுவாமி சிவானந்தர், அந்தச் சிறுமி

யின் மனோநிலையைப் புரிந்து கொண்டவராக ''என்னம்மா குழந்தாய்! இது உனக்கு வேண்டுமா?'' என்று அவளை அருகே அழைத்துப் பரிவோடு கேட்டார்.

வியப்பால் கண்களை அகல விரித்த அந்தச் சிறுமி ''ஆமாம் சுவாமி!'' என்றாள் ஆனந்த மிகுதியோடு.

உடனேயே சுவாமி சிவானந்தர் நகைபூத்த முகத்தோடு சால்வையை எடுத்து அந்தச் சிறுமியின் தோளில் விரித்துப் போட்டு, ''இதை நீயே எடுத்துக் கொள்ளலாம்'' என்றார். அளவற்ற மகிழ்ச்சி கொண்ட அவள், மீண்டும் அவரை வணங்கிவிட்டு மான்போல் துள்ளியோடினாள்.

இந்தச் சம்பவத்தை அதிசயம்போல் பார்த்துக் கொண்டிருந்த நமது ஐயாவின் ஆன்மீக இதயத்தில் அப்போது தோன்றியது இதுதான்—மனிதர்கள் பிறப்பார்கள்; இறப்பார்கள். பணம் சேரும்; செலவாகும். பொருள்கள் வாங்கப்படலாம்; திரும்பக் கொடுக்கப் படலாம். ஆனால் கடவுள் எப்போதும் எங்கும் நிறைந்திருப்பார். எல்லோரையும், எதையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய குழந்தை வடிவில், அன்பு வடிவில் ஆத்மார்த்த மயமாக இருக்கும் அவனன்றி ஓர் அணுவும் அசையாது!

சுவாமி சிவானந்தரின் ஆசி பெறாமல், அவரிடம் ஆலோசனை கலக்காமல் நம் ஐயா அவர்கள்

எத்த ஒரு நல்ல காரியத்தையும் தொடங்கியதே இல்லை. வசதியற்ற குடும்பத்தைச் சேர்ந்த ஏழை எளிய மாணவர்கள் கல்வி பெறச் செய்வதற்காக ஸ்ரீராமகிருஷ்ணா வித்யாலயத்தை துவக்கும் எண்ணமும் அப்படித்தான் சுவாமிகளிடம் முதன் முதல் கலந்து பேசப்பட்டது. 1929-ஆம் ஆண்டு நவம்பர் 29ல், அந்த நல்ல பணிக்கு ஆசிவழங்கி சுவாமிகள் கடிதம் எழுதினார். அதற்கு அடுத்த ஆண்டே, அதாவது 1930 பிப்ரவரி 3ல் மிகச் சிறப்பாக உருவாக்கித் திறந்து வைக்கப்பட்ட அந்த ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம், இன்றைய தினம் இந்தியாவின் தலைசிறந்த கல்விக் கூடங்களில் ஒன்றாகத் திகழ்கிறது

புண்ணிய பூமியான இந்திய நாட்டைச் சூழ்ந்திருக்கும் மடமை இருள் நீங்க வேண்டும்; எங்கும் ஞானஒளி பரவவேண்டும்; அடிமை இருள் விலக வேண்டும்; சுதந்திர தீபம் சுடர் வீச வேண்டும் என்பதே சுவாமி விவேகானந்தரின் போதனைகளின் மையக்கருத்தாக இருந்தது அவர் காலத்தில் ஈடேறாத அந்த பெரு விருப்பத்தை ஈடேற்றவே மகாத்மா காந்தியடிகள் அவதரித்தார் என்பது மகாபுருஷ்ஜி மகராஜ் எனப் போற்றப்பட்ட சுவாமி சிவானந்தரின் தீர்க்கமான கணிப்பாகும். அந்த காரணத்தாலேதான் அவர் நம் ஐயா அவர்கள் சுதந்திரப் போரில் ஈடுபட்டு வெற்றிகாண வாழ்த்தி அகநிறைவோடு அனுமதியளித்தார்.

சுவாமி சிவானந்தரையே நம் அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள் ஸ்ரீராமகிருஷ்ண பரம

ஹம்சராகக் கண்டார்; சுவாமி விவேகானந்தராக மதித்துப் போற்றினார். ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகிய அறச் சிந்தனையாளர்களின் அரிய உபதேசங்கள், சொற்பொழிவுகளின் தொகுப்பு நூல்கள் ஆகிய வைகளை மட்டுமல்ல;அந்த மகான்களைப் பற்றிச் சகோதரி நிவேதிதா, பிரஞ்சு நாட்டு மேதை ரோமன் ரோலண்ட் ஆகியோர் அற்புதமாக உரு வாக்கிய எழுத்தோவியங்களையும் தொடர்ந்து படித்துத் தம்முடைய மனதில் தூய்மை சேர்த்துக் கொண்டவர்தான் ஐயா அவினாசி லிங்கம் அவர்கள்

சுவாமி விவேகானந்தர் தொடர்பாக அவர் படித்த முதலாவது புத்தகம் 'கொழும்பு முதல் அல்மோரா வரையிலான ஆன்மீகச் சொற்பொழி வுகள்' என்பதாகும். அதையொட்டி வெளிவந்த ஏழு பெரிய தொகுப்பு நூல்களையும்கூட ஒரே மூச்சில் அவர் படித்து முடித்தார். "அப்படிப் பட்ட நூலகளைப் படிப்பது, எனக்கு மட்டில்லாத மன அமைதி அளிப்பதாக இருக்கிறது" என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொள்ளுவது ஐயா வின் வழக்கம்—பண்பு.

"காட்சிக்கு எளியவராக, கடுஞ்சொல் அற்ற வராக, உண்மையின் உருவமாக, எவரையும் துன்புறுத்தாதவராக, யாரைப் பற்றியும் வித்தி யாசமான முறையில் விமர்சிக்காதவராக, மனத் தூய்மை நிரம்பியவராக, எவரானாலும் மதிப்பவ

ராக பக்திமார்க்கத்தைத் தானறிந்தால் போதும் என்றில்லாமல் மற்றவர்க்கும் போதிப்பவராக இருந்த ர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்; அத னாலேதான் அவரை நான் பின்பற்றினேன்'' என் கிறார்-சுவாமி விவேகானந்தர்.

அருள்நெறி பரப்பும் அவாமிகக் கொண்ட அவினாசிலிங்கப் பெருந்தகை, அன்றும் சரி; இன் றும் சரி; சுத்த சைவம் தான். அந்த மகான்கள் இருவரையும் பின்பற்றி நடப்பதால் தான் ஐயா அவினாசிலிங்கம் அவர்களும் ந்த உயர் குணங் களின் உறைவிடமாக விளங்குகிறார்; குன்றின் மேலிட்ட விளக்காகச் சுடர் விடுகிறார்.

# 5. வித்யாலயத் தோற்றமும் வளர்ச்சியும்

'ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை'

என்கிற திருக்குறளானது, முயற்சியுடையவர்கள் ஊக்கத்தோடு ஈடுபடும் எந்த ஒரு காரியத்திலும் எப்போதுமே இகழ்ச்சி அடைவதில்லை; புகழ் அவர்களைத் தேடிவந்து சேரும் என்கிற கருத்தின் கருவூலமாகும்.

இந்தக் குறளின் மேலான பொருளுக்கேற்பவே நம் ஐயா தி. சு. அவின சிலிங்கப் பெருந்தகை அவர்களின் ஒவ்வொரு வாழ்க்கைச் சம்பவங்களும் நடைபெற்றன.

எந்த ஒருபணியானாலும், தமக்குச் சரியென்றுபட்டாலன்றி —அதன் மூலம் பலபேர் பயன்பெற முடியும் என்று தெரிந்தாலன்றி அதைச் செய்து முடிப்பது பற்றி அவர் தீர்மானிக்கவே மாட்டார். அதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க அதன்பின் சுவாமி சிவனந்தாவிடம் அருளாசி பெறுவார்; இதற்கெல்லாம் பிறகே அப்பணியில் முழுமூச்சுடன் முயல்வார்: வெற்றியுடன் செய்து முடித்துச் சிந்தை குளிர்வார்.

பொன்விழாக் கண்டு பொலிவுற்றுத் திகழ்கின்ற ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம் உருவான விதமே இதற்குப் போதுமான சான்றாக அமையும்.

சுவாமி சிவானந்தரின் நல்வாழ்த்தோடு நிறுவப்பட்ட ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயம் 3-2-1930ல், மாலை 6-30 மணிக்கு மிக எளிமையான முறையில் திறப்புவிழா நடத்தப்பட்டு துவக்கிவைக்கப்பட்டது. வித்யாலயம் முதன் முதல் உருவானது, ஐயா அவர்களின் குடும்பத்திற்குச் சொந்தமான ஒரு சாதாரண ஓட்டு வீட்டில்தான். அந்தத் திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? ஐயா அவர்களையும் சேர்த்துப் பன்னிரண்டே பேர்தான்!

சென்னை இராமகிருஷ்ணா மடத்தின் தலைவராக இருந்த சுவாமி யதீஸ்வரானந்தா அவ்விழாவின் முக்கிய விருந்தினர். மற்றும் ஐயா அவர்களின் உறவினரான திரு. டி. ஏ. இராமலிங்கம் செட்டியார், திரு. வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர், திரு. ஆர். இராமகிருஷ்ணன், திரு. டி. எஸ். கல்யாணசுந்தரம், திரு. குண்டு பணிக்கர், திரு. சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார், கோவைக் கிழார் திரு. சி. எம். இராமச்சந்திர செட்டியார், நம் ஐயா அவர்கள், முதல் மாண

வனாக அந்த வித்யாலயாத்தில் சேரவிருந்த அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு சிறுவன் ஆகியோர் அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஸ்ரீ குருமகராஜ், சுவாமிஜி, மகாபுருஷ்ஜி மகராஜ் ஆகியவர்களின் திருவுருவப் படங்கள் அங்கே அமைக்கப்பட்ட அழகிய சிறு பீடத்தில் வைத்து அலங்கரிக்கப் பட்டிருந்தன. தியானத்தில் மனம் ஒன்றி மலர் தூவி, ஐயா அவர்களே பூஜை நடத்தினார். பிறகு ஐயா அவர்களும் சுவாமி யதீஸ்வரானந்தாவும் சேர்ந்து பிரார்த்தனைக் கீதம் இசைத்தனர்.

இலவச உணவு, இலவசத் தங்குமிடம், இலவச உடை, இலவசப் புத்தகங்கள்- நோட்டுப் புத்தகங்கள், விடுமுறை நாட்களில் பிள்ளைகள் தம் சொந்த ஊருக்குப் போய்வரப் பணம் எல்லாம் அளிக்கப்படும் என்று அறிவித்தும்கூட, ஏழை எளிய குடும்பத்தார் அதில் தம் குழந்தைகளைச் சேர்ப்பதில் ஆர்வமில்லாதவர்களாகவே இருந்தார்கள். ஏன் தெரியுமா? முதன் முதலாக ஒரு அரிசன வகுப்பு மாணவனைச் சேர்த்துக் கொண்டது தான் காரணம் என்பது பின்னால்தான் தெரிந்தது.

ஆனால், ஐயா அவினாசிலிங்கம் அவர்கள் அதற்காகச் சிறிதளவும் கவலைப்படவில்லை. வெளிப்படையாக அதுபற்றிப் பேசியவர்களிடம கூட "ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமமே" என்று சொல்லிவிட்டார்.

நாளடைவில், வித்தியாலயத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான நிதிபற்றிய பிரச்சினை வந்தது.

ஐயா அவர்களின் குடும்பம் வசதிமிக்க குடும்பம்தான். மற்றவர்களுக்குத்தான் அள்ளி அள்ளித் தந்தார்களே தவிர, எதற்காகவும் பிறரிடம் கடன் வாங்க வேண்டிய நிலைமை அந்தக் குடும்பத்திற்கு இருந்ததே இல்லை. சென்னையில் படிக்கிற காலத்தில் கூட தன்னோடு படிக்கிற வசதியற்ற மாணவர்களுக்குப் பொருளுதவி செய்வது ஐயா அவர்களின் பழக்கம். ஆனால் வித்யாலயம ஒரு தனிப்பட்ட பொது அமைப்பு அல்லவா?

வித்யாலயத்தை நடத்துவதில் நம் ஐயா அவர்களுக்கிருந்த ஆர்வம் நாளடைவில் ஊர் மக்களால் கவனிக்கப்பட்டது. தாமாகவே அதன் வளர்ச்சிக்குப் பொருளுதவி செய்யச் சிலர் பெரிய மனதுடன் முன்வந்தார்கள்.

ஐயாவின் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில், அவரது தந்தையாரின் அன்பு நண்பர் திரு, சி. வி. வெரிவாட செட்டியார் என்பார், முதன் முதலாக ரூ. 100 அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். இவ்வாறான அன்பளிப்புகள் அதைத் தொடர்ந்து அவ்வப்போது வந்து கொண்டிருந்தன. ஆனால் வித்யாலயத்தின் வளர்ச்சிக்கு அதெல்லாம் போதுமானதாக இல்லை. வித்யாலயத்தின் விரிவாக்கத்திற்காக நிரந்தர நிதி ஒன்று

ஏற்படுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது. அதற்கென ரசீது புத்தகங்கள் அச்சிடப் பட்டன.

மகனின் பொதுநல ஆர்வமும் முயற்சிகளும் தந்தையாரைக் கவர்ந்தன. ஐயா அவர்களின் தந்தையார் திரு. கே. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் அன்போடு மகனை அழைத்து ரூ.10,001 ஐத் தமது நிதியாகக் கொடுத்தார். எடுத்த காரி யத்தில் வெற்றிபெற இதயபூர்வமாக வாழ்த்தி னார். அதைத் தொடர்ந்து பொதுமக்களிடம் நிதி வசூலிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிதி வசூலில் ஐயா தி. சு. அவினாசி லிங்கம் அவர்களோடு, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு, சி. சுப்பிரமணியம் அவர்களும் ஆர்வத்தோடு தாமே முன் வந்து கலந்துகொண் டார். ஒரு கல்விச்சாலையை மேம்பட உருவாக்கு வதில் அவர்கள் காட்டிய ஆர்வத்தைக் கண்டு தம்மால் இயன்ற அளவில் பலரும் நிதியுதவி செய்தனர். வசதிமிக்க ஒரு சிலர் அவர்களை வசைபாடியும் அனுப்பி வைத்தனர். கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு கடமையே கண்ணானார் நம் ஐயா.

பிற்காலத்தில் — வித்யாலயப் பள்ளியைத் தலைமை தாங்கி நிர்வகித்து, நல்ல முறையில் நடத்திச் செல்ல, தகுதியான ஒருவர் தேவைப்பட் டார். அந்தத் தேவையை நிறைவு செயவது

போலத் திரு. மா. ப. பெரியசாமி அவர்கள் அங்கு வந்து சேர்ந்தார். தமிழ்க் கவிஞரும், பட்டதாரியும், குணநலன்கள் நிரம்பியவருமான அவர், கோபிசெட்டிப்பாளையத்தில் தாம் பார்த்து வந்த வேலையை ராஜினாமா செய்து விட்டு வந்து வித்யாலயத்தின் முதலாவது தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதையடுத்து — மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. அருணாசலம் அங்கே வேலைக்கு வந்தார். பட்டதாரியும், சிறந்த காந்தியவாதியுமான அவர், வித்யாலயத்தின் ஆரம்பப் பள்ளித் தலைமையாசிரியரானார்.

அவருக்குப் பிறகு வித்யாலயத்தில் வேலை பார்க்க வந்தவர் திரு. கே. வெங்கடாசலம். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் உயர் உபதேசங்களில் ஈடுபாடு கொண்டவரான அவர், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களின் உறவினராவார்.

பிரபல விடுதலைப் போராட்ட வீரரும் மதுரை காந்தி என்று அழைக்கப்பட்டவருமான திரு. என். எம். ஆர். சுப்பராமன் வித்யாலயத்தின் வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். காங்கிரஸ் கட்சியின் தலைவராக மூதறிஞர் ராஜாஜி இருந்த காலத்தில், பொருளாளராக இருந்தவர் அவர். வித்யாலய நிர்வாகக் குழுவின்

முதல் தலைவராக அவரே தன் வாழ்நாள் முழுதும் பொறுப்பேற்றிருந்தார்.

வித்யாலயத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகையோடு இணைந்து நின்று அரும்பாடு பட்டவர்களில் அவரது ஒன்றுவிட்ட சகோதரர் திரு. டி. எஸ். கல்யாண சுந்தரம் மிகவும் முக்கியமானவராவார். அவருடைய மறைவு (1952) அந்நிறுவனத்தைச் சேர்ந்த அனைவரையுமே கதறியழச் செய்வதாக இருந்தது. அப்படிப்பட்ட செயல் வீரர் அவர்.

இதற்கெல்லாம் முன்பாக நாம் சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். வித்யாலயம் ஆரம்பிக்கப்பட்ட சில நாட்களில் புதிதாக நான்கு மாணவர்கள் கொண்டு வந்து சேர்க்கப் பட்டார்கள். இதுபோன்ற நல்ல நேரத்தில்தான், ஐயா அவர்களின் நெஞ்சில் கனன்று கொண்டிருந்த விடுதலை வேட்கை கொழுந்துவிட்டெரிவது போலாயிற்று ஒரு நிகழ்ச்சியால். மகாத்மா காந்தியடிகள், சுதந்திரப் போரில் ஈடுபட எல்லோரும் அணிதிரளும்படி ஓங்கிக் குரல் கொடுத்தார்.

ஐயா தி.சு. அவினாசிலிங்கப் பெருந்தகைக்கு இருந்த நாட்டுப்பற்றின் காரணமாக அவருக்கு உண்டான விடுதலை எழுச்சி, ஆங்கில ஏகாதி

பத்திய அதிகாரிகளால் மிக எளிதில் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டது. அதன் விளைவாக 1930 ஜூலை, 4-ஆம் தேதியன்று கைது செய்யப் பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார் நம் ஐயா அவர்கள்.

சிறைக்குச் சென்றபின், வித்யாலயத்தின் நிலைமை என்னவாகுமோ என்று ஐயா அவினாசி லிங்கம் அவர்கள் நெஞ்சம் கலங்கினார். மாவட் டக் கல்வி அதிகாரியாக இருந்தவரும், வித்யால யத்தின் துவக்க விழாவில் கலந்து கொண்டவரு மான திரு. ஆர். இராமகிருஷ்ணன், ஒருநாள் அவ ரைப் பார்க்க வந்தவர் "வித்யாலயம் பற்றிய கவலை வேண்டாம், நான் போய்க் கவனித்துக் கொள்கிறேன்" என்று தைரியம் சொன்னார். சொன்னது போலவே போய்க் கவனித் துப் பார்த்துக் கொள்ளவும் செய்தார். அவர் மூலம் வித்யாலயத்தின் அன்றாட நடவடிக்கைகள் முறைப்படி நடப்பதாக அவ்வப்போது ஐயா அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பது சிறையானாலும், வித்யாலயம் நல்லபடி நடக் கிறது என்ற நிம்மதி அவருக்குப் புதுத் தெம்ப ளிப்பதாக இருந்தது.

டிசம்பர் மாதம் விடுதலை பெற்று வெளிவந்த ஐயா தி. சு. அவினாசிலிங்கப் பெருந்தகை அவர் களுக்கு, மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதி வசதியோடு கூடிய மிகப்பெரிய கல்விக்கூடமாக வித்யாலயத்தை விரிவாக்கும் ஆசை மேம்பட்டது.

அதற்காகத் திரு.வி.சி. வெள்ளியங்கிரி கவுண்டர், மேட்டுப்பாளையம் ரோட்டில் தனக்குச் சொந்தமாக இருந்த 4 ஏக்கர் நிலத்தை வாடகை இல்லாமலே கொடுத்து உதவினார். அங்கு ஏற்கெனவே இருந்த கட்டிடத்தில் சிறப்பாக உருவாக்கப்பட்ட ஆஸ்ரமப் பள்ளிக்கு மக்கள் ஆதரவு நிறைய இருந்தது. மிக விரைவிலேயே 49 பிள்ளைகள் அதில் வந்து சேர்ந்துவிட்டார்கள்.

அந்த நேரத்திலும் ஐயா அவர்கள் ஒரு மிகப் பெரும் சோதனையைச் சந்திக்கும்படி நேர்ந்துவிட்டது. இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டுப் பேச்சு வார்த்தை தோல்வியடைந்து, திரும்பி வந்த மகாத்மா காந்தியடிகள் செய்த சுதந்திரப் போராட்ட அறிவிப்பின் காரணமாக, அப்போது கோவை மாவட்டக் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த நம் ஐயா அவர்கள், மீண்டும் கைதானார். நல்ல வேளையாக அதற்குச் சில நாட்களுக்குமுன் அங்கு வந்து சேர்ந்த ஸ்ரீ தருமகராஜ் பக்தர் திரு. மாணிக்கசாமி முதலியார் என்பவர், 1933ல் ஐயா விடுதலையாகி வரும் வரை அந்தக் கல்விச்சாலைப் பராமரிப்பைத் தாமே ஏற்றுத் திறம்படச் செய்து வரலானார்.

ஊருக்கு வெளியே அந்த ஆஸ்ரமப் பள்ளி அமைந்திருந்த இடத்தின் சுற்றுப்புறம் காடானதால், அங்கே அடிக்கடி பாம்புகளின் நடமாட்டம் இருந்தது. மாணவர்களே பாம்புகளைப் பிடிப்பார்கள் அல்லது அடிப்பார்கள். இதனால் ஏதா

வது அவர்களுக்கு விபரீதம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் விடுதி நடத்த வேறு இடம் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஐயா அவர்களின் நல்ல உள்ளத்திற்கு மிக விரைவிலேயே கோவையிலிருந்து பதினோராவது மைலில், பெரியநாய்க்கன் பாளையத்தில், கல்விக் கழகம் அமைப்பதற்காக ஒரு நல்ல இடம் இனாமாகவே கிடைத்தது. திரு. என். இராமகிருஷ்ண நாயுடு, திரு. ஆர். இராமகிருஷ்ணநாயுடு என்பார் இருவர், அங்கே தமக்குச் சொந்தமாக இருந்த 14 ஏக்கர் நிலத்தைத் தானமாகவே மனமுவந்து அளித்தார்கள்.

முதலில் அவ்விடத்தில் சாதாரணமான அளவில் துவக்கப்பட்டாலும், மிகச் சிறப்பாக நடத்தப்பட்ட வித்யாலயத்தின் ஆண்டறிக்கை 1933ல் வெளியிடப்பட்டது. 1934 பிப்ரவரி 7-ஆம் தேதி யன்று, ராமகிருஷ்ண வித்யாலயத்தின் முக்கியக் கட்டிடத்திற்கு மகாத்மா காந்தியடிகளே வருகை தந்து அடிக்கல் நாட்டினார். ஐயா அவர்களின் தியாக நெஞ்சம் மகிழ்ச்சியில் திளைத்தது.

ராமகிருஷ்ணா மிஷன் தலைமையகமே அதற்காக வாழ்த்துத் தந்தி அனுப்பியிருந்ததைக் கண்டு ஐயா அவர்கள் பெரிதும் அகமகிழ்ந்தார்.

1935 ஜனவரி 7ஆம் தேதியன்று, இராமகிருஷ்ணா மிஷன் நிர்வாகக் குழு அனுப்பியிருந்த

இன்னொரு செய்தி அளித்த மகிழ்ச்சி, அதை யெல்லாம்விடக் கொண்டாடத்தக்கதாக இருந்தது.

'ஐயா அவர்களின் வித்யாலயத்தை, இராம கிருஷ்ணா மிஷன் தமது கிளைப் பள்ளிகளின் முக்கிய மையமாக அங்கீகரித்து ஏற்றுக் கொள் கிறது. அதன் செயலாளராகத் திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்களே பொறுப்பு வகிப்பார்' —என்பதே அந்த இனிக்கும் செய்தியாகும்.

# 6. ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி

'மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்'

—என்பார் திருவள்ளுவர்.

மனையறத்திற்கு உரியதான நல்ல குணங்களும், நல்ல நடத்தைகளும், நல்ல பண்புகளும் ஒரு பெண்மணிக்கு அவசியம் தேவை. அப்படி அவைகளெல்லாம் அமையப் பெறாதவள் எந்தக் குடும்பத்தில் இருந்தாலும் சரி; அந்தக் குடும்பம் எவ்வளவு வசதிமிக்கதாக இருந்தாலும் ஒன்றுமில்லாத குடும்பமாகவே உயர்ந்தோரால் கருதப்படும் என்ற வள்ளுவன் வாய்மொழிக்கு ஈடிணை இல்லை.

பெண்ணொருத்திக்கு அத்தகைய உயர்ந்த தன்மைகளெல்லாம் எப்படித்தான் வாய்க்கும்? கற்க வேண்டியவைகளைக் கசடறக் கற்பதாலும் கற்றபடி நிற்பதாலும்தான் வாய்க்கும்.

படிப்பவர்கள் எல்லோருமே அறிவுடையவர்கள் ஆகிவிடுவதில்லை; படிப்பும் அறிவும் உடையவர்கள் அனைவருமே மற்றவர்கள் மதிக்கத் தக்க செல்வத்தையோ செல்வாக்கையோ

பெற்றுவிடுவதில்லை. இதை உணர்ந்துதான் திருவள்ளுவரும் கல்வி என்றொரு தனி அதிகாரமும், அறிவுடைமை என்றொரு தனி அதிகாரமும், பொருள் செயல் வகை என்றொரு தனி அதிகாரமும் தமது உலகப் பொதுமறையில் எழுதியிருக்கிறார்.

கல்வியும் அறிவும் செல்வாக்கும் பெற்று, 'எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண்ணிங்கே இளைப்பில்லை காண்' என்ற நிலையை உண்டாக்குவது எப்படி?— என்று நம் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களின் மனதில் ஒரு கேள்வி உண்டானது. அந்தக் கேள்விக்கு பதில்போல் உருவானதுதான் கோவையில் உள்ள ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி!

ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிக் கல்விவரை ஆன்மீக அடிப்படையில் போதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து நம் ஐயாவினுடையது. அந்த அடிப்படையில், பெண்களுக்கென்று ஓர் கல்வி நிறுவனத்தைத் தோற்றுவிக்க எண்ணிய அவர், இராமகிருஷ்ண மடத்தில் தமது கருத்தைத் தெரிவித்தார். 'பெண்களை ஆன்மீக நெறிப்படுத்தும் முயற்சியை இப்போதுதானே நாம் மேற்கொண்டிருக்கிறோம். இன்னும் சிறிது காலம் போகட்டுமே' என்று தெரிவிக்கப்பட்டது.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு போடப்பட்ட அந்தத் திட்டத்தை அமலாக்கத் தாமதிப்பது

ஐயா அவர்களுக்கு அத்தனைச் சரியாகப் படவில்லை. தம்முடைய பூர்வீகச் சொத்தை விற்று 1951-ல் தமது உன்னதநோக்கத்தை நிறைவேற்ற கல்விக்கான அறக்கட்டளையொன்று நிறுவினார் அவர்.

சாரதாமணி தேவியாரின் பெயரிலே முதலில் சிறியதோர் கல்விக்கூடம் நிறுவலாம் என்று தொடங்கிய அந்தச் சிறு முயற்சியே இன்றைக்குச் 'சாரதாலயம்' வளைவுக்குள் சிகரமாக உயர்ந்து நிற்கும் 'ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி'யாகும்.

ஆரம்பகாலத்தில் மகளிர் உயர்நிலைப்பள்ளி அளவிலேயே துவக்கப்பட்டது இந்தக் கல்விச்சாலை. அப்போது 155 மாணவிகள் மட்டுமே படித்து வந்தார்கள். 9 ஆசிரியைகளே அவர்களுக்குக் கல்விக்கண் திறக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். அந்த அரும்பு அமைப்பே 1957-ஆம் ஆண்டில் கல்லூரியாக மலர்ந்தது, பி. எஸ். சி., பி. ஏ., பி. காம்., எம்.ஏ., எம். எஸ்.சி. எம். பில், பி. எச்டி, என்கிற அளவில் இப்போது அங்கே படிக்கும் மொத்த மகளிர் எண்ணிக்கை ஏறத்தாழ இரண்டாயிரம் ஆகும். பேராசிரியர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் அங்கிருந்து அருங்கல்வி போதிக்கும் ஆற்றலாளர் எண்ணிக்கை 160 ஆகும். இவர்களில் 30 பேருக்கு மேல் PHD பட்டம் பெற்ற

வர்கள். இவர்களைத் தவிர 30 பேர் ஆராய்ச்சிப் பணியில் செயலாற்றுகிறார்கள்.

பழமரத்தைத் தேடிவரும் பறவைகளாக— இந்தியாவிலேயே இணையற்றது என்று பெருமை பெற்றுள்ள இந்தக் கல்லூரியை நாடி வரும் மாணவிகள் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே போகிறது. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிஜித்தீவுகள், புருனி, எதியோப்பியா, மாலத்தீவுகள், உகாண்டா, பிரேஸில், இத்தாலி, ஜப்பான், நெதர் லாந்து, இங்கிலாந்து, கனடா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் மாணவிகள் வெள்ளிவிழா கண்டுவிட்ட ஸ்ரீஅவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரியைத் தேடிப் படிக்க வருகிறார்கள் என்றால், கல்விப் பணியில் அங்குள்ள நேர்த்தி உள்ளங்கை உருளைக்கிழங்காகும்.

சத்துணவுத் திட்டத்தைச் செம்மையுறச் செயல்படுத்தும் சிறப்புக் கல்வித் திட்டமும் அங்குள்ளது என்பதும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லத் தக்கது.

எந்த ஒரு நிறுவனத்தையும் சீரோடும் சிறப்போடும் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர், நிறுவனரின் நெஞ்சார்ந்த கொள்கை உணர்ந்தவராக இருக்க வேண்டும்; அவரது சிந்தனைகளைச் செயல்படுத்தக் கூடிய வல்லமை

உடையவராக இருக்க வேண்டும். அந்த வகையில் ஐயா அவர்களின் எண்ணமுணர்ந்து, அந்தக் கல்வி யமைப்பை வண்ணமுற வளர்த்து வருபவர்— இயக்குநர் பொறுப்பில் உள்ள திருமதி டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்களாவார்.

மத்திய அரசில் மிகப்பெரும் அதிகாரியாக இருந்து வந்த அவ்வம்மையார், மகளிர் நிலை மேம்பாட்டு அடிப்படையில் துவக்கப்பட்ட அக் கல்லூரிக்குத் தமது பதவியை உதறித்தள்ளிவிட்டு உளப்பூர்வமாக வந்தார். அந்த அமைப்பை வளர்ப்பதில், டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் அவர்கள் அயராமல் ஆற்றிவரும் பணி அளவிடற் கரியதாகும்.

முக்கிய சேவிகாக்களாகவும், பால சேவிகாக் களாகவும் இக்கல்லூரி மாணவிகள் ஆற்றிவரும் சமூக சேவைகள், அரசு சமூக நலத்துறையினரா லேயே பெருமையோடு ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவை மாநகரமும், சுற்றுப்புறக் கிராமங்களும் — துப்புரவாவதிலும், கல்வி நலம் பெறுவதிலும் அக்கல்லூரி மாணவிகள் மேற் கொள்ளும் அற்புதப் பணிகள், தூயநெஞ்சங் களால் மேலானதாகப் போற்றப்படுகின்றன; வாழ்த்தப்படுகின்றன.

அந்தக் கல்வி மையத்திலிருந்து ஆங்கில மாத ஏடு ஒன்று (*Indian Journal of Nutrition and Diebetics*) வெளியிடப்பட்டு வருகிறது.

அதில் இடம்பெறும் அறிவார்ந்த கட்டுரைகள், நாடெங்குமுள்ள கற்றறிவாளர்களால்— அறிவியல் அறிஞர்களால் வியந்து பாராட்டப்படுகின்றன. நாம் பெற்றுவரும் அறிவியல் ஆக்கத்தைக் காட்ட, மாணவிகள் எழுதும் விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகளோடு அந்தக் கல்லூரியிலிருந்து 'விஞ்ஞானச்சுடர்' என்றமாத ஏடு ஒன்றும் வெளியிடப்படுகிறது. இவை தவிர, அக்கல்லூரி மூலம் சமயச் சான்றோர்களின், அறவழிச் சிந்தனையாளர்களின் புத்தகங்கள் மட்டுமே இது வரை 50க்கு மேல் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களின் அரிய முயற்சியால் உருவான அந்தக் கல்லூரி, அவரது அற்புத எண்ணங்களின் அரிய பிரதிபலிப்பாகவே ஜொலித்து வருகிறது. 1982ல் வெள்ளிவிழா கண்ட 'ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் மகளிர் கல்லூரி'யைச் சுயாட்சி பெற்ற ஒரு நிறுவனமாக 1948ல் இருந்து இயங்க சென்னைப் பல்கலைக் கழகமே அனுமதித்திருக்கிறது என்றால்—கல்விச் சேவையில் அந்த அமைப்பு காட்டிவரும் அக்கரைக்கு வேறென்ன பெருமை இருக்க முடியும்?

மற்ற துறைகளைப் போலவே மனையியலும் விஞ்ஞானஅடிப்படையில் அமையவேண்டும் என்பதன் அவசியத்தைக் கல்வி மூலம் புகட்டிவரும் அந்தக் கல்லூரி, தாய்க்குலம் பெற்ற தவப்பயனாகும் என்றே கூறலாம்.

"கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்; அந் நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைவ தில்லை'

—என்றார் பாவேந்தர் பாரதிதாசன்

அதன் பொருளுணர்ந்து, பெண் கல்வி மேம்பாட்டுக்காக நம் ஐயா அவர்கள் மேற்கொண்ட முயற்சி இந்தக் கல்லூரியோடு முற்றுப் பெற்று விட்டதா என்றால் அதுதான் இல்லை.

பெண்களின் கல்வித் தரமும் வாழ்க்கைத் தரமும் ஆன்மீக ரீதியில், ஒழுக்கத்தின் அடிப்படையில் மென்மேலும் உயரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, அவருக்கு நிறைய இருக்கிறது. ஆகவே, அந்த மனையியல் கல்லூரியை மகளிர் பல்கலைக் கழக அளவுக்கு விரிவாக்க வேண்டும் என்ற பெருவிருப்பம் கொண்டிருக்கும் ஐயா அவர்களின் அது பற்றிய சிந்தனை நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் வளர்ந்தவாறே இருக்கிறது.

விவேகானந்தர் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றோரால், மேலும் பல கிராமங்கள் பலன் பெறவேண்டும்; சிரமிக் வித்யா பீடத்தில் பயிற்சி பெற்றோரால் நாடெங்கும் உள்ள இளைஞர்கள் நலம் பெறவேண்டும்; நல்ல பலன் பெற வேண்டும் என்றெல்லாம் கனவுகண்டு கொண்டிருக்கும்

நன்னெஞ்சத்திற்குச் சொந்தக்காரரான ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள், தேச சேவை, மேடைப் பேச்சு ஆகியவற்றில் போலவே எண்ணத்தை எழுத்தாக்கும் ஆர்வமும் அதிக முடையவராவார். அவர் இப்போது ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டிருக்கும் '*Make me a man*' என்ற புத்தகம் நமக்கெல்லாம் மேலும் பல நல்வழி காட்டு வதாக இருக்கும் என உறுதியாக நாம் நம்பலாம்.

ஏனெனில்— வானுறையும் தெய்வத் திற்குச் சமமாக மதிக்கப்படும் அளவிற்கு, வையத் துள் வாழ்வாங்கு வாழ்பவரால் எழுதப்படுவ தல்லவா அந்நூல்?

## 7. போற்றத்தக்க பொதுப்பணி

''அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்''

—அறவழி நின்று வாழ்வதென்றால் என்ன என்ற கேள்விக்கு விடையே போல் பொய்யா மொழிப்புலவர் எழுதிய தேனிகர் திருக்குறள் இது. பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகியவை நீங்கி வாழும் வாழ்வே அறவழி வாழ்வு என்பது இக்குறளின் பொருளாகும்.

அப்படிப்பட்ட வாழ்வு வாழ்ந்து வருபவரே நம் ஐயா தி. சு. அவினாசிலிங்கப் பெருந்தகை.

தன்னினும் பெரிய தலைவர்களைக் கண்ட போது; விவேகானந்தர் போன்ற ஆன்மீகச் சிந்தனையாளர்களைப் பற்றி அறிந்தபோது; பொறாமைத் தீ அவரைப் பொசுக்கியதில்லை; மாறாக, அவர்கள் அடியொற்றி நடக்கவே தன் மனதை அவர் பக்குவப்படுத்திக் கொண்டார். கொண்ட கொள்கையில் யாராலும் அசைக்க முடியாத பற்றுதலோடு இன்றும் நின்று வரு கிறார்.

மண்ணருமை, பொன்னருமை, பெண்ணருமை போன்ற எந்தவித ஆசைக்கும் எள்ளளவும் அவர் தன் மனதில் இடம் கொடுத்ததில்லை. இராம கிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தை உருவாக்கவும், மகளிர் கல்வி மேம்பட மனையியல் கல்லூரியை அமைக்கவும்தமது பூர்விகச் சொத்தின்மேல் கடன் பட்டும், பற்றும் தன் கனவை நனவாக்கிக் கொண் டவர் நம் ஐயா. அதற்காகத் தமது தாயாரின் பழைய நகைகளையும் அவர் இழக்க நேர்ந்தது. எப்போதும் கதராடையே அணிந்து எளிமை யாகத் தோற்றமளிக்கும் அவர், இல்லற வாழ்வின் பால் தனது மனதை வளையவிடாமல் துறவற வாழ்வையே விரும்பி நடாத்தி வருகிறார்.

இதையெல்லாம் வைத்துப் பார்க்கிறபோது, நம் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள் குறள்வழிச் சிந்தனையோடு அறவழியில் வாழ்ந்து வருபவர் என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொள்வது மிகவும் பொருத்தம்தானே!

பிறந்த மண், உலக அரங்கிலே சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காகத் தன் குடும்பச் செல்வாக்கையும் மறந்து இந்திய விடுதலைப் போரில் தொண்டர்களோடு தோளோடு தோள் நின்று வெற்றி கண்டவர் அவர்.

தலைசிறந்த காந்தியவாதியான ஐயா அவர் கள், அண்ணல் காந்தியடிகளின் ஆணையை ஏற்று, 1930-ஆம் ஆண்டில் முதன் முதலாக

உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஆறு மாதச் சிறைத்தண்டனை பெற்றார். 1932ல் நடந்த சட்ட மறுப்பு இயக்கத்தில் பங்கேற்று ஓராண்டுக் காலம் சிறைத் தண்டனை பெற்றார். 1941-ல் நாடெங்கும் நடைபெற்ற தனிநபர் சத்தி யாக்கிரகத்தில் கலந்துகொண்டு ஆறு மாதச் சிறைத் தண்டனை அடைந்தார். 1942ல் நடந்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பதினைந்து மாத காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்டதன் காரணமாக இவ்வாறு நான்கு முறை சிறைசென்ற நம் ஐயா அவர்கள், மொத்தத்தில் மூன்றேகால் ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தார். வசதி மிக்க வாழ்வை வெறுத்தொதுக்கி '8X8' அள வுள்ள இருட்சிறையில் இந்த நாட்டின் நலனுக் காகத் தம்மை வருத்திக்கொண்டு இன்னலுற் றார்.

தாய் மண்ணுக்காகத் தொல்லைகள் பல அனுபவித்த அந்தச் சிறந்த மனிதரைக் கௌர விக்கத் தமிழ்நாடு தவறவில்லை.

இந்தியா விடுதலை வெளிச்சம் காணு முன்பே, 1935-ஆம் ஆண்டு முதல் 1946-ஆம் ஆண்டுவரை மத்திய சட்டமன்றத்தில் மரபு காக்கும் உறுப்பினராக இருந்து, நம் அவினாசி லிங்கப் பெருந்தகை அவர்கள் மாண்புற்றார்.

அதன் பின்னர், 1946-ஆம் ஆண்டு முதல் 1949-ஆம் ஆண்டுவரை சென்னை ராஜதானியில் திரு. பிரகாசம், திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் ஆகியோரது அமைச்சரவைகளிலே கல்வி யமைச்சராகப் பதவி பெற்று, கன்னித்தமிழ் வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து அரும்பாடுபட்டார். சென்னை ராஜதானி என்பது சென்னை மாநிலத்தோடு முழு ஆந்திரமும் கேரள, கர்நாடக மாநிலங்களின் சில பகுதிகளும் ஒன்றிணைந்து, உத்திரப் பிரதேசத்திற்கு அடுத்து மிகப் பெரிய மாநிலமாக விளங்கியது அப்போது. 1951-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டு வரையிலே பாராளுமன்ற உறுப்பினராக இருந்து அவர் பைந்தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்த்ததும் உண்டு.

புகழ் பெற்ற தேசியத் தலைவர்களோடெல் லாம் அரசியலில் பெரும் பணி புரிந்த பெருமை ஐயா அவர்களுக்கு உண்டு.

கரடுமுரடான தர்பார் வசனங்களையோ, ஆர்ப்பாட்ட அரசியலையோ அவர்களிடம் அன்றும் சரி—இன்றும் சரி, துளியும் காண முடியாது. சொல்லொன்றும் செயல் வேறாகவும் இருப்பது அவருக்கு அடியோடு பிடிக்காது.

சமூக ஊழியராக இருந்து சிறப்படைய நினைப்பவர்கள், அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களை முன்னுதாரணமாகக் கொள்ளலாம்;

முழுப் புகழும் எய்தலாம். பொதுச் சேவையில் அவர் கடைப்பிடித்து வந்த வழி முறைகள், அவ் வழி ஈடுபாடுடையோர் அனைவரும் பின்பற்றத் தக்க பெருமையுடையவைகளாகும்.

பொதுப் பணியில் இறங்குகிறவர்கள், எத்தனைச் சிரமம் ஏற்பட்டாலும் சரி; பொது மக்களிடம் நிதி வசூலித்தே அப்பணியை நிறை வேற்ற வேண்டும். எத்தனை வசதி மிக்கவரா யினும் பொதுப்பணிக்காகத் தனது சொந்தப் பணத்தையே முழுவதுமாகச் செலவிடக்கூடாது; அதுமுறையல்ல—என்பது ஐயா அவர்களின் பொதுச் சேவைக் கொள்கை. இது, அண்ணல் காந்தியடிகளிடம் அவர் கற்றுக் கொண்ட முக்கியப் பாடம்.

நவாப் ராஜமாணிக்கம், டி. கே. சண்முகம் முதலானோர் தமது நாடகக் குழுக்களின் மூலம் சுதந்திரப் போராட்டத்திற்கு வலிவு சேர்க்கும் வகையில் நகரெங்கும் நல்ல பல தேசீய நாடகங் களை நடத்தி வந்த நேரம் அது. அந்தச் சமயத் தில் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காகக் கோவை மாவட்டத்தில் மகாத்மா காந்தியடிகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். கோவை நகரில் அப்போது அப்படிப்பட்ட நாடகம் ஒன்று நடந்துகொண்டிருந்தது.

சுற்றுப்பயணத்தில் அண்ணலோடு கலந்து கொண்டிருந்த ஐயா அவர்கள், "கோவையில் நடக்கிற தேசீய நாடகக் காட்சியில் சிறிது நேரம் தாங்கள் வந்து கலந்து கொள்வதானால்,

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்கு அங்கும் நமக்கு கணிசமான நிதியுதவி செய்வார்கள்'' என்று பணிவோடு தெரிவித்தார்.

''சுமார்... எவ்வளவு கொடுப்பார்கள்?'' என்று கேட்டார் காந்தியடிகள்.

''சுமார் ஆயிரத்து ஐநூறு ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கும்'' என்றார் அவினாசி லிங்கப் பெருந்தகை.

''அப்படியானால் தாராளமாகப் போகலாமே'' என்றார் மகிழ்வோடு மகாத்மா.

அன்றிரவே, கோவை நாடகக் கொட்டகைக்கு அண்ணல் காந்தியடிகள் வருகிறார் என்று விளம்பரப்படுத்தப்பட்டது. குறிப்பிட்டதற்கு மேல் நிதி குவியும் என்று எதிர்பார்த்தார் ஐயா. இரவுப் பொதுக்கூட்டம் முடிந்த அடியோடு காந்தியடிகள் நேரே நாடகக் கொட்டகைக்கு வந்து சேர்ந்தார். பொதுமக்கள், கூட்டத்திலிருந்து உடனே நாடகக் கொட்டகைக்கு வர முடியாததாலோ என்னவோ, கூட்டம் அவ்வளவாக இல்லை. எனவே, குறிப்பிட்ட அளவில் பாதி கூட நிதிவசூல் இல்லை.

தவித்துப்போன ஐயா அவர்கள், மகாத்மாவிடம் வாக்களித்துவிட்டோமே என்ற மன உறுத்தலாலும், நாடகத்தை நடத்திய நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியார் வேண்டுதலுக்கு இணங்கவும், கோவை மாவட்ட அர்பன் பாங்கில் தன் பெயரில் இருந்த கணக்கில் ரூ. 1500 க்கு

'செக்' எழுதி மகாத்மாவிடம் கொடுத்துவிட்டு, அதற்கான தொகையை பாங்கில் கட்டும்படி தன் சகோதரரிடம் கூறியிருந்தார். அந்தப் பணம் உரிய நேரத்தில் கட்டப்படாததாலும், தற்காலிகமாக ஏற்பட்ட அரிசன நல நிதிக்குத் தனிக் கணக்கு இல்லாததாலும் 'செக்' தொகை தாமதமாகக் கிடைக்கவே, நாடக நிதி பற்றிய உண்மை காந்தியடிகளுக்குத் தெரிந்துவிட்டது.

காந்தியடிகள் இதுபற்றி விசாரித்தபோது, ஐயா அவர்கள் நடந்ததைச் சொன்னார். பொறுமையாக அதைக் கேட்டுவிட்டு மகாத்மா நிதானமாக இப்படி பதில் சொன்னார்:

"இவ்விஷயத்தில் தவறு ஒன்றும் நடக்கவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீ செய்திருக்கும் தவறுகள் இரண்டு. ஒன்று, பொதுப் பணத்தைச் சில தினங்களுக்கான போதிலும் தனியாக ஒரு கணக்கு ஏற்படுத்தி அதில் போட்டிருக்கவேண்டும்; இரண்டாவது உன் கணக்கில் பணம் இல்லாதிருக்கும் போது, அதில் இருப்பதற்கு அதிகமாக நீ 'செக்' கொடுக்கவே கூடாது. உனக்குப் பணம் பெரிதல்ல என்பது எனக்குத் தெரியும். ஆனாலும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும் சரியாக இருக்க வேண்டும். பொது ஊழியர்கள் எவ்விதக் குறைகளுக்கும் ஆளாகக் கூடாது என்பதற்காகவே இதைச் சொல்லுகிறேன்" என்று கூறி ஆசீர்வதித்தார்.

விரைவிலேயே அந்தந்த நிதிக்கும் தனித்தனிப் பெயரில் வங்கிக் கணக்கு முறை கடைப்பிடிக்கப்

பட்டது. தன் சொந்தப் பெயரில் சொற்ப நிதி மட்டுமே, தன்னுடைய வருமானமாக ஐயா அவர்களால் வங்கியில் போடப்பட்டது. நிதியளித்தோர் விவரம் அவ்வப்போது பட்டியல் போட்டு வெளியிடப்பட்டது. பெருந்தொகை கொடுத்தால் தான் என்பதில்லை; ஒரு ரூபாய் கொடுத்தவரின் பெயரும் அதில் இடம் பெற்றது.

குறிப்பிட்ட ஒரு பொதுப்பணிக்காக நிதி வசூலிக்கப் போகும்போது, எல்லோருமே மனந் திறந்து அந்தப பணியைப் பாராட்டி நிதி வழங்கி விடுவதில்லை. சில பேர் "இப்படியும் ஒரு பிழைப்பா?" என்று ஏளனம் செய்ததும் உண்டு. அதையெல்லாம் பல சந்தர்ப்பங்களில், இகழ்வோர் முன், ஐயா அவர்கள் தாங்கிக் கொண்டதுண்டு. ஆனால் மனம் தாளாத நிலையில் சில சமயம் அந்த வசைமாரிகளுக்காகத் தனிமையில் போய் அவர் அழுததும் உண்டு.

அப்போதெல்லாம்—"இப்படியெல்லாம் பிச்சையெடுத்து அவமானப்பட வேண்டியது அவசியம்தானா?" என்று அவரது சகோதரர்களும், நண்பர்களும் சொல்லுவார்கள். அதைக் கேட்டு, அவரது தொண்டுள்ளம் துவண்டு போனதே கிடையாது. பிச்சையேயானாலும் பிறர் வாழ்வு கருதியல்லவா!

"பொதுப்பணியில் ஈடுபடுகிறாயா? உனக்கு சிலர் மாலையிடக்கூடும்; சிலர் உன்னை எட்டி உதைக்கவும் கூடும். இரண்டையும் ஒன்றாகக் கருதுவாயானால், உன் எண்ணம் எளிதில் ஈடேறும்" என்று சுவாமி விவேகானந்தர் சொன்னதை அவ்வப்போது எண்ணிக் கொள்ளுவார். வாட்டம் நீங்கி வல்லமை உண்டாகும். அப்படி

யெல்லாம் அரும்பாடுபட்டு, எறும்புபோல் சேர்த்த பொருளுதவியால் அவர் உருவாக்கிய அமைப்பு களெல்லாம இன்றைய தினம் அவினாசிலிங்கப் பெருந்தகைக்குப் புகழும் பெருமையும் சேர்த்து வருவதைப் பார்த்து வியக்கிறோம் நாம்.

உபநிஷத்தில் கோபாலன் என்ற சிறுவனின் கதை ஒன்று உண்டு, தெய்வபக்திமிக்க ஏழைத் தாய் ஒருத்தியின் ஒரே புதல்வன் அவன். சிறுவ னான அவனை நல்ல முறையில் படிக்க வைக்க நினைத்தாள் அவள். ஒரு காட்டிற்கு அப்பால் இருந்த பள்ளியில் அவனைச் சேர்த்தாள். முதல் நாள், தானே கொண்டுபோய் அவனைப் பள்ளி யில் விட்டு வந்தாள். மறுநாள், தனியே சென்ற அவன் காட்டைக் கடக்கும்போது மிகுந்த அச்சத் தோடு போய் வந்தான். அடுத்தநாள்- "அம்மா காட்டுக்குள் செல்லும்போது எனக்கு ரொம்பவும் பயமாக இருக்கிறது, நான் தனியே போகமாட் டேன்; நீயும் வா" என்றான். "வயதான என் னால தினசரி அவ்வளவு தூரம் நடக்க முடியுமா? மகனே அந்தக் காட்டில் உன் சகோதரன் ஒருவன் இருக்கிறான். நீ பயப்படத் தேவையே இல்லை. ரொமபவும் பயம் ஏற்பட் டால் அவனைக் கூப்பிடு; துணைக்கு வருவான்" என்று கூறியனுப்பினாள் தாய். தெம்போடு பள்ளிக்குப் புறப்பட்டான் அந்தச் சிறுவன் கோபாலன். காட்டினுள் சிறிது தூரம் சென்ற தும் பயம் மேலிட்டது. "அண்ணா" என்று

கத்தினான். வாலிபன் ஒருவன் ஒடோடி வந்து அவனை அச்சம் நீக்கி வழி நடத்திச் சென்றான் என்பது அந்தக் கதை.

சிறந்த பக்தையான அந்தப் பெண்மணியின் மகனை, தெய்வமே அண்ணனாக வந்து அச்சம் நீக்கி வழிநடத்தியது என்பது அக்கதையின் உட்பொருள். தூய மனத்திற்குத் தெய்வம் துணை நின்று காக்குமாம்.

அதேபோல்— விடுதலைப் போரில் சிறை செல்ல நேர்ந்தபோதெல்லாம், "நாம் உருவாக்கிய அமைப்புகள் என்னவாகுமோ" என்று நம் ஐயா அவர்கள் அஞ்சியதுண்டு. அப்போதெல்லாம் அவருடைய தூய உள்ளத்திற்கு, அவர் நோக்கத்தை ஈடேற்றத்தக்க துணை தவறாமல் தெய்வாதீனமாகக் கிடைத்தே வந்திருக்கிறது.

சிறிதும் தன்னலம் கருதாமல், அவ்வாறெல்லாம் பட்ட பாட்டுக்குப் பலனாகத்தான் பிற்காலத்தில் அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களுக்கு 1970ல் இந்திய அரசு 'பத்மபூஷன்' விருது அளித்தது. 1974ல், 'நேரு லெட்டிரஸி அவார்டு' வழங்கப்பட்டது. 1978ல் தமிழ்நாடு அரசு "செந்தமிழ்ச் செல்வர்" என்ற பட்டம் வழங்கிப் பாராட்டியது. 1983ல் மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்ற பட்டம் அளித்துச் சிறப்பித்தது. தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகம் 1984ல் 'டாக்டர் ஆஃப்

சயின்ஸ்' எனும் விருது வழங்கிப் பெருமை கொண்டது.

1928ல், நம் அவினாசிலிங்கப் பெருந்தகையின் அன்னையார் காலமாகிவிட்டார். 1934ல் தந்தையார் இயற்கை எய்தினார். பிள்ளைக்குக் கிடைத்த பெருமைகளைக் கண்டு மகிழப் பெற்றோர் இல்லாமல் போய்விட்டார்களே என்ற குறை அந்தத் தவப் புதல்வருக்கு இல்லாதிருக்குமா?

என்ன செய்வது? நல்லவைகள் மெல்லத் தானே நடக்கும்? இரவுக்குப பிறகு பகல் என்பதும், புயலுக்குப்பின் அமைதி என்பதும் இயற்கையின் நியதி அல்லவா!

## 8. அண்ணாவும் ஐயாவும்!

'அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்'

—அறமே உயர்ந்தது

என்ற உண்மையை அறிந்து, அறவழி நடக்கும் தூயவர்களின் அன்பை எப்பாடுபட்டாவது தேடி அடைவீர்களானால் நீங்களும் உயரமுடியும் எனும் கருத்தில் பொய்யாமொழிப் புலவர் எழுதியது இந்தத் திருக்குறள். நமது ஐயா திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் பெற்றுள்ள பெருமை இத்தகையதே என்றால் தவறில்லை.

ஐயா அவர்கள் தமது இளமைக் காலத்திலேயே, பெரும்பாலும் தம்மைவிட வலியவர்களிடமும், பெரியவர்களிடமும், உயர்ந்தவர்களிடமும் தான் நட்புக் கொண்டிருந்தார். 'மற்றவர்கள் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறாயோ — மற்றவர்களிடம் நீ அப்படி நடந்துகொள்' என்ற பொன்மொழி ஒன்றுண்டே? அதற்கேற்பத் தமது நடவடிக்கைகளை அமைத்துக்கொண்ட அவர், தம்மின் தாழ்ந்தவர்களிடமும் கூடப் பண்புடனேயே பழகிவந்தார். அவரது இத்தகைய குணநலன்களே, பெரியவர்களையும்

அவர்மேல் பெரிதும் பாசம் கொள்ளச் செய்தது. இன்றைக்கு அவர்கள் புகழேணியின் உச்சியிலிருக்கிறார்கள் என்பதற்கான முழு முதல் மூலகாரணமே இதுதான்.

அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள் மகாத்மா காந்தி அண்ணலை முதன் முதலாகப் பார்த்தது 1920ல், சென்னையில் இண்டர் மீடியட் படித்துக் கொண்டிருந்த காலத்தில்தான். ஒத்துழையாமை இயக்க அறப்போர்ப் பிரகடனம் செய்யப்பட்டிருந்த நேரம் அது.

சென்னைக் கடற்கரையில், திலகர் கட்டத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காக மகாத்மா காந்தியடிகள் சவுக்கத் அலியோடு வந்திருந்தார். ஏறத்தாழ ஐம்பதாயிரம் பேர் திரண்டிருந்த அந்தப் பொதுக் கூட்டத்திற்கு தன் மாணவநண்பர்களோடு சென்றிருந்தார் இளம் வயதினராயிருந்த நம் ஐயா அவர்கள்

அந்த மாபெரும் கூட்டத்தில் ஒலிபெருக்கி கிடையாது. இருந்தாலும் ஆழ்ந்த அமைதிக்கு இடையே மெலிதான குரலில்- அதே நேரத்தில் அழுத்தந் திருத்தமாக அண்ணல் நிகழ்த்திய சொற்பொழிவு எல்லோராலும் உன்னிப்பாகக் கவனித்துக் கேட்கப்பட்டது. "இந்திய நாட்டின் விடுதலைப் போரில், இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் தங்கள் பங்கை செலுத்தத் தவறக்கூடாது. ஒத்துழையாமை அறப்போராட்

டம் வெற்றி பெற எல்லோரும் இணைந்து நிற்க வேண்டும். எல்லோரும் என்னைப் போலக் கதராடையே அணிந்து, கதர் இயக்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டும்'' என்றெல்லாம் அவர் ஆற்றிய உரை நம் அவினாசிலிங்கப் பெருந்தகை நெஞ்சில் ஆழப் பதிந்தது.

ஆனால், முரட்டுக் கதராடை உடுத்திய அந்த மெல்லிய உருவத்தை அருகிருந்து பார்க்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவர் நெஞ்சில் குடிகொண்டது.

சில ஆண்டுகளிலேயே அந்தக் கவலையும் அவருடைய மனதிலிருந்து அடியோடு துடைக்கப் பட்டது.

நாடெங்கும் கதரியக்கத்திற்கு வலிமை சேர்ப்பதற்காகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த அண்ணல் காந்தியடிகள், 1926ல் கோவை மாவட்டத்தில் உள்ளதும், நம் ஐயா அவர்களின் சொந்த ஊருமான திருப்பூருக்கு வருகை தந்திருந்தார். கதர்த் தொழிலில் பல்லாயிரவரும் ஈடுபாடு கொண்டிருந்த ஊராகும் அது; அங்கு வந்த மகாத்மா அவர்கள், தாராள மனமும் தரமான பண்புகளும் கொண்டவரான திரு. கே. எஸ். இராமசாமி கவுண்டர் இல்லத்தில் தங்கினார்.

மகாத்மா காந்தியடிகளை மிகவும் அருகிலிருந்து பார்க்கவும், அவரோடு சிறிது

பேசவுமான சந்தர்ப்பம் அப்போதுதான் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகைக்குக் கிடைத்தது. அளவிலா மகிழ்ச்சி இதனால் அவர் நெஞ்சில் குடிகொண்டது. பெறலரும் பேறு பெற்றதாக எண்ணிப் பெருமிதம் கொண்டார்.

உலக அரங்கில் உயர்ந்து விளங்கும் ஒரு உத்தமரை மிக நெருக்கத்தில் கண்ட அவர் சிறிது நேரம் அப்படியே பிரமித்துப்போய் நின்றார். பிறகு ஒருவாறாகத் தன்னைச் சமாளித்துக்கொண்டு "ஐயா, ஒரு சந்தேகம்?" என்றார் பலவீனமான குரலில். அவர் முகத்தை ஆழ்ந்து நோக்கிவிட்டு, அருகே அழைத்து, அன்பான குரலில் "என்ன சந்தேகம்? எதுவானாலும் தைரியமாகக் கேள்!" என்றார் அண்ணல்.

"கதரியக்கத்தின் வெற்றிக்குப் பாடுபடும் தாங்கள், தயவுசெய்து எனக்கு ஒரு விஷயம் பற்றி விளக்கவேண்டும். மில் துணியைப்போலக் கதர்த்துணி நீண்ட காலம் உழைப்பதில்லை. கதர்த்துணி வாங்குவதால் நஷ்டம்தான்; லாபமொன்றும் கிடையாது என்று சில பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்களே... அதுபற்றித் தங்கள் கருத்து என்ன?"—நம் ஐயா அவர்கள் இளங்கன்று பயமறியாது என்ற விதத்தில் இப்படிக் கேள்வி கேட்டதும், சுற்றிலும் நின்றவர்கள் என்ன பதில் வரப்போகிறதோ என்ற திகைப்போடு மகாத்மாவின் முகத்தையே பார்த்தார்கள்

இதைக் கேட்ட மகாத்மா காந்தியடிகள், குழந்தைச் சிரிப்போடு ஐயாவைத் தட்டிக் கொடுத்துவிட்டு, தீர்க்கமான குரலில் அதற்கு இப்படி விளக்கமளித்தார்— "பெரும் பொருட் செலவில் தென்னிந்தியாவில் நம் முன்னோர்களால் ஏராளமான கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நீ அறிந்திருப்பாய். அவைகளெல்லாம் எந்த பொருளாதார லாபத்தைக் கருதியும் கட்டப் பட்டவைகள் அல்ல. ஆத்ம திருப்திக்காகவும், தியாக நெஞ்சங்களின் சாந்திக்காகவும், பக்தர் களின் மனஅமைதிக்காகவும்தான் அந்தக்கோயில் கள் கட்டப்பட்டுள்ளன. மனிதாபிமானம் உள்ள வர்களால் அத்தகைய கோயில்கள்—தெய்வங்கள் மதிக்கப்படுகின்றனவா இல்லையா? எல்லாவற் றிலும் பொருளாதார லாபநஷ்டத்தைக் கணக்குப் பார்க்க முடியாது. தியாகிகளின் அடையா ளம்போல் கருதப்படும் கதர்த்துணியை வாங்கு வதால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் கோடானுகோடி ஏழை எளிய மக்களுக்கு நாம் வேலைவாய்ப்பு அளித்தவர்களாகிறோம்; அவர் கள் பசிதீர்க்கிறோம். புரிந்துகொண்டாயா?"

அண்ணல் அளித்த அந்த விளக்கம் ஐயாவின் நெஞ்சில் முழுமை பெற்ற ஒன்றாகி நிறைந்தது. அவர் மீதிருந்த மரியாதையை இன்னும் உயர்த் திப் பன்மடங்காக்கியது.

1930ல், அமைதியான முறையில் இந்தியா வெங்கும் உப்புச் சத்தியாக்கிரகம் நடக்கும்

என்று மகாத்மா காந்தியடிகளால் அகமதாபாத்தில் கூடிய 75 ஆயிரம் மக்களிடையே அறிவிக்கப்பட்டது. உப்பின் மீதான வரியை நீக்கக் கோரி பஞ்சாப், குஜராத், மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசம், சிந்து, கேரளா, ராஜபுதனம், ஆந்திரா, கர்னாடகம், தமிழ்நாடு, பீகார், பெங்களூர், உத்கல் போன்ற இந்தியாவின் பல இடங்களில் நடத்தப்படும் அந்தப் போராட்டத்தில் 16 முதல் 61 வயது வரையிலான எண்ணற்ற தொண்டர்கள் பங்கேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏப்ரல் 5 - ஆம் தேதியன்று காலை 8.30 மணிக்கு தண்டி கடற்கரையில் ஆங்கில அரசு விதித்த தடையையும்மீறி அண்ணல் காந்தியடிகள் உப்பு எடுத்தார்.

இதன் காரணமாக மகாத்மா கைது செய்யப் பட்டார் என்ற செய்தி, உதகமண்டலத்தில், தமது ஆஸ்ரமத்தில் தங்கியிருந்த நம் ஐயா அவர் களுக்குச் செய்தித்தாள் மூலம் தெரிந்தது. அதைப் படித்து மனம் கலங்கிப் போனார் அவர். விழிகள் கண்ணீர் பெருக்கின. காந்தியடிகளோடு சென்ற தொண்டர்கள் கண்மூடித்தனமான தடியடிக்கு ஆளானார்கள் என்ற செய்தியும் அவரது உள்ளத்தை உருக்குலையச் செய்தது.

நாட்டு நலனுக்காக நாமும் பாடுபடவேண்டும் என்ற எண்ணம் உந்தியது. உடனேயே உதகை

யிலிருந்து புறப்பட்டு கோயம்புத்தூருக்கு வந்து சேர்ந்தார் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை. அந்நாளில் அங்கிருந்த காங்கிரஸ் பிரமுகர்கள் யாரையும் அவருக்குப் பரிச்சயம் இல்லை. ஆகவே, காங்கிரஸ் கட்சி அலுவலகம் இருக்கும் இடத்தை விசாரித்தறிந்து அங்கே போய்ச் சேர்ந்தார். உணர்ச்சி கொப்பளிக்கும் உள்ளத்தோடு, நாட்டு விடுதலைக்குப் பாடுபடும் நெஞ்சார்ந்த நோக்கத்தோடு அன்றைய தினமே காங்கிரஸ் பேரியக்கத்தில் தன்னையும் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டார்.

கோயம்புத்தூர் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தில், அப்போது அன்போடு வரவேற்று நமது அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களை உறுப்பினராகப் பதிவு செய்தவர், நடுத்தர வைதினரான திரு. சி. பி. சுப்பையா என்பவராவார்.

ஐயா அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தில் உறுப்பினரானதை அறிந்து பெற்றோர் கண்டித்தனர்; உறவினர்கள் எதிர்த்தனர்; 'புத்திசாலித்தனமான காரியம் அல்ல இது' என்று உடனிருந்து சட்டம் பயின்ற நண்பர்களும் எச்சரித்தனர். என்ன நடந்து என்ன? எடுத்த முடிவிலிருந்து ஐயா அவர்கள் கடைசிவரை சிறிதும் பின் வாங்கவேயில்லை.

அவரது இளமை வேகத்தோடு கூடிய தொண்டுள்ளமும், திடமான பொதுச் சேவைக்

குணமும் அம் மாவட்டத்தைச் சேர்ந்த அவ்வியக்கத்தார் அனைவரையும் கவர்வதாக இருந்தது. அதன் பலனாக, இரண்டுமாத காலத்திலேயே கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகத் திருவாளர் தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள் ஒருமனதாக நியமிக்கப்பட்டார்.

ஜூலை 5-ஆம் தேதியன்று உப்புச் சத்தியாக்கிரகிகளுக்குத் திரு. ராகவாச்சாரியுடன் தலைமை தாங்கிச் சென்று வலாங்குளத்தில உப்புக் காய்ச்சினார் நம் ஐயா அவர்கள் இதன் காரணமாக, அரசு அவர்கள் இருவரையும் கைது செய்து கோவை மத்திய சிறையில் அடைத்தது. அங்கும் வேலூர் சிறையிலுமாக அவர் ஆறுமாதத் தண்டனையை அனுபவிக்க நேர்ந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அந்நாளில் நம் ஐயா அவர்களோடு இணைந்து நின்று தியாகத் தழும்பேற்ற கோவை மாவட்டவாசிகள் யாரெல்லாம் தெரியுமா? திரு. சி. பி. சுப்பையா, திரு. கே. சுப்பிரமணியம், திரு. என். சுப்பிரமணிய ஐயர், திரு. சி. சுப்பிரமணியம், திரு. டி. ராகவாச்சாரி, திரு. கே கே. சுப்பண்ண கவுண்டர், திரு. ஆர். எஸ். ஸ்ரீகண்ட ஐயர், திரு. சுவாமி கவுண்டர், திரு. ஜி. எஸ். லட்சுமணன், திரு. எம். ஏ. ஈஸ்வரன், திரு. கே. எஸ். இராமசாமி கவுண்டர், திரு ஆர். எம். மகுடபதி, திரு. கே. எஸ். பெரியசாமி, திரு. ஆர். எம். குமாரசாமி, திரு. வடிவேல், திரு. வேலப்ப நாயுடு, திரு. பி. கே. நல்லசாமி,

திரு. ரெங்கசாமி ரெட்டியார்—முதலான பலரும் சுதந்திரப் போராட்ட அணியில் கோவை மாவட்டத்தில் முன் நின்ற முக்கியஸ்தர்களாவார்கள்.

அவர்களையெல்லாம் இப்போதும் கூட நினைவு கூரவும், மதித்துப் போற்றவும் நம் ஐயா அவர்கள் தவறுவதே இல்லை.

மகாத்மா காந்தியடிகள், அரிசன மக்கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படும் அவல நிலையை மாற்ற தீவிரமாகத் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தைத் தொடங்கினார். அவர்கள் ஆலயப் பிரவேசம் செய்வது தடுக்கப்படக்கூடாது என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தினார். அந்த இயக்கம் முழு வேகத்தோடு இந்தியா வெங்கும் பரவவேண்டும் என்ற குறிக்கோளுடன் கேரளாவில் உள்ள குருவாயூர் கோயிலில் முதன் முதல் அரிசனப் பெருமக்கள் ஆலயப் பிரவேசம் செய்தனர்.

அந்த நேரத்தில் இந்தியாவெங்கும் சுற்றுப் பயணம் தொடங்கிய அண்ணல் காந்தியடிகள் தமிழ் நாட்டில் ஒரு வாரத்திற்கு மேல் இருந்து பல ஊர்களுக்கும் சென்று பயன்மிக்க சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். கோவை, நீலகிரி பகுதிகளில் அவா சுற்றுப்பயணம் செய்த போதும், மற்ற ஊர்களுககுச் சென்றபோதும் 6 நாட்கள் நம் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை

அவர்கள், அண்ணலோடு உடனிருக்கும்படி ஆயிற்று.

அப்படிப்பட்ட நேரத்தில், அண்ணல் காந்தியடிகள் ஐயாவின் வித்யாலயத்தில் ஒருநாள் தங்கியிருந்தார். கோயம்புத்தூரில் உள்ள ஒப்பணக்கார வீதியிலிருந்த ஐயாவின் அண்ணன் வீட்டில் ஒருநாள் அண்ணல் காந்தியடிகளுக்கு உணவு படைக்கப்பட்டது. 'அவினாஷ், அவினாஷ்'' என்றுதான் அப்போதெல்லாம் நம் அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களைக் காந்தியடிகள் அழைப்பார்.

காந்தியடிகள் வித்யாலயத்தில் தங்கியிருந்த போது, ஏழை எளிய மாணவர்களுக்கு இனபேதம் பாராமல் தொண்டாற்றிவரும் அவர்கள் தூய தொண்டினை மனம் திறந்து பாராட்டினார். 7 - 2 - 1934ல் இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தின் முக்கியக் கட்டிடத்திற்கு மகாத்மா காந்தியடிகள் மகிழ்வோடு தம் திருக்கரங்களால் அடிக்கல் நாட்டி, அவர்களது அரிய பணிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார். அப்போது அங்கே பணியாற்றி வந்த திரு வீரராகவன் என்ற ஆசிரியர் தாமே திறம்பட உருவாக்கிய தனது படத்தில், காந்தியடிகள் களிப்போடு கையெழுத்திட்டுக் கொடுத்தார். அந்த ஓவியம் இப்போதும் வித்யாலயத்தில் பொக்கிஷம்போல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அப்போது, நம் ஐயா அவர்கள் அண்ணல் காந்தியடிகளிடம் ஒரு 'ஆட்டோகிராபில்' பணிவோடு கையெழுத்து வேண்டினார். அவரும் அன்போடு அதை வாங்கி "ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயத்தின் மாணாக்கர்கள் எப்போதும் உண்மைக்கு வலிமை சேர்ப்பார்கள்; எல்லாம் வல்ல இறைவனிடம் மிகுந்த பக்தியோடிருப்பார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கு உண்டு" என்று எழுதி தமது தாய்மொழியான குஜராத்தியில் ஒரு கையெழுத்தும், 'மோ. க. காந்தி என்று தமிழில் ஒரு கையெழுத்தும் போட்டுக் கொடுத்தார். மனமார வாயார வாழ்த்திப் பாராட்டினார்.

"அந்த இனிய சம்பவங்களையெல்லாம் இப்போது நினைத்தாலும் என் நெஞ்சம் மகிழ்ச்சி வெள்ளத்தில் தத்தளிக்கிறது" என்று ஐயா தி. சு. அவினாசிலிங்கப் பெருந்தகை அளவற்ற உள்ளக்களிப்போடு இன்றைக்கும் சொல்லிச் சொல்லி இதயம் பூரிப்பதுண்டு.

## 9. சிறைச்சாலை என்ன செய்யும்?

'இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்'

—என்பது வள்ளுவப்

பெருந்தகையின் அருள் வாக்காகும். 'எத்தகைய துன்பம் வந்தாலும் சரி; அதைப் பொருட்படுத் தாமல் இன்முகத்தோடு ஏற்றுக்கொள்ள வேண் டும். ஏனென்றால் அதையடுத்து வரும் நிகழ்வு உங்களுக்கு இன்பம் பயப்பதாக இருக்கும்' என்ற அந்தக் குறளின் பொருளை முற்றிலும் உணர்ந்த வர் நம் நூலின் நாயகர் திரு தி. சு. அவினாசி லிங்கப் பெருந்தகை அவர்கள். ஏனென்றால், பொது வாழ்வில் ஈடுபட்ட பின், எத்தகைய இடர்ப் பாடு ஏற்பட்டாலும் சரி, அதுபற்றிச் சிறிதும் அவர் கவலைப்படுவதே இல்லை. நெஞ்சுரத்தோடு நிமிர்ந்தே நிற்பார்.

இந்தியாவெங்கும் சுதந்திரக் கனல் மூண்ட 1930 முதல் 1947 வரையிலான முக்கியக் கால கட்டத்தில் மகாத்மா காந்தியடிகளின் மந்திரச் சொல்லுக்குப் பணிந்து, அவர் அறிவித்த அறப் போராட்டங்கள் பலவற்றிலும் அவர் பங்கேற்க நேர்ந்தது. அதன் விளைவாக 1930, 1932, 1941

1942 ஆகிய ஆண்டுகளில் கோவை, கடலூர், திருச்சி, மதுரை, வேலூர் போன்ற மாவட்டத் தலைநகரச் சிறைச் சாலைகளில் எல்லாம் சித்ர வதை படும்படியாயிற்று. தனிமைச் சிறையிலும் அவர் அடைக்கப்பட்டதுண்டு.

காலை, நடுப்பகல், மாலை என்று ஒரு நாளைக்கு மூன்றே தடவைதான்—அதுவும் உண வளிக்க என்று சிறைக் கதவுகள் திறந்துவிடப் படும். மற்ற நேரங்களில் யாரையும் பார்க்கவோ பழகவோ முடியாது- வெறுந்தரையில்தான் படுக்கை. கொசுக்கடி தூங்கவிடாது. அங்கு தரப் படும் முரட்டு கம்பளிப்போர்வையை வெய்யில் காலத்தில் பயன்படுத்த முடியாது. சில நேரங் களில் கொலைத் தண்டனைக்குரிய கைதிகளும் அவரோடு சேர்த்து அடைக்கப்பட்டதுண்டு. நாட்டில் என்ன நடக்கிறது என்பதே விளங்காம லிருக்கும் அந்நேரத்தில், புதிதாகச் சிறைக்கு வரும் கைதிகள், வெளி நடப்பைப் பற்றிச் சொல்லுவது தான் அவர்களுக்குப் புதிய செய்தியாக இருக்கும்.

ஐயா அவர்களின் தந்தையார், முதல் தடவை தன் மகன் விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை புகுந்ததை மிகுந்த தைரியத்தோடு ஏற்றுக்கொண் டார். ஆனால், இரண்டாவது தடவை சிறைக்கு அவர் சென்றபோது அதை மனோதிடத்துடன் தாங்கிக்கொள்ள அவரால் முடியவில்லை. பேசா மல், தமிழ்நாட்டில் உள்ள கோயில்களுக்கெல்லாம் யாத்திரை புறப்பட்டுவிட்டார்.

இப்படியெல்லாம் அவினாசிலிங்கப் பெருந் தகைக்கு ஏற்பட்ட சங்கடங்கள், விடுதலைப் போரில் அவருக்கிருந்த வேகத்தை மட்டுப்படுத்தி விடவில்லை; மலைபோல் வரும் துன்பங்கள் பனி போல் விலகும் காலம் விரைவில் வரும் என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது.

சிறைபுக நேரும் போதெல்லாம், அங்கே கிடைக்கிற ஓய்வில் தமது மனச்சாந்திககாகப் படிக்க, ஐயா அவர்கள் தம்மோடு சில புத்தகங், களைக் கொண்டுபோவது வழக்கம். திருக்குறள், கம்பராமாயணம், வில்லிபாரதம், சிலப்பதிகாரம் ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்சர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் அறபுதமான உரைத் தொகுப்புகள்-உபதேச நூல்கள், பிரார்த்தனைப் புததகங்கள், தினசரி வழிபாட்டுக்காக ஸ்ரீ இராம கிருஷ்ண பரம ஹம்சர்-சுவாமி விவேகானந்தர் திருவுருவப்படங்கள் ஆகியவைகள் தம்மோடு சிறைககு அவர் அப்படிக கொண்டு சென்றவை களாகும.

பொருளாதாரத்தை முக்கியப் பாடமாக எடுத்துப் படித்துப் பட்டம் பெற்றிருந்தவரான நம் ஐயா அவர்கள், அவ்வாறு சிறையில் இருந்த போது 'இந்தியப் பொருளாதார நூல்' என்றொரு புத்தகமே எழுதினார். அதுதான் அவர் எழுதிய முதல் தமிழ்ப் புத்தகமாகும். 'கொழும்பு முதல்

அல்மோரா வரை' என்ற சுவாமி விவேகானந்தரின் ஆங்கிலச் சொற்பொழிவுத் தொகுப்பு நூலை அவர் அதேபோல் தமிழில் மொழி பெயர்த்தார்.

'கல்வியைப் பற்றி சுவாமி விவேகானந்தர்', 'திருக்கேத்தார யாத்திரை' ஆகிய ஆங்கில நூல்களும் சிறையில் இருந்த காலத்தில் ஐயா அவர்களால் அருமையாக எழுதி முடிக்கப்பட்டன.

அதுமட்டுமல்ல-- 'பிரிட்டிஷ் கலைக் களஞ்சியம்' போலத் தமிழிலும் சிறப்பானதோர் கலைக் களஞ்சியம் உருவாக்கவேண்டும் என்ற எண்ணமே சிறைவாசத்தின் போதுதான் அவர் நெஞ்சில் முளைவிட்டது. அந்த ஆசைதான் பிற்காலத்தில் ஆலமரம் போல் தழைத்து அறிஞர் மகிழ உருப்பெற்றது.

கணீரென்ற குரல் வளம் வாய்க்கப்பெற்ற ஐயா அவர்கள், விடுதலைப் போராட்ட காலத்தில் பல மேடைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதுண்டு. அவர் உச்சரிக்கும் ஒவ்வொரு சொல்லும் அடி மனத்திலிருந்து கிளம்பி வெளிப்பட்டு, கேட்போர் நெஞ்சில் ஆணி அறைந்தாற்போல் பதியும்.

'யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவ
தெங்கும் காணோம்!

தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்।

யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோ வைப்போல்

பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததிலை; உண்மைவெறும்
புகழ்ச்சி இல்லை!

சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் ப சய்வீர்!

பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியில்
பெயர்த்தல் வேண்டும்!'

'புத்தம் புதிய கலைகள்-பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேனமைக் கலைகள் தமிழினில் இல்லை!
சென்றிடுவீர் எட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு
சேர்ப்பீர்!'

—போன்ற தேசீய கவி சுப்பிர மணிய பாரதியாரின் பாடல்களெல்லாம் அடிக்கடி அவரது மேடைப் பேச்சின்போது அலை அலையாய் வெளிப்படும்; மாபெரும் மக்கள் கூட்டம் சொக்கி நிற்கும்.

இதையெல்லாம் கண்டுதான் ஆங்கில ஏகாதி பத்தியம் ஐயா அவர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்தது. அதன் விளைவுதான் அவருக்கு எடுத்ததற்கெல்லாம் சிறைவாசம்; இரக்கமற்ற தண்டனைகள். சிறைவாச காலத்தில் நம் ஐயா அவர்களுக்குக் கிடைத்த ஒரே மகிழ்ச்சி -மாபெரும் தேசிய வாதிகளை, தேசத் தலைவர் களையெல்லாம் மிக அருகே கண்டு பழக முடிந்தது; மனங்குளிரப் பேசி மகிழமுடிந்தது என்பது ஒன்றுதான்.

மூதறிஞர் ராஜாஜி, திரு. டி. பிரகாசம், திரு. ஏ. வைத்தியனாத ஐயர், தீரர் எஸ். சத்திய மூர்த்தி, திரு. சதாசிவ ராவ், திரு. ஓ. பி. இராம சாமி ரெட்டியார், திரு. கே. சந்தானம், சர்தார் ஏ. வேதரத்தினம் பிள்ளை, திரு. வி. வி. கிரி திரு. என். எம். ஆர். சுப்பராமன், திரு. எம். பக்த வத்சலம், திரு. ம. பொ. சிவஞானம், திரு. ஓ வி, அளகேசன், திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா. திரு எல். கிருஷ்ணசாமி பாரதி, கோபள்ளி சீதா ராம சாஸ்திரி, முட்னூரி கிருஷ்ணா ராவ், தென்னட்டி விஸ்வநாதன், திரு. பி. கோபால ரெட்டி, பள்ளம் ராஜு, திரு. டி. சுப்பிரமணியம், திரு. யு.கோபால மேனன், திரு: பூனச்சா போன்ற பிரபலஸ்தர்கள் பலரையும் நேரில் காணும் வாய்ப்பு எந்தச் சிரமமும் இல்லாமல் தம் சிறை வாசத்தின் போது மிக எளிதில் கிடைத்தது, நம்

ஐயா அவர்களுக்குப் பெருமையாக இருந்தது. பெருமகிழ்ச்சி சேர்த்தது.

அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களைக் கலங்கச் செய்யும் சம்பவம் ஒன்றும் சிறையிலிருந்த போது ஒவ்வோர் முறை ஏற்பட்டதையும் இங்கே நாம் குறிப்பிடத்தான் வேண்டும்.

அப்போதெல்லாம், சிறையிலிருப்பவர்கள் மாதம் ஒரு கடிதம்தான் எழுதலாம்; அதேபோல் மாதம் ஒரே ஒரு கடிதம்தான் அவர்களுக்கு வெளியிலிருந்து வரலாம் என்ற கட்டுப்பாடு இருந்தது. அதுவும்-கடிதப்போக்குவரத்து குடும்பத்தாருக்குள்ளேதான் நடைபெறவேண்டும். மூன்றாவது மனிதருக்கு எழுதுவதோ, மூன்றாவது மனிதரிடமிருந்து வருவதோ அனுமதிக்கப்பட மாட்டாது. ஒரு கைதியைப் பார்க்க மாதம் ஒருவர்தான் அனுமதிக்கப்படுவார். அதுவும் அரும்பாடுபட்டு அனுமதி வாங்கிவரும் அவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்குள் பேசி முடித்தாக வேண்டும்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, நமது அவினாசிலிங்கப் பெருந்தகையின் தந்தையார் திரு. கே.சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் சிறைச்சாலைக்கு வருவார். அன்பையெல்லாம் கொட்டிவளர்த்த மகனைச் சிறைக் கைதியாகப் பார்த்ததும் கண்ணீர் பொங்கிப் பெருக்கெடுக்கும். எதைப் பேசவும் நா எழாது. சிறு குழந்தை போலக் குமுறிக்குமுறி அழுவார்.

தந்தையின் அழுகை, சிறைக்கொட்டடியிலிருக்கும் மகனையும் தேம்பியழ வைத்து விடும். அவர்கள் அமைதியடைந்து குசலம் விசாரித்துக் கொள்ளுவதற்குள்ளாகக் குறிப்பிட்ட நேரம் முடிந்து போய் விடும். சிறைக் காவலர்கள் அதை நினைவுபடுத்தியதும் மீண்டும் இருவரும் கலக்கமடைந்து கண்ணீர் பெருக்குவார்கள். உணர்ச்சிமயமாகி தந்தையும் மகனும் ஒருவரையொருவர் இறுகத் தழுவிக்கொண்டு விடுவார்கள். அவர்களைப் பிரிப்பதே அந்தக் காவலர்களுக்குப் பெரும் பிரச்னையாகிவிடும்.

அந்தச் சம்பவத்தை இப்போது நினைத்தாலும் அவரது கண்கள் பனிப்பதை நாம் காண முடியும்.

அன்றையதினம் தேச விடுதலைக்காக அப்படிச் சிறையிலெல்லாம் கிடந்து அல்லல்பட்ட அனுபவத்தால்தான், நெஞ்சுறுதி மிக்க ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள் இன்றையதினம் புடம்போட்ட தங்கமாக ஒளிர்வதை நம்மால் கண்டு மகிழ முடிகிறது.

# 10. தேசபிதாவின் மறைவு

'அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவார்
அஃதறி கல்லாதவர்'

—என்கிற திருக்குறளானது, பிற்காலத்தில் என்ன நடக்கப் போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ளும் திறமை உடையவர்களே அறிவார்ந்த பெருமை பெற்றவர்களாவார்கள்; குறைமதியினர்க்கு அத் திறமை அரிது என்று நமக்கு உணர்த்துகிறது.

அடிமையிருள் சூழ்ந்துள்ள இந்தியாவில் சுதந்திரச் சூரியோதயம் வரச் செய்யக் காங்கிரஸ் பேரியக்கம் ஒன்றினாலேயே முடியும் என்ற எண்ணத்தின் காரணமாகவே அவ்வியக்கத்தில் தன்னை உறுப்பினராக்கிக் கொண்டார் நம் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள். உலக உத்தமர் காந்தியடிகளாரைப் பின்பற்றி அவர் நடக்கவும் இதுவே முக்கியக் காரணமாயிற்று.

பிற்காலம் பற்றிய அவருடைய கணிப்புகள் மிகச் சரியாக அமைந்ததைப் பல்வேறு சரித்திரச் சம்பவங்களின் மூலம் நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம்.

வருங்காலம் பற்றி ஐயாவால் முன்கூட்டியே வரையறுத்துக் கொள்ள முடிந்ததெனில், அவரைத் தலைமை தாங்கி வழி நடத்திய மகாத்மா காந்தியடிகளுக்கு அத்தகைய அறிவாற்றல் பரிபூரணமாக அமைந்திருந்தது தான் காரணமாகும்.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காகக் (1934) கோவை மாவட்டத்தில் மகாத்மா காந்தியடிகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த நேரம் அது. அண்ணல் நம் ஐயாவிடம் தேங்காய் வாங்கப் போனவன் கதையொன்றை—அப்போது ஒரு நாள் தமது கார்ப் பயணத்தின்போது சொன்னார். ஒருவன் தேங்காய் வாங்கி வருவதற்காகக் கடைக்குச் சென்றான். கடைக்காரர் "தேங்காயின் விலை ஒரு ரூபாய் என்றார். "மலிவாக எங்காவது கிடைக்காதா?" என்றான் வாங்கப் போனவன். "கொஞ்ச தூரம் சென்று அங்குள்ள மொத்த வியாபாரியிடம் வாங்கினால் எழுபத்தைந்து பைசாவுக்குக் கிடைக்கும்" என்றார் கடைக்காரர்.

அங்கே போயும், இவன் உடனே தேங்காய் வாங்கிவிடாமல் "இதைவிட சல்லிசாக எங்கே கிடைக்கும்?" என்று கேட்டான். "பக்கத்திலுள்ள தென்னந்தோப்புக்குப் போனால் ஐம்பது பைசாவுக்கு வாங்கமுடியும்" என்றான் மொத்தவியாபாரி. தேங்காய் வாங்க வந்தவன் அங்கே போனான். "ஐம்பது பைசாவுக்கும் குறைவான

விலைக்குத் தேங்காய் கிடைக்காதா?'' என்று அங்கும் கேட்டான். "நீங்களே மரத்தில் ஏறிப் பறித்துக் கொள்ளுவதானால் இருபத்தைந்து பைசாதான்'' என்றான், தென்னந்தோப்புக்காரன். இவனுக்கோ மரம் ஏறத் தெரியாது. இருந்தாலும் ஏதோ வேகத்தில் தென்னை மரத்தில் ஏறிய அவன், பாதியிலேயே கீழே விழுந்து இறந்து போனான்!''

காந்தியடிகள் சொன்ன இந்தக் கதையைக் கேட்டு "அடடா!'' என்று வருத்தத்தோடு சொல்லிவிட்டுச் சிரித்தார் அவினாசிலிங்கனார்.

''அவினாஷ்! இந்தக் கதையை ஏன் சொன்னேன் தெரியுமா? தேங்காய் வாங்கப் போனவனைப் போல சுலபமாக மக்களுக்கு நன்மை செய்வது எப்படி என்று வேகவேகமாகப் போய்க் கொண்டிருக்கிறேன் நான். ஆகவே என் முடிவும் அப்படித்தான்...அவன் முடிவைப்போல இருக்கப் போகிறது; எவனோ என்னைச் சுட்டுத்தள்ளப் போகிறான் அல்லது, என்னைப் பிடித்துத் தூக்கில் போடப் போகிறார்கள்!'' —என்று தீர்க்கமான குரலில் காந்தியடிகள் சொல்லவே அதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனார் நம் ஐயா அவர்கள்.

கண்கலங்கிப் போய், அண்ணல் காந்தியடிகளாரின் கைகளைப் பற்றிக் கொண்டு "ஐயா அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்'' என்றார் தழுதழுக்கும் குரலில்.

1947ல், இதே போல இன்னொரு சம்பவம் நடைபெற்றது. அப்போது பிர்லா மாளிகையில் மகாத்மா காந்தியடிகள் தங்கியிருந்தார். திடீரென்று ஒரு நாள் அந்தப் பகுதியில் குண்டு வெடிக்கும் சப்தம் பயங்கரமாகக் கேட்கவே, லேடி மவுண்ட் பேட்டன் பதறிக் கொண்டு மகாத்மா காந்தியடிகள் இருப்பிடத்திற்கு ஓடி வந்தார். தான் நினைத்ததுபோல மகாத்மாவுக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை என்பதை அறிந்ததும் "நல்ல வேளை! உங்களுக்கு ஒன்றும் ஆகிவிட வில்லையே?" என்று உருக்கத்தோடு கேட்டார்.

மகாத்மா காந்தியடிகள் அவரைப் பார்த்துப் புன்னகைத்துவிட்டுச் சொன்னார் "அம்மணி, இப்படிப்பட்ட பொதுச் சாவெல்லாம் எனக்கு வரவே வராது; வேண்டுமானால் நீங்கள் பாருங்களேன். எவனாவது ஒருவன் எதிரே வந்து நின்று என்னைச் சுடப்போகிறான்; நான் ராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே கீழே சாயப் போகிறேன். அப்படிப்பட்ட சாவுதான் எனக்கு வரும்;அதைத் தான் நானும் எதிர்பார்க்கிறேன்."

அண்ணல் அவர்கள் இதுபோல் கூறியதும் கதறியழுதேவிட்டார் லேடி மவுண்ட் பேட்டன். சுற்றி நின்ற அத்தனைப் பேர்களும் துயரமே வடிவானார்கள். ஆனால், காந்தியடிகளோ புன்னகை மாறாத முகத்துடனே அவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறியனுப்பினார்.

"எத்தனை நாள் வேண்டுமானாலும் சாப்பிடாமல்கூட என்னால் இருந்துவிட முடியும்; ஆனால் கடவுளைப் பிரார்த்திக்காமல் ஒரே ஒரு நாள்கூட இருக்க முடியாது" என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் இயல்பினரான மகாத்மா காந்தியடிகள், சிறந்த தீர்க்கதரிசியாகவே விளங்கினார். 1948 ஜனவரி 30-ஆம் தேதி, அவர் சொல்லிக் கொண்டிருந்தது போலவே கொடூர மரணம் சம்பவித்துவிட்டது. இச்செய்தி கேட்டு, அப்போது தமிழகத்தின் கல்வியமைச்சராக இருந்த நம் ஐயா அவர்கள் மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளானார்.

1934-ஆம் ஆண்டு மத்திய சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றிருந்தபோது, மகாத்மா காந்தியடிகளோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் நிறையக் கிடைத்தது அவருக்கு அவ்வப்போது அண்ணலைச் சந்தித்து ஆலோசனை பெற்றுக் கொண்டதும் உண்டு. ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் படேல் வினோபாபாவே, நீலம் சஞ்சீவ ரெட்டி போன்றோரும் அவருக்கு மிகவும் நெருக்கத்திலேயே இருந்து வந்தார்கள்.

பெரும்பாலான நாட்கள் அவர் டில்லியில் தங்க நேர்ந்ததால், முகமதலி ஜின்னா போன்றவர்களையும் சந்திக்க நேர்ந்தது. இந்து-முஸ்லிம் குழப்பம் விளைவித்து பாகிஸ்தானைத் தனி நாடாக்க அவர் விடாப்பிடியாக முயன்ற காலத்

தில், இவருடைய அணுகு முறை சரியல்ல என்பதையும் நம் அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இதுபற்றிய உரையாடல்களின்போது ஸ்ரீபிரகாசா அவர்களும் உடனிருந்ததுண்டு.

என்ன நடந்து என்ன? கடைசியாகப் பாகிஸ்தான் பிரிவினைக்கு உடன்படும்படி ஆகிவிட்டதில் எல்லோருக்கும் வருத்தம்தான். இந்துக்களும் முஸ்லிம்களும் கொண்டிருந்த சகோதரப் பாசம் அறுந்துவிட்டதல்லவா?

இந்தியா, 1947 ஆகஸ்ட் 15ல் விடுதலை பெற்றது. இந்தியாவெங்கும் உருவான மாகாணங்களில் அமைச்சரவைகள் அமைக்கப்பட்டன. முதன்முதல் வங்கத்தில அமைச்சரவை அமைக்கப்பட்டபோது சுதந்திர இந்தியாவை நிர்வகிக்க அமைச்சராகப் பொறுப்பேற்கிறவர்கள் எப்படியெல்லாம் இருக்கவேண்டும்— நடந்து கொள்ள வேண்டும் என்றெல்லாம் விளக்கி,மகாத்மா காந்தியடிகள் அப்போது தமது ''ஹரிஜன்'' என்ற ஆங்கில வார இதழில் ஒரு பெரும் கட்டுரையே எழுதினார்.

இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்ற ஜவஹர்லால் நேருவுக்கு அனுப்பிய வாழ்த்துக் கடிதத்தில்— ''என்னுடைய ஆசீர்வாதம் எப்போதும் தங்களுக்கு உண்டு. சரியானபடி மக்களுக்குச் சேவை செய்வதில் தங்கள் கடமைக்

காலம் இனிதே கழியட்டும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

1946ல், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. தி. சு. அவினாசிலிங்கம் அவர்கள், திரு. ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியார் அவர்களை முதலமைச்சராகக் கொண்டு அமைக்கப்பட்ட அமைச்சரவையில், தமிழ் நாட்டின் முதலாவது கல்வியமைச்சராக நியமிக்கப்பட்டார். நாடெங்குமுள்ள நல்லிதயங்களெல்லாம் நல்வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டன.

இப்படியெல்லாம் உயர்வு வந்த நேரத்தில் உள்ளத்தை சல்லடையாக்கும் விதத்தில் தேசப் பிதாவாம் அண்ணல் காந்தியடிகள் கொடியவன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று செய்திவந்தால் அதை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

மகாத்மா காந்திஜியின் அஸ்தி இந்தியாவிலுள்ள புனித ஸ்தலங்களிலெல்லாம், நதிகளிலெல்லாம் கரைக்கப்பட்டது. கங்கையும் யமுனையும் சங்கமிக்கும் பிரயாகையில் இந்தியப்பிரதமர் ஜவஹர்லால் நேரு, அண்ணலின் அஸ்தியைக் கரைத்தார். அஸ்திக் கலசம் சென்னை மாநகருக்குக்கொண்டு வரப்பட்டு மவுண்ட்ரோட்டில் உள்ள ராஜாஜி ஹாலில் வைக்கப்பட்டது. லட்சோப லட்சம் மக்கள் அதை உருக்கத்துடன் தரிசித்தார்கள்.

தமிழ் நாட்டில் இராமேஸ்வரத்திலும், காவிரி யிலும் அதைக் கரைப்பதென்று முடிவு செய்யப் பட்டது.

ஒரு அஸ்திக் கலசத்தைத் திரு. எம். பக்தவத் சலம் இராமேஸ்வரத்திற்கு எடுத்துச் சென்றார். இன்னொரு கலசம் எழிலுற அலங்கரிக்கப்பட்டு ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் ஆகியோரால் தனி ரயில் மூலம் திருச்சிராப்பள்ளிக்கு அண்ணல் காந்தி யடிகளின் அஸ்தி சகல மரியாதையோடும் கொண்டு செல்லப்பட்டது. மறுநாள் அதிகாலை யில் அங்குள்ள புனித காவிரியில் கலக்கப் பட்டது.

## 11. முதலாவது கல்வியமைச்சர்

> 'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்.

—என்ற திருக்குறள் மிக அற்புதமான ஒன்றாகும். ஒரு நல்ல காரியத்தை ஒருவனிடம் ஒப்படைக்கு முன்னால், அதைச் செம்மையுற நிறைவேற்றத் தக்க தகுதிகள் அவனிடம் என்னவெல்லாம் இருக்கின்றன என்பதை ஆராய வேண்டும்; அப்படி ஆராய்ந்து ஒப்படைக்கப்படும் பணிகள் ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்கள் போற்றத் தக்கதாகச் சிறப்புற அமையும என்பது, அக்குறளில் பொதிந்துள்ள அரிய பொருளாகும்.

அப்படியெல்லாம் ஆராய்ந்துதானோ என்னவோ, தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதலாவது அமைச்சரவையில், கண்போலும் கல்வித்துறை நமது ஐயா தி. சு அவினாசிலிங்கப் பெருந்தகையிடம் ஒப்படைக்கப்பட்டது.

தமிழ் நாட்டின் முதல் கல்வியமைச்சராக நியமிக்கப்பட்ட அவர் கல்வி பற்றிய சுவாமி விவேகானந்தரின் தத்துவங்களையெல்லாம் படித்துக் கரைகண்டவர். இந்திய மக்களிடையே எப்படியெல்லாம் கல்விப் பணி ஆற்ற வேண்டும்

என்று அவ்வப்போது மகாத்மா காந்தியடிகள் கூறிய நல்ல கருத்துகளையெல்லாம் ஆழ்ந்து கேட்டுணர்ந்தவர். இராமகிருஷ்ண வித்யாலயம் நடத்திப் பெருமை கொண்டவர். ஆகையால், கல்வித் துறைக்கு அமைச்சராக இருந்து சிறப்புறப் பணியாற்றுவதென்பது நம் ஐயா அவர்களுக்குச் சிக்கலான ஒன்றாக இருக்கவில்லை. மிக விரைவிலேயே கல்வித்துறை அவரால் ஆக்கமும் ஊக்கமும் பெற்றது. எல்லோரும் போற்றத்தக்க ஏற்றம் கொண்டது.

1949-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், தமிழகச் சட்டமன்றத்தில் ஆண்டு நிதிநிலை அறிக்கை வைக்கப்பட்டது. கல்வித்துறை மான்யத்தின்மீது அன்றைய தினம் ஐயா அவர்கள் வைத்த அறிக்கை, அவையிலிருந்த அத்தனைப் பேருமே புகழ்ந்து பாராட்டத்தக்க நுணுக்கங்களோடும் திட்ட மதிப்பீடுகளோடும் இருந்தது.

'I am moving the Demand for Education; I would like to say in brief a few words about our Educational Reorganisation schemes...'

—என்று கம்பீரமான குரலில் ஐயா அந்த அறிக்கை மீது பேசத் தொடங்கி முடிக்கிற வரையில், அவையிலிருந்த அத்தனை உறுப்பினர்களின் முகத்திலும் ஈயாடவில்லை, அவ்வளவு கவனமாக அதைக் கேட்டார்கள்.

அது மட்டுமல்ல; 1947—48 ஆம் ஆண்டுக்கான அரசின் கல்வித்துறை நிர்வாக அறிக்கை கூட, கல்வித்துறையில் அவினாசிலிங்கப் பெருந்தகைக்கு இருந்த அறிவு நுட்பத்தின் படப்பிடிப்பாகவே திகழ்ந்தது. அந்த அற்புதமான நிர்வாக அறிக்கையில் அடங்கியிருந்த முக்கிய அம்சங்கள் சிலவற்றைத் தொகுத்தளிப்பது நமது கடமை. ஏனென்றால் தமிழ்நாட்டில் கல்வி வளர்க்கும் பணியை முதன்முதல் முறைப்படி தொடங்கி வைத்த பெருமையாளர் அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களேயாவார்.

'எழுத்தறிவித்த இறைவனின் அந்த அறிக்கை மூலம் தமிழ்நாட்டு மாணவச் செல்வங்களும் ஆசிரியப் பெருமக்களும் அடைந்த பயன்கள் வருமாறு:

❋ அடிப்படைக் கல்வியின்போதே, சிறுவர்களுக்குக் கைத்தொழில் கற்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது; இதனால், எதிர்காலத்தில் தொழிற்கல்வி பெறுவதானது மாணவர்களுக்கு எளிதாக இருந்தது மாணவிகளுக்கும் இவ்வகையில் தனி வகுப்பு நடத்தப்பட்டு, பயிற்சி தரப்பட்டது.

❋ சாரணர் இயக்கம் உள்ளிட்ட குடிமைப் பயிற்சி வகுப்புமுறை பள்ளிகளில் அறிமுகம் செய்யப்பட்டது.

❋ பூகோளம், சரித்திரம் முதலானவற்றில் மாணவமணிகள் நல்ல தேர்ச்சிபெறும் பொருட்டு, சமூகநூல் வகுப்பு, பாடத் திட்டத்தில் தனியே சேர்க்கப்பட்டது.

அன்று சமர்ப்பிக்கப்பட்ட கல்வித் துறை மானியம், இப்படி மாணவ மாணவிகளுக்கு மட்டும் பயன் தருவதாக இல்லை; ஆசிரியர்களும் அதன்மூலம் சமூகத்தில் புதிய அந்தஸ்துக்கு உரியவர்களாக எப்படி உயர்த்தப்பட்டார்கள் என்பதைப் பார்ப்போம்:

❋ எல்லாத் தரப்பட்ட (*Categories*) ஆசிரியர்களின் சம்பள விகிதங்களும் அதிகரிக்கப்பட்டன.

❋ அரசு உதவிபெறும் பாடசாலைகளின் வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள் உயர்த்தப்பட்டன.

❋ ஆசிரியர்களின் சம்பள விகிதத்தில் இருந்த அகவிலைப்படி (*Dearness Allowance*) தொகை அளவு மிகுதியாக்கப்பட்டு, அவர்கள் பணிக் காலத்திலேயே மேல்படிப்புப் படிக்கவும் வசதி செய்து தரப்பட்டது.

❋ உயர்நிலைப்பள்ளிக்கான ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு— உள்ளாட்சிப் பள்ளிகளிலும், அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் வேலை வாய்ப்புகளில் 100க்கு 40 பேர் இளநிலைக்கல்வி

ஆய்வாளர் பதவிபெற வழிவகைகள் காணப் பட்டன.

❋ அரசு உதவிபெறும் பள்ளிக்கூடங்களில் பணிபுரியும் ஆசிரியப் பெரு மக்களுக்கும், செகண்டரி பள்ளிகளில் தரப்படும் அளவு சம்பளம் அளிக்கப்படவேண்டும் என்ற நிலை வந்தது. அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப் படும் அகவிலைப் படியைத் தனியார் பள்ளி ஆசிரியர்களும் பெற வகை செய்யப்பட்டது. உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அதிகாரிகளாகப் பதவி பெறும் வாய்ப்பும் உருவாக்கப்பட்டது.

❋ தமிழாசிரியர்களும் தலைமையாசிரியர் பதவிக்கு நியமிக்கப்படும் தகுதி பெற்றார்கள்.

❋ நூலகச் சட்டம் தமிழகஅரசின் பார்வைக்கு வைககப்பட்டு பெரும்பான்மை ஆதரவோடு நிறை வேற்றப்பட்டது; முதியோர் கல்விக்கு நூலகங் கள் துணை நிற்குமாறும் வழிமுறைகள் வகுக்கப் பட்டன. அரசு உதவிபெறும நூலகங்களின் எண்ணிக்கைகள் பெருக்கப்பட்டன.

❋ செகண்டரி கிரேடு ஆசிரியர்களும், அரசு உதவிபெறும பள்ளிகளின் ஆசிரியர்களுமாக 12 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் இளநிலைத் துணை ஆய்வாளர் அளவுக்கு, தமிழகத்திலேயே முதன்முதலாகப் பதவி அந்தஸ்து அளிக்கப் பெற்றனர்.

❋ அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கு உட்பட்டு, முதியோர் கல்வி முறை மூன்று கூறாகப் பிரித்து வலியுறுத்தப்பட்டது. முதியோர் கல்விக்கெனத் தனியே ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டார். அதற்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் தமிழ், நாட்டில் ஆறும், ஆந்திரத்தின் எல்லையில் ஆறும், கேரள எல்லையில் மூன்றும், கன்னட எல்லையில் மூன்றும் துவக்கப்பட்டன.

❋ மத்திய பொதுக்கல்வி இயக்ககத்தின் சார்பில் மத்திய திரைப்பட நூலகம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. இதன் மூலம் கிராமப்புற மக்கள் திரைக் காட்சி வழியே நாட்டு நடப்பை எளிதில் புரிந்து கொண்டார்கள்.

❋ தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் தேசிய மாணவர் படை அமைக்கும் திட்டம் உருவாகப் பட்டது. அதற்காக 21 முக்கிய யூனிட்டுகளும் 2 துணை யூனிட்டுகளும் அமைக்கப்பட்டு, நாடெங்கும் இருந்த முக்கியப பள்ளிகள் 35ல் தேசிய மாணவர் படை அமைப்பு நிறுவப் பட்டது.

❋ ஒருங்கிணைந்த தமிழ்நாடு அரசில் ஆஸ்தானக்கவிஞர் பதவி உருவாக்கப்பட்டது. முதலாவது ஆஸ்தானக் கவிஞராக தேசியக் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை நியமிக்கப்பட்டார். இதேபோல், கேரளத்தில் மகாகவி வள்ளத்தோல் நாராயணமேனன் நியமிக்கப்பட்டார்.

❋ லேடி வெலிங்டன் பயிற்சிக் கல்லூரி முதல்வரை ஆசிரியராகக் கொண்டு 'புதிய கல்வி' (*New Education*) என்ற பத்திரிகை நான்கு மாதங்களுக்கு ஒருமுறை கல்வித்துறையின் சார்பில் வெளியிடப்பட்டது. ஆசிரியர்களுக்கும், மாணாக்கர்க்கும் இது மிகவும் பயனுடையதாக இருந்தது.

❋ மாணாக்கர்களுக்கான பாடத்திட்டத்தில், ஆறாம் வகுப்புமுதல் திருக்குறள் பாடல்கள் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும் எனச் சட்டம் போடப்பட்டது.

❋ மகாகவி பாரதியாரின் எழுத்தோவியங்களை எல்லோரும் எந்தக் கட்டுப்பாடும் இன்றிக் கையாளலாம் என்ற வகையில் அவை தேசீயமயமாக்கப்பட்டன.

❋ ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இணையாகத் தமிழ் கற்பிக்கும் தமிழாசிரியர்களுக்கும் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்ற திட்டம் அமல்படுத்தப்பட்டது.

❋ சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கும் மற்ற மொழிகளுக்கும் பேராசிரியர் பதவிகள் உருவாக்கப்பட்டன.

❋ எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடமொழியாக அந்தந்த மாநில மொழியே

வைக்கப்பட வேண்டும் என முறைப்படுத்தப் பட்டது.

❋ பிரஞ்சுமொழி கலைக் களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ள சிறப்பான வழிமுறைகளின்படியே தமிழ்மொழிக்கும், தெலுங்கு மொழிக்கும் கலைக் களஞ்சியங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற திட்டத்திற்கு முதலாவதாக வழிகோலப்பட்டது. 'குழந்தைகள் கலைக் களஞ்சிய'மும் முதன் முதலாக வெளியிடபபட்டது

❋ தமிழ்நாடெங்கும் மகளிர் கல்வி மேம்பாடடைந்தது.

—ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள் தமிழ்நாட்டின் முதலாவது கல்வியமைச்சராகப் பொறுப்பேற்றபின் தமிழும், தமிழனும், தமிழகமும் அவர் பொறுப்பிலிருந்த கல்வித்துறையால் பெற்ற பலன்கள் இவ்வாறாக அளவற்றவைகளாகும்.

உலகப் பொதுமறையாம் திருக்குறளை ஆய்வு செய்ய நம் ஐயா அவர்கள் அமைத்த ஆய்வுக்குழு பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. 'தமிழ் முனிவர் எனப் படும் கி. வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமையிலான அக் குழுவின் திருக்குறள் ஆய்வுகள், 1020 பக்கங்கள் கொண்ட ஆய்வு நூலாக சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழா நாளில் (1963) வெளியிடப்பட்டது.

மகாத்மா காந்தியடிகளின் மறைவுக்குப் பின் அவர் பெயரில் அறக் கட்டளைகள் பல நிறுவப் பட்டன. அப்படித் தமிழ்நாட்டில் நிறுவப்பட்ட 'காந்தி நினைவு நிதி' அமைப்பின் செயலாளராகத் திரு. என். எம். ஆர். சுப்பராமன் நியமிக்கப் பட்டிருந்தார். நம் ஐயா அவர்களின் அரிய ஆலோசனைப்படி, அந்த அமைப்பின் சார்பில் மகாத்மா காந்தியடிகளின் எழுத்தோவியங்கள்—சொற்பொழிவுகள் யாவும் 17 தொகுதிகளாகத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டன.

இதற்காகத் திரு. என். எம். ஆர். சுப்பராமன் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில்—திரு. கு. காமராசர், திரு. ஏ. வேதரத்தினம், திரு. சி. சுப்பிரமணியம், திரு. மா. ப. பெரிய சாமித்தூரன், திரு. எம். அருணாசலம், திரு. ஆர். வினாயகம், திரு. எல். என். கோபாலசாமி, திரு. என். இராமசாமி ஆகியோர் உறுப்பினர் களாக இருந்தார்கள். திரு. கோ. வெங்கடாசலபதி அக்குழுவின் செயலாளராக இருந்து, அந்தப் பணி சிறக்க உதவினார்.

## 12. கலைக் களஞ்சியம்

" அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'

—வள்ளுவர் வாய்மொழி

யான இதன்மூலம் முயற்சியின் உயர்வு எத்தகையதென்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

எந்த ஒரு கடினமான காரியமாயினும் சரி; "இதை நம்மால் எப்படிச் செய்யமுடியும' என்று மலைத்து விடக்கூடாது; தளர்ச்சியடைந்து விடலாகாது. 'எப்படியும் நம்மால் அதை வெற்றி கரமாகச் செய்து முடித்துவிட இயலும்' என்று அயராத முயற்சியோடு முனைவோமானால், அதைச் சிறப்பாகச் செய்து முடித்த பெருமை நம்மைச் சேரும் என்கிறார் உலகப் பொது மறையை உருவாக்கித் தந்த அந்த உயர்ந்த மனிதர்.

நம் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களின் வாழ்வு வளம் பெற்றதும், நலம் பெற்றதும், பலம் பெற்றதும் அத்தகைய விடா முயற்சியின் காரணமாகத்தான்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கொள்கையுடையவரான ஐயா அவர்கள் தமக்குத்

திருமணம் முடித்துக் கொள்ளவில்லை. இன்று வரை பிரம்மச்சரியத்தையே தீவிரமாகக் கடைப் பிடித்து வருகிறார். இல்வாழ்வு நல்வாழ் வானாலும், அதைத் தொடங்கினால் வீட்டு நலத்தைக் கவனிக்கவேண்டி நேரும்; அதனால் நாட்டு நலத்தின் மீதான கவனம் பாதிக்கப்படக் கூடும் என்பதே அதற்கு முக்கியக் காரணம். அதனால்தான், இராமாயணத்தில் அரியது செய்து முடித்த பிரம்மச்சாரியாம் அனுமனைப் போல அவராலும் பெரிய பெரிய காரியங்களை யெல்லாம் எளிதாகச் செய்து பெருமை பெற முடிந்தது என்றே கூறலாம்.

குறிப்பாக-தாயாம் தமிழ்நலம் காக்க அவர் மிகுந்த சிரமத்தோடு துணிந்து வலிய எடுத்துக் கொண்டு வெற்றிகண்ட முயற்சிகள் ஏராள மாகும்.

அவினாசிலிங்கப் பெருந்தகையின் அரிய முயற்சியால் அப்போது, அவரது ஆட்சிக் காலததில் தோற்றுவிக்கப்பட்டதுதான் இப்போ துள்ள 'தமிழ் வளர்ச்சிக் கழகம்.'' 1946 டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்டு, ஆங்கிலத்தில் '*Tamil Academy*' என்று குறிப்பிடப்பட்ட அந்த அமைப்பானது 1861-ஆம ஆண்டைய 'ரிஜிஸ்ட் ரேஷன் சட்டப்படி' பதிவு செய்யப்பட்டது ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகையே அந்த அமைப் பினுடைய முதலாவது தலைவர் ஆவார்.

திரு. சி. ஆர். சீனிவாசன், திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் இருவரும் 'தமிழ் வளர்ச்சிக் கழகத்'தின் துணைத் தலைவர்களாக இருந்தனர். திரு. 'கல்கி' ஆர். கிருஷ்ணமூர்த்தி செயலாளராகவும், திரு. எஸ். ஆர். எம். சி டி. அண்ணாமலைச் செட்டியார் பொருளாளராகவும் அதில் பதவி வகித்தார்கள். திரு. என். எம். ஆர் சுப்பராமன், திரு. எம். பக்தவச்சலம், சர் நார் ஏ. வேதரத்தினம் பிள்ளை, திரு. சி. சுப்பிரமணியம், திரு. எஸ். இராமசாமி நாயுடு, திரு. சா. கணேசன், திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார், திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திரு. டி. எஸ். திருமூர்த்தி ஆகியோர் அக்குழுவின் உறுப்பினர்களாக இருந்தனர்.

திரு. எம். ஏ. முத்தையா செட்டியார், திரு. ஓ பி. இராமசாமி ரெட்டியார் இருவரும், அறங்காவலர்களாக இருந்து தமிழ் வளர்ச்சிக் கழகத்தைப் பாதுகாத்தனர். சில நாளில் நடத்தப் பட்ட தேர்தலின்படி திரு. சி. சுப்பிரமணியம் துணைத்தலைவராகவும், திரு. கே. சுவாமிநாதன் செயலாளராகவும், திரு. மா. ப. பெரியசாமித் தூரன் மற்றொரு செயலாளராகவும் தேர்ந்தெடுக் கப்பட்டனர்.

தமிழில் வெளியிடப்படும் இலக்கியம், அறிவியல், பொருளாதாரம், கலை, பண்பாடு, கதை, கவிதை நூல்களில் சிறந்த நூல்களுக்கு, ஆண்டுதோறும் தமிழ்வளர்ச்சிக் கழகத்தின்

மூலம் பரிசு வழங்கும் முறை அமல்படுத்தப் பட்டது. தமிழர்களுக்கான விழாக்கள் நாடெங்கும் அக் கழகத்தால் சிறப்பாக நடத்தப் பட்டன.

மதுரை, திருவாரூர், கோயம்புத்தூர் சென்னை, டில்லி மற்றும் இலங்கை ஆகிய இடங்களில், நம் ஐயா கண்ட தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் கிளைகள் செம்மையுறச் செயல் பட்டன. செந்தமிழ் வளர்த்தன. தமிழர்நலம் காத்தன.

அவினாசிலிங்கப்பெருந்தகை அவர்கள் முன்பு சிறையிலிருந்த காலத்தில், தமிழில் ஒரு அரும்பொருட் கலைக் களஞ்சியம் உருவாக்க வேண்டும் என்று எழுந்த எண்ணம், அவர் தமிழ் நாட்டின் கல்வியமைச்சராக இருந்த காலத்தில் செயல் வடிவம் பெற்றது. ஒரு சொல்—அதற்கான பொருள் என்ற அளவில் வெளியிடப்படும் சாதாரணமான அகராதிபோல் இல்லாமல், சொல்லும் காரண காரியங்கள் கொண்ட அதன் பொருளும் தவிர—முக்கியச் சொல்லின் அடிப்படையிலான சிறிய கட்டுரை, புகைப்படங்கள். விளக்கப் படங்கள், தேசப்படங்கள் அவசியமானால் வண்ணப்படங்கள் உடையதாகவும் அந்தக் கலைக் களஞ்சியம் உருவாக வேண்டும், அறிவியல், தொழில், நவீன உலகம் தொடர்பான; அருஞ்சொற்களையும் உருவாக்கி அதில் இடம் பெறச் செய்ய வேண்டும்; பகுதி பகுதியாகப்

பத்துத் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பது ஐயா அவர்களின் பெருவிருப்பமாகும்.

உன்னதமான இந்த ஏற்பாட்டை முழுக்க முழுக்க அரசின் மூலமே செய்துவிட முடியும் என்று தோன்றவில்லை. தமிழ்ப் பெருமக்கள், தமிழ்நாடு அரசு, மத்திய அரசு பேருதவிகளின் மூலமே தமிழ்க் கலைக்களஞ்சியத்தை இணையற்றதாக உருவாக்கமுடியும் என்று ஐயா அவர்கள் நினைத்தார். 'தமிழ் வளர்ச்சிக் கழகத்'தின் துணையோடு அந்தப் பணியை நிறைவேற்றுவது என்று முடிவாயிற்று.

தீர்மானித்தபடி அப்படியொரு கலைக்களஞ்சியத்தை உருவாக்குவதென்றால் 18 இலட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று திட்ட மதிப்பீடு போடப்பட்டது. அப்போதெல்லாம் ஆண்டு வரவு செலவுத் திட்டமே ஏறத்தாழ அறுபது கோடி ரூபாய் என்ற அளவில்தான் இருந்தது. ஆகையால், அதில் பெருந்தொகையை இத் திட்டத்திற்காக அரசே ஒதுக்குவது சாத்தியப்படவில்லை. அதனால்தான் அந்த மிகப் பெரிய சாதனையைச் செய்து முடிக்கத் தமிழ் வளர்ச்சிக் கழகமே பொறுப்பேற்றுக் கொண்டது.

அந்த அற்புதப் பணி 1948-ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத் திருநாளன்று துவக்கப் பட்டது. தமிழ் மொழியின் வளர்ச்சி அடிப்படை

யிலான கலைக் களஞ்சியம் உருவாக்குவதன் நோக்கம் - பெரும் பொருளாதாரத் தேவை ஆகியவை பற்றி விளக்கி, அவினாசிலிங்கப் பெருந்தகை, அறிக்கையொன்று வெளியிட்டார். தமிழ் கூறும் நல்லுலகில் அதற்கு நல்ல வரவேற் பிருந்தது. உடனடிப் பலனும் தெரிந்தது.

அந்த உன்னதப் பணிக்கு ஊக்கமளிக்கும் வகையில்-தருமபுரி திருவாவடுதுறை— திருப்ப னந்தாள் மடாதிபதிகள் தலா 10 ஆயிரம் ரூபாய் அனுப்பி வைத்தனர். ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ஒரு கணிசமான தொகையை அனுப்பி னார். இரண்டு மாதத்திலேயே இப்படி வந்த மொத்தத் தொகை ஒன்றரை இலட்சம் ரூபாய் ஆகும். இதனால் ஏற்பட்ட ஊக்கத் தோடு, ஒருங்கிணைந்த தமிழ்நாடு அரசிடமும் மத்திய அரசிடமும தமிழ் வளர்ச்சிக் சமூகம் உதவிக் கரம் நீட்டியது.

அந்த முயற்சி வீணாகிவிடவில்லை. பத்துத் தொகுதிகளாக உருவாக்கப்படவிருந்த அந்தக் கலைக் களஞ்சியத்திற்கு, தொகுதி ஒன்றுக்கு ரூ. 5 லட்சம் என்று தவணை முறையில் தருவ தாகத் தமிழ்நாடு அரசு உறுதியளித்தது. மத்திய அரசில் அப்போது திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் நிதியமைச்சராக இருந்தது வசதி யாகப் போயிற்று. மத்திய அரசு மூன்று இலட்சம் ரூபாய் தருவதாக வாக்களித்தது.

முயற்சியை முழுவேகத்தில் தொடங்க இது போதாதா? அதற்கடுத்த விஜயதசமி நாளன்றே தமிழ்க் கலைக் களஞ்சியத் தொகுப்புப் பணிக்கு முறைப்படி விழா நடத்தப்பட்டது. ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள் தலைமை யில் நடைபெற்ற அவ்விழாவில், அப்போது சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருந்த டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள், கலைக்களஞ்சிய உருவாக்கத்திற்கான உயரிய பணியைத் தொடங்கி வைத்தார்

கலைக் களஞ்சியப் பணிக்கு அமைக்கப்பட்ட குழுவின் இணையாசிரியராகத் திரு திரிகூட சுந்தரம் பிள்ளையும் நாளடைவில் நியமிக்கப் பட்டார். ஆனாலும் அக்குழுவின் முதன்மை ஆசிரியராகத் திரு. மா. ப. பெரியசாமித்தூரனே இருந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

கலைக் களஞ்சியத்தில் அறிவியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம் தொடர்பான சொற்கள் பற்றி ஆராய்ந்து தொகுப்பதற்காகத் திரு. ஏ. இலட்சுமணசாமி முதலியார் தலைமையில் ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டது. திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அதில் முக்கியமானவ ராக இருந்து திருப்திகரமாகச் செயல்பட்டார்.

கலைக்களஞ்சியத்தில் பல முக்கியச் சொற் களை விளக்கத் தனித்தனி சிறு கட்டுரைகள் எழுத வேண்டியிருந்தது. அதற்காக அவ்வத் துறை

களில் தேர்ச்சிமிக்க பலரிடமும் கட்டுரைகள் கோரிப் பெறப்பட்டன. அப்படி எழுதித் தந்தவர் களுக்கு ஒரு பக்கத்திற்கு ரூ. 25 என்று அன்பளிப்புத் தொகை தரப்பட்டது. அந்தந்தத் தொகுப்பில் அவ்வாறு சிறப்புக் கட்டுரை எழுதி வழங்கிய ஆசிரியர்களின் பெயர்களும் சேர்க்கப் பட்டன.

கலைக்களஞ்சிய உருவாக்க முயற்சிக்காகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தனி அலுவலக அறை ஒன்றே ஒதுக்கித் தரப்பட்டது.

திரு. ஆர். எம். அழகப்பச் செட்டியார், திரு. டி. எஸ். எஸ். ராஜன், திருமதி. எம். இலக்குமியம்மாள், டாக்டர் ராஜம்மாள் பி. தேவ தாஸ், டாக்டர் எஸ். ஜி. மணவாள ராமானுஜம், திரு. ஆர். என். செல்வம, டாக்டர் டி. எஸ், சதாசிவம், திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வரதராசன், டாக்டர் பி. நடராஜன், திரு. டி. என். சேஷாத்திரி போன்றவர்களும் கூட தம்முடைய முழு ஒத்துழைப்பையும், நம் ஐயா அவர்கள் உருவாக்க முயன்ற தமிழ்க் கலைக் களஞ்சியப் பணி மேம்படப் பயன் கருதாது வழங்கினார்கள்.

இதுபோன்ற ஓய்வு ஒழிவற்ற உழைப்பின் காரணமாக ஏழாண்டுக் காலத்திற்குப் பின்னால், 1954ல் கலைக் களஞ்சியத்தின் முதலாவது தொகுப்புப் பணி முற்றுப் பெற்றது. அதன்மூலம்

ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக மற்ற தொகுதிகளை உருவாக்க அந்த அளவுக்குச் சிரமப்படவேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஆண்டுக்கொரு கலைக் களஞ்சியத் தொகுதி வெளியிடப்பட்டது. 1963ல் 9வது தொகுதியும் -அதன் பிறகு அரசியலில் ஏற்பட்ட சில சிக்கல் களைக் கடந்து 1968ல் பத்தாவது கலைக் களஞ்சியத் தொகுதியும் இணைப்புகளுடன் இணையற்ற வகையில் வெளியிடப்பட்டது.

மத்திய சட்ட மன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது-டில்லி புத்தகக் கடைகளில், அயல் மொழிகளில் அழகுற வெளியிடப்பட்டிருந்த குழந்தைகளுக்கான கலைக்களஞ்சியம் பார்த்த நினைவுகள், ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களின் நெஞ்சில் புதுப்பிக்கப்பட்டன. 'தமிழில் நாமும் ஏன் அதேபோலொரு சிறுவர் கலைக் களஞ்சியத்தை உருவாக்கக்கூடாது' என்றொரு எண்ணம் வலிவோடு எழுந்தது. அதன் பலனாக மிக விரைவிலேயே ஐயா அவர் களின் முழு முயற்சி காரணமாகக் 'குழந்தைகள் கலைக் களஞ்சியமும்' பொலிவோடு வெளியிடப் பட்டது. குறிப்பாகச் சிறுவர் சிறுமியருக்கானது என்பதால், அதில் 50 சதவிகிதம் படங்களே இடம் பெறச் செய்ய வேண்டியிருந்தது. இதுவும் 10 தொகுதிகளாகவே வெளியிடப்பட்டது முதல் தொகுதி 1968லும், பத்தாவது தொகுதி 1975லும் வெளியாயிற்று. 750 பக்கங்களோடு. பயன்

கருதாமலே ஒவ்வொரு தொகுதியும் தயாரிக்கப்பட்டது.

இதற்கான தயாரிப்புக் குழுவும் கூட நம் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களின் தலைமையிலேயே இயங்கியது. திரு. சி சுப்பிரமணியம், திரு. என். டி. சுந்தரவடிவேலு ஆகியோர் துணைத் தலைவர்களாக இருந்தார்கள். திரு. மா. ப. பெரியசாமித்தூரன் அக்குழுவின் செயலாளராகவும் முதன்மை ஆசிரியராகவும் இருந்து முழுமூச்சுடன் பாடுபட்டார். பட்ட பாட்டுக்கு நல்ல பலன் கண்டுவிட்ட நிம்மதி ஐயா அவர்களுக்கு ஏற்பட்டது. 'குழந்தைகள் கலைக் களஞ்சியம்' பெரியவர்களாலும் வரவேற்கப்பட்டது.

இவ்வாறாக அன்னைத் தமிழின் ஏற்றம் கருதி, அயராது பாடுபட்ட பெருமை நம் ஐயா அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்களுக்கு உண்டு. தாய் மண்ணாம் தமிழ் மண்ணில் பிறந்தவர்களெல்லாம் கற்றறிவாளர்களாக வாழ வேண்டும்; வளர வேண்டும் என்ற ஆர்வம் அந்தக் காலத்தில் மட்டுமல்ல 85-ஆம் வயதை எட்டிய இந்தக் காலத்திலும் இளமை மாறாமல் அவரிடம் இருப்பதை நாம் காணலாம். தேயாத தெய்வ பக்தியும், துவளாத தொண்டுள்ளமும், தமிழகத்தில் அறிவுச்சுடர் ஏற்ற அன்றாடம் பாடுபடும் தளராத உறுதிமிக்க உள்ளமும் உடைய ஐயா தி. சு. அவினாசிலிங்கப் பெருந்தகை அவர்கள்

புகழ் தமிழ் உள்ளவரை தழைத்தோங்கும் என்பது திண்ணம். 'வளமும், நலமும், பலமும் பெற்று வாழ்க பல்லாண்டு' என நாமும் அவரை வாழ்த்துவோம்!

## ஐயா அவர்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க ஆண்டுகள்

1903 மே மாதம் 5 ஆம் தேதியன்று திருப்பூர் திரு. கே. சுப்பிரமணியம் செட்டியார்—பழனியம்மாள் தம்பதியர்க்கு மகனாகப் பிறப்பு.

1920 சென்னையில் படித்துக் கொண்டிருந்த போது மகாத்மா காந்தியடிகளை முதன் முதலாகப் பார்த்தல்.

1928 அன்னையார் திருமதி பழனியம்மாள் மறைவு.

1930 பிப்ரவரி 2ஆம் தேதி சிறிய அளவில் ஸ்ரீ இராமகிருஷ்ணவித்யாலயம் துவக்குதல்—வலங்குளத்தில், உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டதன் காரணமாகக் கைது செய்யப்படுதல்.

கோவை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

1932 ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்று கைது செய்யப்படுதல்.

1933 விடுதலை அடைதல்.

1934 பிப்ரவரி 7 ஆம் தேதி, ஸ்ரீ இராமகிருஷ்ண வித்யாலயம் முக்கியக் கட்டடத்திற்கு அண்ணல் காந்தியடிகள் அடிக்கல் நாட்டுதல்.

தந்தையார் திரு. கே. சுப்பிரமணியம் செட்டியார் மறைவு.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காகக் கோவை மாவட்டத்திற்கு வருகை தந்த மகாத்மா காந்தியடிகளோடு சுற்றுப் பயணத்தில் ஒருவாரகாலம் கலந்து கொள்ளுதல்.

1935 மத்திய சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

ஜனவரி 7 ஆம் தேதி, ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன், தமது கிளைப் பள்ளிகளின் முக்கிய மையமாக, ஐயா அவர்களின் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்யாலயத்தை அங்கீகரித்தல்.

1941 தனிநபர் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டு சிறை செல்லல்.

1942 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் கலந்துகொண்டதால் கைது செய்யப் படுதல்.

1946 சென்னை ராஜதானியின் உறுப்பினர் ஆதல். கல்வியமைச்சராக நியமிக்கப் படுதல்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் நிறுவுதல்.

1948 அண்ணல் காந்தியடிகளின் அஸ்தியை திருச்சிராப்பள்ளிக்கு எடுத்துச் சென்று புனித காவிரியில் கரைத்தல்.

1951 பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்வு.

1957 மகளிர் கல்விக்கென உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் ஸ்ரீ அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியாக மலருதல்; சுயாட்சி பெற்ற அமைப்பாக இயங்கலாம் என அதனைச் சென்னைப் பல்கலைக் கழகம் அனுமதித்தல்.

1963 சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவில் 'திருக்குறள் ஆய்வு நூல்' வெளி படுதல்—

ராஜ்ய சபை உறுப்பினராகத்தேர்வு

1970 'பத்ம பூஷன்' விருது பெறுதல்.


1974 'நேரு லெட்டிரஸி அவார்டு' வழங்கப் படுதல்.

1978 'செந்தமிழ்ச் செல்வர்' பட்டம் அளிக்கப்படுதல்.

1981 ஸ்ரீ அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரியின் வெள்ளி விழா.

1983 மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' பட்டமளித்தல்.

1984 தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் 'டாக்டர் ஆஃப் சயின்ஸ்'பட்டம் வழங்குதல்.




ஐயா
அவினாசிலிங்கப்
பெருந்தகை
அவர்கள்...

சிருங்கேரிமடம் ஸ்ரீலஸ்ரீ
சங்கராச்சாரியாருடன்...




'ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்யால
யத்'திற்கு அடிக்கல் நாட்டும்
அண்ணல் காந்தியடிகளுடன்...




இந்தியாவின் முதலாவது குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்துடன்...



இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனுடன்...



'நேரு இலக்கியப் பரிசு' வழங்கும் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேனுடன்...



'பத்ம பூஷன்' விருது வழங்கும், இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் வி. வி. கிரியுடன்...



இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்
டாக்டர் ஃபக்ருதீன் அலி அகமதுவுடன்...



இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. என். சஞ்சீவரெட்டியுடன்...



இந்தியக் குடியரசுத் தலைவர்
திரு. ஆர். வெங்கட்ராமனுடன்...



இந்தியாவின் முதலாவது பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு, சி. சுப்பிரமணியம் ஆகி-யோருடன் ...




இந்தியாவின் முன்னாள் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரியுடன்...



இந்தியாவின் முன்னாள் பிரதமர்
திருமதி இந்திரா காந்தியுடன்...




பெருந்தலைவர், கர்மவீரர்
கு. காமராஜருடன்...



'செந்தமிழ்ச் செல்வர்' விருது வழங்கும் முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சருடன்...



தமிழ்வளர்ச்சி உயர்நிலைக் குழுத்
தலைவர் — சிலம்புச் செல்வர்
டாக்டர் ம. பொ. சி. யுடன் ...



ஸ்ரீ அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி இயக்குநர் டாக்டர் திருமதி ராஜம்மாள் தேவதாசுடன்...

ஐயா அவிநாசிலிங்கப் பெருந்தகை அவர்களுடன், இந்த நூலின் ஆசிரியர், தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. என். கிருஷ்ணபாரதி ஐ. ஏ. எஸ்.



பூங்கொடி பதிப்பகம்

மேலட்டை அச்சிட்டோர் :
பூங்கொடி அச்சகம்